## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

## ஒன்பதாவது பாராளுமன்றம்
## (மூன்றாவது கூட்டத்தொடர்)

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 59**

# அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின்
# மூன்றாவது அறிக்கை
# (2022.09.07 தொடக்கம் 2023.01.20 வரையான)

**பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் தவிசாளர்**
**கௌரவ அஜித் ராஜபக்ஷ**
**அவர்களால்**

**2024 மே மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.**

அங்கீகாரம் கிடைக்கப்பெற்றமையின் அடிப்படையில் மாதாந்த அறிக்கையில் உள்வாங்கப்பட்ட குழுக்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| **தொடர் இலக்கம்** | **அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர்** | **திகதி** |
|---|---|---|
| 01. | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.16 |
| 02. | கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.21 |
| 03. | வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.10.21 |
| 04. | கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.16 |
| 05. | பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.25 |

அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையின் காரணமாக மாதாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படாத குழுக்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பெயர் | திகதி |
|---|---|---|
| 01. | தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.07 |
| 02. | வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.16 |
| 03. | துறைமுகங்கள்,கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.20 |
| 04. | கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.20 |
| 05. | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.22 |
| 06. | பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.09.23 |
| 07. | மின்சக்தி மற்றும் வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.10.04 |
| 08. | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.10.04 |
| 09. | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.10.18 |
| 10. | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.10.20 |
| 11. | பொதுமக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.10.20 |
| 12. | பொதுநிர்வாக, உள்நட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.08 |
| 13. | கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.08 |
| 14. | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.08 |
| 15. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.10 |
| 16. | வெளிநாட்டலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.10 |
| 17. | முதலீட்டு மேம்பாடு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.15 |
| 18. | வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.15 |

| | | |
|---|---|---|
| 19. | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.16 |
| 20. | நீர் வழங்கல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.17 |
| 21. | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.21 |
| 22. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.22 |
| 23. | விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.22 |
| 24. | நீர்ப்பாசன அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.23 |
| 25. | சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.23 |
| 26. | பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.24 |
| 27. | கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.29 |
| 28. | சுற்றுலாத்துறை மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.30 |
| 29. | தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.11.30 |
| 30. | வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.12.05 |
| 31. | சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.12.06 |
| 32. | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2022.12.13 |
| 33. | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2023.01.05 |
| 34. | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2023.01.17 |
| 35. | பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2023.01.19 |
| 36. | கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு | 2023.01.20 |

**அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் பணியாட்டொகுதி**

- திரு. சுதத் பெரேரா, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) – குழுவின் செயலாளர்
- திரு. சாந்த பர்னாந்து, பிரதான உத்தியோகத்தர்
- திருமதி. சியாமா அல்விஸ், பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- திருமதி. ஓஷிலா வீரகோன், பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி. கோசலா பிரியதர்ஷனி, உதவிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி. உதேசிக்கா தத்சரணி வீரசிறி, பாராளுமன்ற உத்தியோகத்தர்
- திருமதி. எஸ். ஏ. உத்பலா ரன்மிணி முத்துகுமார, பாராளுமன்ற உத்தியோகத்தர்
- திருமதி. ருக்மணிதேவி, சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர்

**அமைச்சுச் செயலாளர்கள்**

- ஜெனரால் கமல் குணரத்ன (ஓய்வுநிலை) – பாதுகாப்பு அமைச்சு
- திரு. கே. எம். மஹிந்த சிறிவர்தன – நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
- பேராசிரியர் என். டி. குணவர்தன – தொழில்நுட்ப அமைச்சு
- திரு. நீல் பண்டார ஹப்புஹின்ன – மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு
- கே. டீ. எஸ். ருவன்சந்திர – துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு
- திரு. கே. எம். மஹிந்த சிறிவர்தன – முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு
- திரு. எம். எம். பீ. கே. மாயாதுன்ன – அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- திருமதி. ஆர். எம். ஐ. ரத்னாயக்க - கடற்றொழில் அமைச்சு
- திரு. எம். என். ரணசிங்க – கல்வி அமைச்சு
- திரு. டபிள்யூ. ஆர். டபிள்யூ. பேமசிறி – போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
- திரு. வீ.பீ. கே. அனுஷ பெல்பிட்ட - வெகுசன ஊடக அமைச்சு
- திரு. ஜனக்க எஸ். சந்திரகுப்த – சுகாதார அமைச்சு
- திரு. என். பீ. எம். ரணதுங்க – நீர் வழங்கல் அமைச்சு
- திரு. எம். பீ. ஆர். புஷ்ப குமார – கமத்தொழில் அமைச்சு
- திருமதி. ஆர். எம். சீ. எம். ஹேரத் – வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் அமைச்சு
- திருமதி. வசந்தா பெரேரா – நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு
- திரு. டபிள்யூ. ஏ. சூலானந்த பெரேரா – சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
- திரு. ஜானக்க தர்மகீர்த்தி - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
- திருமதி. ஜே. எம். டீ. ஜயசுந்தர – கைத்தொழில் அமைச்சு
- திரு.டபிள்யூ. எஸ். சத்தியானந்த – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
- திருமதி. ஏ. வை. விஜேவர்தன - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
- திரு. சோமரத்ன விதானபத்திரண – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
- திரு. எம்.பீ. டீ. யூ. கே. மாப்பா பத்திரண – மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு
- டாக்டர் அனில் ஜாசிங்க – சுற்றாடல் அமைச்சு
- நிபுணத்துவ மருத்துவர் அமல் ஹர்ஷ டி சில்வா – விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு
- திரு. யூ. டீ. சீ. ஜயலால் – நீர்ப்பாசன அமைச்சு
- திரு. ஆர். பீ. ஏ. விமலவீர - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
- திரு. எஸ். ஹெட்டியாரச்சி - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
- திரு. எஸ். டீ. கொடிகார – வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு முதலாவது கூட்டம் – 2022 செத்தெம்பர் 16

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்**

கௌரவ(கலாநிதி) பந்துல குணவர்தன (தவிசாளர்)
கௌரவ லசந்த அலகியவன்ன (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ சிறிபால கம்லத் (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ திலும் அமுனுகம
கௌரவ கனக ஹேரத்

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ
கௌரவ குமார வெல்கம
கௌரவ மொஹமட் முஸம்மில்
கௌரவ எஸ். எம். மரிக்கார்
கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர
கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன
கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி
கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ (சட்டத்தரணி)மதுர விதானகே
கௌரவ யதாமிணீ குணவர்தன

### 1. ஒழுங்குவிதிகள் மற்றும் அறிக்கைகளை ஆராய்தல்

### 1.1 ஒழுங்குவிதிகளை ஆராய்தல்

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச்சு மாதம் 31 ஆம் திகதிய **2273/76** ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் (2022.08.29 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.)

2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதமளவில் நாட்டில் காணப்பட்ட நிலைமையானது போக்குவரத்து நடவடிக்கைகள் மீது ஏற்படுத்திய தாக்கம் காரணமாக சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலப்பகுதியை நீட்டிப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வர்த்தமானப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அதேவேளை, சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான அட்டைகளை இறக்குமதி செய்வது தொடர்பில் சிக்கல் நிலைமை காணப்படுவதால் சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலப்பகுதியை நீட்டிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டதாக கௌரவ திலும் அமுனுகம அவர்கள் குழுவில் தெரிவித்தார்கள்.

ஆராயப்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளுக்கு இணக்கம்

தெரிவித்ததோடு அது தொடர்பான குழுவின் அறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானித்தது.

## 1.2 வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்

**1.2.1** 2020 ஆம் ஆண்டிற்கான அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை ஆராயப்பட்டதைத் தொடர்ந்து, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, பாராளுமன்றத்தால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மேற்குறித்த வருடாந்த அறிக்கைக்கு இணக்கத்தைத் தெரிவித்ததோடு அது தொடர்பான குழுவின் அறிக்கை, குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன அவர்களால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானித்தது.

## 2. அமைச்சின் அலுவல்கள் பற்றிய கருத்தாய்வு

**2.1** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் தற்போதைய நிலைமை

### 2.1.1 புகையிரதத் திணைக்களம்

புகையிரதத் திணைக்களத்தினால் தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்ற புகையிரத எஞ்சின்கள் பல வருடங்கள் பழைமைவாய்ந்தவை என்பதால் தண்டவாளங்களின் மோசமான நிலைமை காரணமாக புகையிரதங்களின் வேக எல்லையைக் குறைக்குமாறு முன்னெச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக புகையிரதப் பயணத்திற்குத் தேவையான உராய்வு நீக்கி எண்ணையைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் காணப்படுவதாகவும் கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

இன்றளவில் புகையிரதத் திணைக்களத்தில் இடம்பெறுகின்ற நட்டத்தைக் குறைப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இதன் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வரும் குழுக்கூட்டத்தில் விடயங்களை முன்வைப்பதாகவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

புகையிரதத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் அதன் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் சிரமம் காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இத் திணைக்களத்திற்குரிய பிரதான வருமான வழியாக புகையிரத நுழைவுச்சீட்டுக் கட்டணம் காணப்படுவதாகவும் கௌரவ அமைச்சரின் தலையீட்டில் அண்மையில் இக்கட்டணத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதன் மூலம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாமல் இருப்பதுடன் உராய்வு நீக்கி எண்ணெயின் அதிக விலையும் இது தொடர்பில் தாக்கம் செலுத்துவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த வருட வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டின் மூலமாக புகையிரதப் பாதைகளைப் பராமரித்தல் மற்றும் அவற்றை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில புகையிரதப் பாதைகளின் பகுதிகளை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் புகையிரதங்களின் வினைத்திறனை மேம்படுத்தும் கருத்திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் கீழ் 10,000 தண்டவாளங்களைக் கொள்வனவு செய்தல், புகையிரதங்களுக்கான மேலதிக உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்தல், கோட்டை புகையிரத நிலையத்தை அபிவிருத்தி செய்தல், புகையிரத ஓட்டத்திற்குத் தேவையான தொடர்பாடல் முறையியலொன்றை நடைமுறைப்படுத்தல், நுழைவுச்சீட்டுக்களை வழங்குவதை இலத்திரனியல் முறையில் மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

### 2.1.2 இலங்கை போக்குவரத்துச் சபை

இந்நிறுவனம் மிகவும் பழைமையான முறைகளைப் பின்பற்றி வருவதாகவும் நிதி முகாமைத்துவத்தை புதிய தொழில்நுட்பத்துக்கு மாற்றுவது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இங்கு காணப்படுகின்ற பழைமையான முறைகளின் காரணமாக சரியான புள்ளிவிபர அடிப்படையிலான பகுப்பாய்வொன்றை மேற்கொள்வது கடினம் என்பதால் புகையிரதத் திணைக்களம் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை தொடர்பில் தடையவியல் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்துகளுக்கு உதிரிப் பாகங்கள் மற்றும் டயர்களைக் கொள்வனவு செய்கையில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகவும் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் புதிதாக 500 பேருந்துகளைக் கொள்வனவு செய்தல் எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மெற்கொள்வதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அதேபோன்று புதிதாக 80 பேருந்துகளைக் கொள்வனவு செய்து பாடசாலை போக்குவரத்துச் சேவையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

மாக்கும்புர பல்நோக்குப் போக்குவரத்துச் சேவை நிலையத்தைப் போன்று கடவத்தை பேருந்து நிலையத்தையும் அபிவிருத்தி செய்யுமாறு கௌரவ போக்குவரத்து இராஜாங்க அமைச்சரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று உலக வங்கியின் உடன்படிக்கையின் கீழ் கண்டி பல்தொழிற்பாட்டு போக்குவரத்துச் சேவை நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

### 2.1.3 தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறையை மீளவும் கவனத்திற் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்கும் வரையில் தற்போது காணப்படுகின்ற அனுமதிப்பத்திரம் வழங்கும் போட்டித்தன்மையுடனான முறையைப் பின்பற்றி வருவதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

### 2.1.4 மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் காணப்பட்டதாகவும் இதற்குக் காரணமாக அமைந்த நீண்டகால பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளாக பல்வேறு நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டு இருந்ததாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இதன்போது இத்திணைக்களத்தின் நடவடிக்கைகளை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜில்மயப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வது பொருத்தமானதாகுமென ஏற்றுக்கொண்டமையால் அதற்கமைவாக ஈ மோட்டரின் (E-Motoring) கருத்திட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளதாகவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதையடுத்து நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தை வேரஹேரயில் தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட போதிலும் தற்போது காணப்படுகின்ற நிதி நெருக்கடி நிலைமை காரணமாக இதன் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்தியுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்

இதன் காரணமாக இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தாமதமடைவதைத் தடுப்பதற்காக அரச மதிப்பீட்டாளரிடம் வாடகை அடிப்படையில் மிகவும் வசதியான இடத்தில் இத்திணைக்களத்தை அமைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று இவ்வருடம் நிறைவடைவதற்கு முன்னராக ஈ மோட்டரின் (E-Motoring) கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிறுவனங்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கௌரவ தவிசாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் காணப்படுகின்ற நிதி நெருக்கடி நிலைமை காரணமாக வேறு இடங்களுக்குச் செல்லாது தற்போது திணைக்களம் காணப்படுகின்ற இடத்திலேயே அதனை நடாத்திச் செல்லுதல் தொடர்பாக கௌரவ குமார வெல்கம அவர்கள் வினவினார்.

தற்போது மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் செயற்படும் நாராஹேன்பிட்டி கட்டிடத் தொகுதியில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் இல்லையென தவிசாளர் தெரிவித்தார்.

புதிய கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 15,000 சதுர அடி அளவான இட வசதி தேவைப்படுவதாகவும் அதனை வழங்கியவுடன் புதிய கருத்திட்டத்தை ஆரம்பிக்க முடியுமெனவும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்தார்.

தற்போது காணப்படுகின்ற மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்ய முடியாதென்பதால் அதற்கான அங்கீகாரத்தை வழங்கக்கூடிய வகையில் சட்டத்தைத் திருத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

அதற்கமைவாக இம்மாதம் நிறைவடைவதற்கு முன்னராக உரிய திருத்தங்களை உள்ளடக்கி சட்டத்தைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்தார்.

மேலும் இன்றளவில் உள்நாட்டு உற்பத்தியாளர்களால் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி வாகனங்களுக்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விவரக் குறிப்புகளை தயாரிப்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இவ்வாகனங்களுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சூரிய சக்தியைப் பயன்படுத்துவதுடன் வேறு மின்னுற்பத்தி உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக குறித்த உற்பத்தியாளர்கள் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பிரதேச ரீதியாக குறிப்பிட்ட சில கம்பனிகள் மின்னேற்றும் நிலையங்களை நிறுவுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் தற்போதைய நிலைமையினை மேம்படுத்துவதற்காக புதியதொரு செயன்முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் புதிய ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் வருடத்தில் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் முன்னெடுக்க உத்தேசிக்கும் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையினை எதிர்வரும் குழுக் கூட்டத்தில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துக்குத் தெரிவித்தார்.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் கீழ் ஈ-மோட்டரின் (E-Motoring) கருத்திட்டம் மற்றும் ஆர்.எவ்.ஐ.டீ. (Radio Frequency Identification - RFID) தொழில்நுட்பத்தின் கீழ் வாகன இலக்க தகட்டினை வழங்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அமைச்சின் கீழ் காணப்படும் சகல நிறுவனங்களினதும் தற்போதைய நிலைமை மற்றும் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலான சுருக்க அறிக்கையினை எதிர்வரும் குழுக் கூட்டத்தில் முன்வைக்குமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

## 3. ஏனைய விடயங்கள்

### 3.1 கௌரவ (சட்டத்தரணி) மதுர விதானகே அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்

#### 3.1.1 உள்நாட்டு மோட்டார் வாகன உற்பத்தியை ஊக்குவித்தல்

இது தொடர்பில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானது எனவும், இதற்கு முன்னர் இத்தகைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு தனியார் நிறுவனத்துக்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திடமிருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவில்லை எனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இத்தகைய விடயங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க திணைக்களத்துக்குள்ளேயே இதற்காக தனியானதொரு அலகினையும் பிரதானியொருவரையும் நியமிப்பது உகந்ததென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினரால் முன்வைக்கப்படும் தகவல்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னதாக இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.1.2. வீதி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதனால் ஏற்படும் பாதிப்புக்கள்

வீதி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ள நிலையில், இதற்காகப் பயன்படுத்தப்பட்ட இயந்திர சாதனங்கள் அந்த இடங்களிலேயே காணப்படுதல் மற்றும் சில இடங்களில் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமையினால் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக மக்களுக்கு ஆபத்து நேரக் கூடுமென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

அபிவிருத்திக் கருத்திட்டங்களில் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் ரூ.100 மில்லியனுக்கு அதிகமான கொடுப்பனவினை வழங்க வேண்டிய தரப்பினர்களுக்கு வட்டிக் கொடுப்பனவு அடிப்படையில் முறியினை வழங்குவதற்கும், ரூ.100 மில்லியனுக்கு குறைவான கொடுப்பனவினை வழங்க வேண்டிய தரப்பினர்களுக்கு இந்த வருடத்தினுள் கொடுப்பனவினை வழங்குவதற்கும் எதிர்பார்ப்பதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.1.3 உள்ளூராட்சி நிறுவனங்களின் வீதி அபிவிருத்திக்கு வாய்ப்பு வழங்குதல்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சில வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனினும், இன்றளவில் வெளியிடப்பட்டுள்ள ஒரு சுற்றறிக்கை காரணமாக இந்த நடவடிக்கைகளையேனும் மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படாமையினால், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

### 3.1.4 எம் 11 என்ஜினை இறக்குமதி செய்வது தொடர்பிலான தொழில்நுட்ப அறிக்கை

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் எம் 11 என்ஜினை இறக்குமதி செய்வதற்கான தொழில்நுட்ப அறிக்கையினை குழுவுக்கு முன்வைக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

## 3.2 இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் புகையிரதத் திணைக்களத்துக்கு உரித்தான பயன்படுத்தப்படாதுள்ள காணிகளை முதலீட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல். - கௌரவ அசங்க நவரத்தன

பிரதான வீதிகளை அண்மித்ததாக இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான, அதிகூடிய வர்த்தகப் பெறுமதியினைக் கொண்ட காணிகள் காணப்படுவதன் காரணமாக பிரதேச மட்டத்தில் இக்காணிகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வர்த்தகர்களுக்கு வாய்ப்பினை வழங்குமாறு கோரியுள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

சில பிரதேசங்களில் புகையிரதத் திணைக்களத்துக்கு சொந்தமாகக் காணப்படும் காணிகளில் பல்வேறு ஆட்கள் சட்டவிரோதமாக குடியேறியுள்ளதாகவும், அண்மையில் குறிப்பிட்ட பிரதேசங்களைக் கண்காணித்து அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகைப் பணத்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

மேலும், சில காணிகளை குறைந்த குத்தகையில் புகையிரத திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்டு அதிகூடிய விலையில் துணை குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால், இது குறித்து கவனம் செலுத்துமாறு கௌரவ (சட்டத்தரணி) மதுர விதானகே கோரிக்கை விடுத்தார்.

காணப்படும் முறையியலில் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வது சிரமமாகக் காணப்படுவதனால், பொதுவாக இத்தகைய நடவடிக்கைகளில் தலையிடுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய காணிகளைச் சுவீகரித்து வணிக பெறுமதியுடைய காணிகளை வணிக செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் கம்பனியொன்றை அமைப்பதற்கும் புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளிலிருந்து குத்தகையினை அறவிடுவதற்குமான இரண்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களை கௌரவ தவிசாளர் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பில் கலந்துரையாடியதன் பின்னர், செலவு முகாமைத்துவ குழுவினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம், புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான சகல காணிகளையும் அடையாளம் கண்டு அவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பிலான வேலைத்திட்டத்தை தயார் செய்து அமைச்சரவைக்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மேலும், இன்றளவில் புகையிரதத் திணைக்களத்தினால் ஈட்டப்படும் வருமானம் போதியதாக அமையாமையினால், இந்த வருமானத்தை அதிகரிப்பதற்கான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 3.3 கௌரவ யதாமிணீ குணவர்தன அவர்கள்

### 3.3.1 கொஸ்கம - எகொடஹா பிரதேசத்திலிருந்து புகையிரதத்தை ஆரம்பித்தல்

களனிவெளி புகையிரதப் பாதையில் முற்பகலில் பயணிக்கும், கஹஹேனவில் சேவையை ஆரம்பிக்கும் புகையிரதத்தை கொஸ்கமவிலிருந்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில், இதற்கு அண்மித்த பிரதேசங்களில வாழும் மக்களுக்கு பாரிய சேவைகள் கிடைக்கப் பெறுவதனால், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

தற்போது களனிவெளி புகையிரத பாதையில் கொஸ்கமை முதல் ஹோமாகம வரையிலான புகையிரதப் பாதையில் ஒரு புகையிரதம் பயணித்ததன் பின்னர் 28 நிமிடங்கள் கடக்கும் வரையில் சமிக்ஞைகளில் காணப்படும் பிரச்சினை காரணமாக மற்றுமொரு புகையிரத்துக்கு உட்பிரவேசிப்பதற்கான இயலுமை இல்லையெனவும், இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர், 8 நிமிடங்களுக்கு ஒரு தடவை புகையிரதப் பயணங்களை மேற்கொள்ளக் கூடியவாறு சமிக்ஞை முறையை மாற்றுவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.
புகையிரதப் பயணத்தின்போது *வக* மற்றும் *பாதுக்கைக்கு* இடையில் 25 நிமிட நேர பயண இடைவெளி உள்ளதாகவும், ஒரு மாத காலப்பகுதியில் இதனை 12 நிமிடங்களாக மாற்ற முடியுமெனவும் புகையிரதத் திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளர் ( சமிக்ஞை மற்றும் மின்) தெரிவித்தார்.

மேலும், இந்த வருடத்தினுள் இதனை 6 நிமிடங்களாக குறைக்க முடியுமெனவும், இதனுடன் இணைந்ததாக இதற்கு அருகில் கொழும்பை நோக்கிப் பயணிக்கும் புகையிரதத்தின் பயண இடைவெளி சுமார் 8நிமிடங்களாக இருக்க முடியுமெனவும் தலைமைப் பொறியியலாளர் ( சமிக்ஞை மற்றும் மின்) தெரிவித்தார்.

அவிசாவளை - கொஸ்கமவிலிருந்து ஆரம்பிக்கும் புகையிரதத்துக்கு மேலதிகமாக வக, லபுகம மற்றும் கலட்டுவாவவிலிருந்து வருகை தரும் பயணிகளுக்காக அலுவலக புகையிரதமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும், சமிக்ஞை முறையை தயார் செய்ததன் பின்னர், புதிய புகையிரதமொன்றை போக்குவரத்தில் ஈடுபடுத்த முடியுமெனவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

அதுவரையில் தற்போது பயணிக்கும் புகையிரதப் பயணத்தின் இறுதி செல்லிடமான கொஸ்கம வரையில் போக்குவரத்தில் ஈடுபடுத்தி, மீண்டும் வந்து வகவில் நிறுத்தி ஆரம்பிப்பதற்கு முடியுமென்பதனால், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கியதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

அண்மையில் கொண்டு வரப்பட்ட புகையிரதத்தை போக்குவரத்தில் ஈடுபடுத்த முடியாமல் அகற்றியுள்ளமை தொடர்பில் கௌரவ குமார வெல்கம வினவினார்.

இது உண்மையல்ல எனவும், அண்மையில் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் 160 புகையிரதப் பெட்டிகள் கொண்டுவரப்பட்டு தற்போது இதில் 120 பெட்டிகள் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இக்கடன் திட்டத்தின் கீழ் எம் 11 என 10 என்ஜின்கள் கொண்டுவரப்பட்டு, இதில் 7 பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் புகையிரதத் திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளர் ( இயந்திரவியல்) தெரிவித்தார்.

அண்மையில் புகையிரதத் திணைக்களமானது புகையிரதப் பாதைகளை நவீனமயப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், புகையிரத என்ஜின் மற்றும் கூடங்களின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளர் ( இயந்திரவியல்) மேலும் தெரிவித்தார்.

தற்போது புகையிரதப் பாதைகள் மேம்படுத்தப்பட்டுள்ளமையினால், அவற்றுக்கு ஏற்றாற்போன்று புகையிரதப் பெட்டிகள் மற்றும் என்ஜின்கள் கொண்டுவரப்படுகின்றபோதிலும், புகையிரதப் பாதையின் சில இடங்கள் பழைய நிலைமையிலேயே காணப்படுவதன் காரணமாக அந்த இடங்களில் வேக எல்லையைக் குறைத்து புகையிரதப் பயணத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாக திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளர் ( இயந்திரவியல்) தெரிவித்தார்.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகள் மற்றும் எம் 11 என்ஜின்கள் கொண்டுவரப்பட்ட நாள் முதலான முழுமையான அறிக்கையினை எதிர்வரும் குழுக் கூட்டத்தில் முன்வைக்குமாறு கௌரவ (சட்டத்தரணி) மதுர விதானகே தெரிவித்தார்.

### 3.3.2 அவிசாவளை மற்றும் புவக்பிட்டியவுக்கு இடையிலான பிரதேசத்தின் ஊடாக அமைக்கப்பட்டுள்ள புகையிரதப் பாதையானது நான்கு இடங்களில் நெடுஞ்சாலைக்கு குறுக்காக பயணித்தல்

அவிசாவளை மற்றும் புவக்பிட்டியவுக்கு இடையிலான பிரதேசத்தின் ஊடாக அமைந்துள்ள புகையிரதப் பாதையானது, நான்கு இடங்களில் நெடுஞ்சாலையின் குறுக்காக செல்வதனால், நெடுஞ்சாலையின் போக்குவரத்துகள் இடைநிறுத்தப்படுவதாகவும், இதற்கு மேலதிகமாக இந்த இடங்களில்

புகையிரதத்தின் வேகத்தை குறைக்க வேண்டி ஏற்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

முக்கியமாக, நெடுஞ்சாலையில் போக்குவரத்து இடைநிறுத்துப்படுவதன் காரணமாக இப்பிரதேசத்தில் பொது மற்றும் முக்கிய பல இடங்களின் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுவதனாலும், எரிபொருள் மற்றும் காலம் வீண்விரயமாவதனாலும், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

இந் நிலைமைக்கான ஒரு தீர்வாக கடைப்பிடிக்க எதிர்பார்க்கும் செயன்முறையுடன் தொடர்புடைய காணிக் கொள்ளல் நடவடிக்கைகளை முதலாவதாக மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.3.3. பொதுமக்களின் தேவைக்கேற்ப வசதிகளை வழங்குவதில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலையீடு.

கொழும்பு நகருக்குள் நுழையும் பொதுப்போக்குவரத்து பஸ் வண்டிகள் குறிப்பாக காலை நேரத்தில் ஏராளமாக பயணிகளை ஏற்றி வருவதன் காரணமாக; கொழும்புப் பிரதேச பயணிகளுக்கு குறிப்பிட்ட பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிட்டுவதில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

நகர மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவது கொழும்பு மாநகர சபையின் பொறுப்பாக காணப்படுவதுடன், இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு காணப்படுவதனால், பொதுமக்களின் தேவையினை அடையாளம் கண்டு, தேவையான வசதிகளை வழங்குவது தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறு கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

## 3.4 கௌரவ குமார வெல்கம அவர்கள்

### 3.4.1 லங்கா அசோக் லேலண்ட் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பஸ் வண்டிகளை பாடசாலை பஸ் போக்குவரத்தில் ஈடுபடுத்துதல்

இன்றைக்கு சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னதாக அசோக் லேலண்ட் கம்பனியினால் கொண்டு வரப்பட்டுள்ள பஸ் வண்டிகளை பாடசாலை பஸ் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதை, குறிப்பிட்ட தொழில்நுட்பக் குழு அங்கீகரிக்காமை தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

2017ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்த பஸ் வண்டிகளை தாம் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அவதானிக்கையில், இந்த பஸ் வண்டிகள் சிறுவர்களுக்கான விசேட பாதுகாப்பு செயன்முறைக்கு அமைய சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக தயார் செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இக்கம்பனியுடன் கலந்தாலோசிக்கையில், குறிப்பிட்ட பஸ் வண்டிகள் கொண்டுவரப்பட்ட காலத்தில் காணப்பட்ட அந்நியச் செலாவணி விகிதத்தில் பஸ் வண்டிகளை வழங்க முடியுமென்றும், போக்குவரத்தில் ஈடுபடுத்தி மாதமொன்றுக்கு ரூ.3,000/- வீதம் 4 வருடங்களுக்கு செலுத்த முடியுமெனவும், கம்பனி அறிவித்தாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.
இதன் பிரகாரம், 80 பஸ் வண்டிகளை பாடசாலை பஸ் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறு கோரி முன்வைக்கப்பட்டுள்ள

அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

ஆயினும், இலங்கை போக்குரவத்துச் சபை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவானது, இந்த பஸ் வண்டிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு அமைவாக இல்லையென சுட்டிக்காட்டியவாறு, இப்பிரேரணையை நிராகரித்துள்ளமையினால் பிறிதொரு கம்பனியின் கீழ் பெற்றுக்கொண்டு இந்த பஸ் வண்டிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

உரிய தொழில்நுட்பக் குழு அறிக்கையினை கிடைக்கப்பெறச் செய்யுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 3.4.2 இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை.

இலங்க போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளில் நாளொன்றுக்கு பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

பொதுவாக சுமார் 4700 பஸ் வண்டிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் (இயக்கம்) தெரிவித்தார்.

டயர் மற்றும் பெற்றரிகள் இல்லாமல் சுமார் 800 பஸ் வண்டிகள் காணப்பட்டதாகவும், அமைச்சரவையின் விசேட அங்கீகாரத்தைப் பெற்று குறிப்பிட்ட பஸ் வண்டிகளை பயணத்தில் ஈடுபடுத்தியதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, டயர் விளிம்புகளின் அளவு 22.5 அங்குலத்தைக் கொண்டுள்ள டியூப் அற்ற டயர்களைக் கொண்டுள்ள பஸ் வண்டிகளுக்கான டயர்களை பெற்றுக்கொள்வதில் சிக்கல் காணப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் ( இயக்கம்) தெரிவித்தார்.

## 3.5 கடுவளை தேர்தல் தொகுதியில் பொதுப்போக்குவரத்தினை மேம்படுத்துதல் - கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கடுவளை தேர்தல் தொகுதியில் சில கிராமிய பாதைகளில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த சில பஸ் வண்டிகள் தற்போது போக்குவரத்தில் ஈடுபடாமை மற்றும் ஊழியர் பற்றாக்குறை தொடர்பில் இதற்கு முன்னர் அறிவித்துள்ளமையினால், இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கௌரவ உறுப்பினர் வினவினார்.

ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் காணப்பட்டபோதிலும், புதிய ஆட்சேர்ப்புக்களுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதால், இதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை கோரியுள்ளதாகவும், இது கிடைக்கப்பெற்றதன் பின்னர் நேர்முகப்பரீட்சையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

இத்தடவை ஆட்சேர்ப்புக்களை கொழும்பு, கம்பஹ மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்து மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை பஸ் வண்டிகளை பயணத்தில் ஈடுபடுத்துகின்றபோது கடுவளை தேர்தல் தொகுதிக்கு முன்னுரிமை வழங்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

## 3.6 கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ அவர்கள்

### 3.6.1 தாரளுவ புகையிரத நிலையத்தில் காணப்படும் அபாய நிலைமை

வேயன்கொடவிலிருந்து தாரளுவ வரையிலான புகையிரதப் பாதையில் தாரளுவ புகையிரத நிலையத்தில் புகையிரதம் சாய்வதால் புகையிரத நிலையத்தின் பயணிகள் மேடைக்கும் புகையிரதத்துக்கும் இடையில் பாரியதொரு இடைவெளி ஏற்படுவதாகவும், இந்நிலைமை காரணமாக பயணிகள் விபத்துக்களுக்கு ஆளாகியுள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இது தொடர்பில் இதற்கு முன்னர் பல தடவைகளில் அறிவித்துள்ளபோதிலும், இந்த இடத்துக்கு விஜயம் செய்து பார்வையிடக்கூடவில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

உரிய உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் அவதானித்து அறிக்கையொன்றை முன்வைத்துள்ளதாக புகையிரத திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளர் (இயக்கவலு) தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்தில் குறிப்பிட்ட இடத்தை அவதானிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளர் புகையிரதத் திணைக்களத்தின் தலைமைப் பொறியியலாளருக்கு (இயக்கவலு) ஆலோசனை வழங்கினார்.

### 3.6.2 அத்தனகல்ல பிரதேசத்தில் பொதுப்போக்குவரத்தை மேம்படுத்துதல்

அத்தனகல்ல பிரதேசத்தில் பொதுப்போக்குவரத்து சிறந்த மட்டத்தில் காணப்படவில்லை என்பதால், இதன் மீது கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கையினை முன்வைத்தார்.

### 3.6.3 நிட்டபுவ டிப்போவுக்குச் சொந்தமான வெற்றுக் காணியை பயனுறுதிமிக்க செயற்பாட்டுக்காக பயன்படுத்துதல்

நிட்டபுவ டிப்போவுக்குச் சொந்தமான அதிக பெறுமதி கொண்ட காணியை பயனுறுதிமிக்க செயற்பாட்டில் ஈடுபடுத்துவது உகந்ததென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

### 3.6.4 அத்தனகல்ல தேர்தல் தொகுதிக்கு நீர் வழங்குகையில் வீதிகளை உடைத்து சேதமேற்படுத்துதல்

நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையானது அத்தனகல்ல தேர்தல் தொகுதிக்கு நீர் வசதிகளை வழங்குகையில் அதிகளவிலான வீதிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளமை காரணமாக மக்களுக்கு அதில் பயணிப்பதற்கான இயலுமை இல்லையெனவும், மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

நீர் வசதிகளை வழங்குகையில் மீண்டும் வீதிகளை புனரமைப்பது தொடர்பில் நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ள மதிப்பீடானது பழைய

விகிதங்களைக் கொண்டுள்ளமையினால், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு இராஜாங்க அமைச்சர் கௌரவ லசந்த அலகியவன்ன தெரிவித்தார்.

நீர் இணைப்புகளை வழங்குகையில் நீர் வழங்கல் சபைக்கு அனுமதியின்றி வீதிகளை சேதப்படுத்த முடியாதெனவும், இதற்காக அவர்கள் வைப்புத் தொகையொன்றை வைப்புச் செய்ய வேண்டுமெனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

ஆயினும், நீரின் தேவையை சுட்டிக் காட்டியவாறு அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது நீர் வழங்கல் சபையானது வீதிகளை உடைத்துவருவதாகவும், நீர் வழங்கல் சபையானது முறையாக செயற்பாடுகளை மேற்கொள்ளாமையினால், அனைத்து மதிப்பீடுகளையும் தயார் செய்து நிட்டம்புவையிலிருந்து ஹங்வெல்ல வரையிலான வீதியில் புனரமைப்புப் பணிகளை ஐரோட் (iRoad) கருத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இன்றளவில் ஐரோட் (iRoad) கருத்திட்டத்துக்கான புதிய ஒப்பந்தம் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையானது இது தொடர்பில் செயற்பட வேண்டிய விதம் குறித்து அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்ததென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.6.5 அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ள ஐரோட் ( iRoad ) கருத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்

அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் சுமார் 25 வீதிகளை நிர்மாணிப்பது தொடர்பில் ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள ஐரோட் ( iRoad ) கருத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டை மாத்திரம் பயன்படுத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடியவாறு விடயப்பரப்பினை தயார் செய்வது உகந்ததென இராஜாங்க அமைச்சர் கௌரவ லசந்த அலகியவன்ன தெரிவித்தார்.

மேல் மாகாணத்தினுள் ஐரோட் (iRoad) கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றபோதிலும், இது மந்தகதியில் முன்னெடுக்கப்படுவதாக, ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும், நிட்டம்புவையிலிருந்து ஊராபொல வரையிலான வீதி ஐரோட் ( iRoad ) கருத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லை எனவும் கருத்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

### 3.6.6 ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி கருத்திட்டங்களின்போது ஒப்பந்ததாரர்கள் முறையாக செயற்படாமை

ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் சில ஒப்பந்ததாரர்கள் முறையாக செயற்படாமையினால், அவர்கள் மீது கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளர் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

**3.7 செவிப்புலனற்றோருக்கு இலகு வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் - இராஜாங்க அமைச்சர் கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள்-**

இந்நாட்டு செவிப்புலனற்றோருக்கு இலகு வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயன்முறையின் பெரும்பகுதி தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் குழுவொன்றை அமைத்து அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ லசந்த அலகியவன்ன தெரிவித்தார்.

முதலாவதாக சுமார் 50 பேருக்கான முன்னோடிக் கருத்திட்டமொன்றை மேற்கொண்டு இதன் பெறுபேறுகளுக்கு அமைய, சட்டரீதியாக இந்நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்பது இதன் விதப்புரையாக அமைந்துள்ளதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் கௌரவ லசந்த அலகியவன்ன மேலும் தெரிவித்தார்.

செவிப்புலனற்றோர் சங்கங்களினால் முன்வைக்கப்படும் பிரேரணைகளுக்கு அமைய தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிபுணத்துவ வைத்தியர்களின் தலையீட்டிலும் வேறு நாடுகளில் இது தொடர்பிலான நடவடிக்கைகளை அவதானித்து இதன் ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கௌரவ திலும் அமுனுகம தெரிவித்தார்.

இக்கோரிக்கை மிகவும் நியாயமானதொரு கோரிக்கை என்பதனால், முன்னோடிக் கருத்திட்டத்துக்கான அங்கீகாரத்தை வழங்கி, அதனை நடைமுறைப்படுத்துவது உகந்ததென தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

இன்றளவில், வாகனம் செலுத்தும் செவிப்புலனற்ற ஆட்களுக்காக முன்னோடித் திட்டத்தை செயற்படுத்துமாறு கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புடன் மேற்படி ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கௌரவ உறுப்பினர் குழுவில் தெரிவித்தார்.

**4.** குழு பி.ப 5.00 மணிக்கு திகதி காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------

**கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**முதலாவது கூட்டம் – 2022 செப்தம்பர் 21**

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்**

கௌரவ டக்ளஸ் தேவானந்தா (தவிசாளர்)
கௌரவ பியல் நிசாந்த த சில்வா (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்
கௌரவ டீ. வீரசிங்க

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ சஜித் பிரேமதாச
கௌரவ சனத் நிசாந்த
கௌரவ (சட்டத்தரணி)சந்திம வீரக்கொடி
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ ஹேஷா விதானகே
கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன
கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய
கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ
கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

**1. ஒழுங்கு விதிகள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்**

**1.1 ஒழுங்கு விதிகளை ஆராய்தல்**

**1.1.1 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் சட்டத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆந் திகதிய 2255/22 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.**
(2022 செப்தம்பர் 06 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

**1.1.2 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் சட்டத்தின் 64 ஆவது பிரிவின் (அ) பந்தியோடு சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 07 ஆந் திகதிய 2266/6 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.**
(2022 செப்தம்பர் 06 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

**1.1.3 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் சட்டத்தின் 61 ஆவது பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2022 ஏப்பிறல் 25 ஆந் திகதிய 2277/4 ஆம் இலக்க அதி விஷேட வர்த்மானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.**
(2022 செப்தம்பர் 06 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.)

**1.2 வருடாந்த அறிக்கைகளை ஆராய்தல்**

**1.2.1** 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை

**1.2.2** 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கைகள்

**1.2.3** 2016 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றத்தின் வருடாந்த அறிக்கை

**1.2.4** 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்.

**1.2.5** 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை

பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் வருடாந்த அறிக்கைகள் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி ஒழுங்கு விதிகள் மற்றும் அறிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்த குழு அது தொடர்பான அறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானித்தது.

## 2. ஏனைய விடயங்கள்

### 2.1 கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்கள்

#### 2.1.1 அரச நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் தாமதமடைதல்

அநேகமான அரச நிறுவனங்கள் வருடாந்த அறிக்கைகளை தாமதித்து சமர்ப்பிக்கும் காரணத்தினால் வருடாந்த அறிக்கைகளை ஆய்வு செய்யவோ அல்லது பின் ஆய்வு செய்வதற்கோ வாய்ப்பில்லாமல் போவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்கும் நடவடிக்கையினை நிறுவனங்களின் பிரதான பணியாகவுள்ளதால் வருடாந்த அறிக்கைகளை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

சமர்ப்பிக்கப்படாத அறிக்கைகள் இற்றைப்படுத்தப்பட்டு வருவதாகவும், இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னதாக சகல வருடங்களுக்குமான வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் குழுவிற்கு அறிவித்தார்.

#### 2.1.2 மீன்பிடி படகுகளுக்கு எரிபொருள் வழங்குதல்

ஏற்றுமதிக்கான மீன்களை கொண்டு வரும் மீன்பிடி படகுகளுக்கு எரிபொருள் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படாத காரணத்தினால், அதன் பொருட்டு உரிய வேலைத்திட்டமொன்றைத் தயாரித்துத் தர வேண்டுமெனவும் அன்றாடம் மோட்டார் சைக்கிள்கள் மூலம் மீன் விற்பனை செய்கின்ற ஆட்களுக்கு

வழங்கப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் காரணமாக அவர்களும் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ள காரணத்தினால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமெனவும் கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

தென் மாகாணத்தில் அன்றாடம் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற மீன்பிடிப் படகுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதில் பிரச்சினை காணப்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

ஒரு சில மீன்பிடி துறைமுகங்களுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், இன்றளவில் முன்னரை விடவும் கூடுதல் எரிபொருள் கடற்றொழில் துறைமுகங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் பாவிக்கும் 27000 ஒரு நாள் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மண்ணெண்ணெயில் இயங்கும் ஒரு நாள் படகுகள் அதிகளவில் காணப்படுவதாக கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.

அன்றாடம் தேவைப்படும் எரிபொருள், மண்ணெண்ணெய் தேவைப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் அவற்றுக்கு அனுப்ப வேண்டிய மண்ணெண்ணெயின் அளவு தொடர்பான விபரங்கள் அன்றாடம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிப்பதாகவும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால குழுவில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இன்றளவில் மீன்பிடிப் படகுகளுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கப்படுவதாகவும், அன்றாட மீன் வர்த்தகத்தில் ஈடுபடும் மோட்டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் வழங்கப்படுவதில்லை எனவும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகததினால் குழுவில் மேலதிகமாகவும் தெரிவிக்கப்பட்டது.

இன்றளவில் டீசல் தொடர்பான பிரச்சினைகள் பேருவளை மற்றும் குடாவெல்ல கடற்றொழில் துறைமுகங்களில் மாத்திரம் காணப்படுவதாகவும், ஆகஸ்ட் மாதத்தில் பேருவளை கடற்றொழில் துறைமுகத்தில் எரிபொருள் பெறுவதற்காக காணப்பட்ட 689 படகுகளைக் கொண்ட காத்திருப்புப் பட்டியலில் (waiting List) இம் மாதத்தில் 61 படகுகள் மாத்திரமே காணப்படுவதாகவும் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

குடாவெல்ல கடற்றொழில் துறைமுகத்தின் விநியோகப் பிரிவு (Dispensing Unit) செயலிழந்த காரணத்தினால் அதனை மீள புனரமைப்பதற்குத் தேவையான பாகங்களை இறக்குமதி செய்ய முடியாதுள்ளதால் பிரச்சினையொன்று எழுந்துள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குழுவில் தெரிவித்தார்.
மேலும் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் பெறுவதற்கு மீனவர் வருகை தராத காரணத்தினால் எரிபொருள் எஞ்சியிருப்பதாகவும், மீனவர்கள் தற்பொழுது மீன்பிடி நடவடிக்கைளுக்கு சென்றுள்ளதாலேயே அவர்கள் எரிபொருள் பெறுவதற்கு வரவில்லை எனவும் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

எரிபொருள் பிரச்சினை காணப்படும் சகல கடற்றொழில் துறைமுகங்கள்

தொடர்பாகவும் ஆராய்ந்து அறியத் தரும் பட்சத்தில் இந்த விடயம் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென கௌரவ இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

விநியோகப் பிரிவுகள் (Dispensing Unit) மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையாக காணப்படுவதால் அன்றாடம் 7 எரிபொருள் படகுகள் காத்திருப்புப் பட்டியலில் (waiting List) காணப்படுவதாகவும் அது தவிர வேறு எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

### 2.1.3 மீனவர் நலனோம்புகை

மீனவர்களின் நலனோம்புகை தொடர்பாக தற்பொழுது காத்திரமான நிலைமை காணப்படவில்லை எனவும், அநேகமான நபர்கள் போதைபொருள் வாங்குவதற்கான அல்லது போதைபொருள் கொள்வனவு செய்வதற்கான பணத்தை ஈட்டிக்கொள்ள ஒருநாள் மற்றும் பலநாள் மீன்பிடி கலங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

அவ்வாறான மீனவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இவ் விடயம் தொடர்பாகவும் அவர்களது பிள்ளைகளின் கல்வி, நலனோம்புகை நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆலோசனை வழங்கும் வேலைத்திட்டமொன்றை கடற்றொழில் அமைச்சின் தலையீட்டுடன் ஆரம்பிக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

கௌரவ கடற்றொழில் அமைச்சரின் அறிவுறுத்தல்களின் பேரில் மீனவர் சமூகத்தின் பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தி விஷேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு அதன் முதலாம்கட்ட நடவடிக்கைகள் ஒக்தோபர் மாதம் 01 ஆந் திகதி உலக சிறுவர் தினத்திற்கு நேர் ஒத்ததாக ஆரம்பிக்கப்படுமென கௌரவ இராஜாங்க அமைச்சர் அறிவித்தார்.

மீனவர் நலனோம்புகை நடவடிக்கைகளின் கீழ் அமைச்சின் பங்கேற்புடன் புதிய ஓய்வூதியத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், மீனவர் குடும்பங்களின் பிள்ளைகள் மற்றும் அவர்களின் கல்வியை இலக்காகக் கொண்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து புதிய காப்புறுதி செயன்முறையொன்று தயாரிக்கப்பட்டு துரிதமாக செயற்படுத்தப்படுமெனவும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.

போதைபொருள் பாவிப்போர் மற்றும் எச்.ஐ.வி (HIV) தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தொடர்பாக இலங்கை மருத்துவச் சபை அறிவித்துள்ளதாகவும், அதன் பிரகாரம் இலங்கை மருத்துவச் சபை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மஞ்சு வீரசிங்க அவர்களை இணைத்துக்கொண்டு மீனவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றை வடிவமைத்து அதன் முதலாவது நிகழ்ச்சி 2022.09.23 ஆந் திகதி வெள்ளியன்று நீர்கொழும்பு கடற்றொழில் துறைமுகத்தில் ஆரம்பிக்கப்படுமெனவும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.

வலைகள் மற்றும் இதர கடற்றொழில் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு

வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் மீனவர் நலனோம்புகை நடவடிக்கைகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படுவதில்லை எனவும் அடுத்த வருடத்துக்கான வரவுசெலவுத் திட்டத்தில் மீனவர் சமூகத்தின் பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் குழுவில் அறிவித்தார்.

### 2.1.4 படகுகள் உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள்

இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக முடங்கிப் போயுள்ள, வெளிநாட்டுச் சந்தையை மையப்படுத்திய படகுகள் உற்பத்தியை மீண்டும் முறை சார்ந்ததாக்கும் பொருட்டு படகு உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை பெறுவதற்கேற்ற வகையில் கட்டுப்பாட்டு எல்லைகளை ஓரளவு தளர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

நிதி அமைச்சுடன் கலந்துரையாடி மீன்பிடி படகு உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதோடு, அதன் பொருட்டு செயன்முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.

யாதேனுமொரு படகுத் தளத்துக்கு இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்கள் தேவையாக இருப்பின் ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படுகின்ற கடற்றொழில் அலுவலகங்களின் உதவிப் பணிப்பாளரிடம் கோரும் பட்சத்தில் அவருடைய பரிந்துரையும் கடற்றொழில் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு மேற்படி மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கடற்றொழில் அமைச்சினால் இறக்குமதி,ஏற்றமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு பரிந்துரைக்கப்படுவதோடு, அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து தேவையான மூலப்பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார். .

அதன் பிரகாரம், இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கடற்றொழில் துறைக்குத் தேவையான மூலப்பொருட்களையும் துணைப் பாகங்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெ கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.

## 2.2 வட மாகாணத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன் அவர்கள்

வட மாகாணத்தில் மண்ணெண்ணையைப் பயன்படுத்தி இயக்கப்படும் மீன்பிடி படகுகளே அதிகளவில் காணப்படுவதாகவும், மீன் பிடிக்கும் காலம் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளதால் அப் பகுதிகளுக்கு கூடுதலாக மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

அடுத்த நாளுக்கு எரிபொருள் தேவைப்படுகின்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பட்டியல் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்படுகின்ற

போதிலும், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பிரதானமாக பெற்றோல் மற்றும் டீசல் கொள்வனவுக்கு மாத்திரமே பணம் செலுத்தி தருவித்தல் கட்டளையினை கொடுப்பதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

ஆகவே, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்புடைய பிராந்திய அலுவலகத்திற்கு அறிவிக்கப்படும் போது ஏனைய எரிபொருள் வகைகளுக்கு பணம் செலுத்துவதால் பணம் இல்லாத நிலையில் மண்ணெண்ணெய் தருவிப்பதற்கு தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கப்படுவதோடு, பணம் செலுத்தப்படும் பட்சத்தில் மாத்திரம் எரிபொருள் வழங்கப்படுவதாகவும் தினமும் பி.ப 4.00 மணிக்கு முன்னர் பணம் வைப்பிலிடும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பட்டியல் தொடர்பில் மாத்திரம் அன்று மாலை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்படுவதாகவும் கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

பணம் செலுத்துவதற்கு தாமதிக்கும் சந்தர்ப்பங்களில் பிறிதொரு நாளில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் மற்றும் உரிய நாளன்று பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அதற்கான மாற்று வேலைத்திட்டம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் மேற்படி தருவித்தல் கட்டளையை அடுத்த நாளன்று வழங்க முடியுமென கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## 2.3 கௌரவ டீ. வீரசங்க அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 2.3.1 அறுகம்பே வலயத்தில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தல்

அறுகம்பே கடல் சறுக்கல் (surfing) விளையாட்டு மேற்கொள்ளப்படுகின்ற பிரதான இடத்தில் அறுகம்பே கடற்றொழில் துறைமுகம் அமைந்துள்ளதாகவும், மீனவர்களின் படகுகளை நிறுத்தி வைத்தல் மற்றும் வலைகளை விரித்து வைத்தல் போன்ற கடற்றொழில் நடவடிக்கைகள் காரணமாக சுற்றுலாப் பயணிகள் பெரிதும் சிரமத்துக்குள்ளாவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இந்த இடத்திலிருந்து சுமார் 1 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள குடாகல்லி என்ற பிரதேசத்துக்கு மேற்படி கடற்றொழில் நடவடிக்கைகளை இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டதோடு, அது கடல் சறுக்கல் (surfing) விளையாட்டில் ஈடுபடும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இருக்குமெனவும் கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

அறுகம்பே பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு சென்ற அலுவலர்களிடம் மீனவர்கள் 03 இடங்களைக் காட்டியுள்ளதோடு அந்த 03 இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை கண்காணிப்பு நடவடிக்கைகளின் பிரகாரம் சில இடங்களுக்கு பெருமளவில் செலவிட வேண்டுமென்பதால் பூர்வாங்க சாத்தியக்கூறு ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) தெரிவித்தார்.

### 2.3.2 அறுகம்பை விஸ்கி பொயின்ட் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகள்

அறுகம்பை கடல் சறுக்கல் (surfing ) விளையாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விஸ்கி பொயின்ட் பகுதியிலும் மீன்பிடி இறங்குதுறை அமைந்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்வதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

கள ஆய்வுக்காக ஒக்தோபர் மாதம் அறுகம்பே பிரதேசத்துக்கு வருகை தருவதாக கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 2.3.3 எக்கல் ஓயா இனப்பெருக்க நிலையம்

எக்கல் ஓயா மீன் இனப்பெருக்க நிலையத்தை நிர்மாணிப்பதற்கு அப் பகுதி மீனவர் சங்கத்துக்குச் சொந்தமான சுமார் 31 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதோடு அத் தொகையை மீளப் பெற்றுத் தருமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை வைத்தார்.

எக்கல் ஓயா மீனவர் சங்கத்துடன் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உடன்படிக்கை கைச்சாத்திட்டு 220 இலட்சம் ரூபாய் பெறுமதியான கருத்திட்டமாக மேற்படி இனப்பெருக்க நிலையம் நிர்மாணிக்கப்பட்டதாக தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

திறைசேரியிடமிருந்து நிதி கிடைக்காத காரணத்தினால் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள சுமார் 20 இலட்சம் ரூபாய் தொகையை செலுத்த முடியாமல் போனதாகவும், மீன் படிவுக்கு வழங்கப்பட்ட தொகை மாத்திரமே தற்பொழுது கிடைத்துள்ளதால் திறைசேரியிடமிருந்து நிதி கிடைத்தவுடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தல்கள் மேற்கொள்ளப்படுமெனவும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## 2.4 குளங்களில் மீன் குஞ்சுகளை இடல் - கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

இன்றளவில் நிலவும் அதிக மீன் விலையை கருத்தில் கொண்டு ஊவா மாகாணத்தில் காணப்படும் குளங்களில் மீன் குஞ்சுகளை இடும் கருத்திட்டத்தை மீள செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரினார்.

ஏனைய மீன் வியாபாரிகளினதும் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினதும் மீன் விலைகளில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் இல்லை எனவும், மீன் வியாபாரிகள் தமது தற்றுணிபுக்கு அமைய பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விலைகளைக் குறிப்பிடுவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இன்றளவில் அடையாளங் காணப்பட்டுள்ள மத்திய மற்றும் சிறிய அளவிலான12000 குளங்களில் 1340 குளங்களுக்கு மீன் குஞ்சுகள் இடப்பட்டுள்ளதாகவும் இந்த ஆண்டில் மேலும் சுமார் 4000 குளங்களுக்கு மீன் குஞ்சுகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

இது தொடர்பாக அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு கௌரவ உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளதாகவும், கௌரவ உறுப்பினர்களின் யோசனைகள், கருத்துக்கள்

மற்றும் முன்னுரிமை அளிக்க வேண்டிய குளங்கள் இருப்பின், அது தொடர்பாகவும் அறிவிக்குமாறு கௌரவ தவிசாளரால் கோரப்பட்டது.

மேலும், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மலைநாட்டுப் பகுதியில் மீன் விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு திட்டமிட்டுள்ளதோடு, அதன் மூலம் நாடடில் காணப்படும் மீன் தட்டுப்பாட்டுக்கு நிரந்தரத் தீர்வினை பெற முடியுமெனவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.
மீனவர்களுக்கு கடலுக்குச் செல்ல முடியாமல் போயுள்ளதால் மீன் அறுவடை குறைந்தமை மற்றும் மீன் இறக்குமதி நிறுத்தப்பட்டமை மீன் விலை அதிகரிப்பதற்கு பிரதான காரணமென இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்

மீன் விலை அதிகரிக்கும் போது கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீன்களை களஞ்சியப்படுத்திக் கொண்டு விலையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், அசாதாரணமான முறையில் விலை அதிகரிக்கும் போது இத் திட்டத்தை நிலையாகப் பேணுவது கடினமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பதுளை பிரதேசத்தில் மொத்த விலைக்கு மீன் விற்பனை செய்ய விற்பனை நிலையமொன்றைத் திறப்பதற்குப் பொருத்தமான இடமொன்றைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பொருத்தமான இடமொன்றைக் கண்டறியும் வரை தற்பொழுது கடற்றொழில் கூட்டுத்தாபன வளாகத்தில் மொத்த விலைக்கு மீன் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

### 2.5 சந்தையில் மீன் விலையைத் தீர்மானித்தல் - கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன

சந்தையில் மீன்களின் இறுதி விலையைத் தீர்மானிப்பது சம்பந்தமாக கடற்றொழில் அமைச்சு தலையீடு செய்யக்கூடிய இயலுமை தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

வறுமையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணமாக கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் "பஜட் பெக்" அறிமுகம் செய்யப்பட்ட அதேவேளை அதில் மிகச்சிறந்த வகையின மீன்கள் உட்பட கருவாடு அல்லது மாசி உள்ளடக்கியதாக ரூபா 1350/= என்ற தொகைக்கு வழங்கப்படுவதாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

சதொச நிறுவனத்துடன் கலந்துரையாடி மீன், கருவாடு மற்றும் அதிகுளிரூட்டப்பட்ட மீன்கள் ஆகிய பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போதைய சந்தைக்கு பொருந்தக் கூடியதாக 250கிராம், 300கிராம் என்ற வகையில் பொதி செய்து விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்ததாகவும் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### 2.6 கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல் அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

#### 2.6.1 மீன்பிடித் துறைமுகங்களில் குளிர் அறைகளை அமைத்தல்

புத்தளம் மாவட்டத்தின் மீன்பிடித் துறைமுகங்களில் மீன்களை களஞ்சியப்படுத்துவதற்காக குளிர் அறைகளை அமைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் புத்தளம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுமார் 05 தொன்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஐஸ் உற்பத்தி

தொழிற்சாலையை விலைமனுக் கோரல் மூலமாகவோ அல்லது வேறு தரப்பினருக்கோ வழங்கி திருத்தங்களை மேற்கொண்டு தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையை திருத்துவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டதன் பின்னர் திருத்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

### 2.6.2 கடற்றொழில் கூட்டுத்தாபன மீன் விற்பனை நிலையங்களை அமைத்தல்

புத்தளம் நகரில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குரிய மீன் விற்பனை நிலையம் தனியார் வியாபார நிலையமொன்றிற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கடற்றொழில் கூட்டுத்தாபன மீன் விற்பனை நிலையம் காணப்படுகின்றபோது கருப்புச் சந்தை விலையில் மக்கள் மீன்களைக் கொள்வனவு செய்யும் அசௌகரிய நிலைமை தவிர்க்கப்படும் என்பதால் நகர சபை மற்றும் பிரதேச சபையுடன் கலந்துரையாடி மீன் விற்பனை நிலைய முறைமையொன்றினைத் தாபித்துத் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குரிய சொத்தெதுவும் புத்தளம் நகர சபை எல்லைக்குள் இல்லையெனவும் பாலாவி மற்றும் தொடுவாவ ஆகிய 02 இடங்களில் மட்டுமே விற்பனை நிலையங்கள் இருப்பதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

மீன் விற்பனை நிலையங்களைத் தாபிப்பது தொடர்பில் நகர சபைகளுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மீன் விற்பனை நிலையங்களைத் தாபிக்கும் செயற்பாடுகள் 02 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள அதேவேளை அதன் முதற் கட்டமாக 445 சதொச விற்பனை நிலையங்களுடன் இணைந்து உடன் மீன் விற்பனை செய்யக்கூடிய இடங்களில் அவற்றையும் அதிகுளிரூட்டப்பட்ட மீன்களை களஞ்சியப்படுத்தக்கூடிய இடங்களில் அதிகுளிரூட்டிய மீன்களையும் விற்பனை செய்வதற்கு தயாராகி வருவதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடி விற்பனை நிலையங்களைத் தாபிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

### 2.6.3 மீனவர்களுக்கான எரிபொருள் வழங்கல்

புத்தளம் மாவட்டத்தில் மற்றும் அதனைச் சூழவுள்ள பத்தலங்குண்டுவ, உச்சிமுனை உட்பட தீவுகளிலுள்ள மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் மற்றும் பெட்ரல் வழங்கும் போது மீன்பிடித் துறைமுகத்தினூடாக எரிபொருளை பெற்றுக்கொடுக்கக் கூடிய இயலுமை தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

மீனவச் சங்கங்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற எரிபொருள் விநியோகத்தின் போது அது உரிய முறையில் இடம்பெறுவதில்லை எனவும் மீனவச் சங்கங்களின் அதிகாரிகள் மாத்திரம் அதனூடான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதால் அதனை அவ்வாறு மேற்கொள்ளாது சங்கங்களின்

உறுப்பினர்களுக்கும் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கற்பிட்டி நகரில் இருந்து தீவுகளுக்கு எரிபொருள் வழங்குகின்ற போது மீன்பிடித் துறைமுகத்தின் எரிபொருள் நிரப்பு நிலையமல்லாத வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களால் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தில் மீனவர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்காக 08 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மாத்திரம் பெயரிடப்பட்டுள்ள அதேவேளை, மேற்படி எண்ணிக்கை போதுமானதாக இல்லையெனவும் கூடுதலான எரிபொருளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## 2.7 கௌரவ ஹேஷா விதானகே அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 2.7.1 கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினூடாக ரின்மீன் தொழிற்சாலைகளை நிர்மாணித்தல்

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்கள் பாவனையாளர்களினால் கொள்வனவு செய்யப்படாமைக்கும் இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன்களைக் கொள்வனவு செய்யும் போக்கு அதிகரிப்பதற்குமான காரணம் ரின் மீன்களின் தற்போதைய விலைகளே என கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

2020 இல் 06ஆக காணப்பட்ட ரின் மீன் தொழிற்சாலைகளை இந்த வருடத்தின் போது 10 தொழிற்சாலைகளாக அதிகரித்துள்ளதாகவும் 11ஆவது தொழிற்சாலையை மிக விரைவில் ஆரம்பிக்க உள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் (தொழில்நுட்பம்) தெரிவிக்கப்பட்டது.

முன்னைய வருடங்களில் காணப்பட்ட ரின்மீன் உற்பத்தியை விட 2021 ஆம் ஆண்டில் ரின்மீன் உற்பத்தி அதிகரித்த போதிலும் எரிபொருள் பிரச்சினை மற்றும் ரின்மீன் உற்பத்திக்காக பயன்படுத்தும் லின்னா மீன் அறுவடை குறைவடைந்ததன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ரின்மீன் உற்பத்தியானது குறிப்பிட்டளவில் குறைந் ததென இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்

ரின்மீனின் விலை ரூ.750 – 800 என்ற தொகையில் உள்ளதெனவும் அதற்கான காரணங்களாக லின்னா மீனின் விலை அதிகரித்தமை மற்றும் எரிபொருள் கட்டணம் அதிகரித்தமை தாக்கம் செலுத்தியுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் (தொழில்நுட்பம்) தெரிவிக்கப்பட்டது.

### 2.7.2 மீன் விலை அதிகரித்தல்

மீன்பிடித் துறைமுகங்களில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னுரிமையளித்து எரிபொருள் வழங்கப்படுமாயின் மீனின் விலையைக் கட்டுப்படுத்த முடியுமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

## 2.8 கௌரவ சந்திம வீரக்கொடி அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 2.8.1 செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீன்கள் இருக்கும் இடங்களை அடையாளம் காணல்

வெளிநாடுகளில் செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீன்கள் இருக்கின்ற இடங்களை அடையாளம் கண்டு அவ்விடங்களுக்குச் சென்று மீன் அறுவடையை பெற்றுக் கொள்வதாக தெரிவித்ததோடு உள்ளூர் ரீதியில் அது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டம் தொடர்பிலும் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

அத்துடன் செய்மதிக் தொழில்நுட்பத்தினை வாடகை அடிப்படையில் பெற்று மீன் இருக்கும் இடங்களைக் கண்டுபிடிப்பது பற்றிய இயலுமை தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

மேலும், பிடித்துவரும் மீன் அறுவடையை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்தினால் மீன் அறுவடை காணப்படுகின்ற பிரதேசங்கள் தொடர்பில் தினசரி எதிர்வுகூறல் வழங்கப்படுவதாக கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் (தொழில்நுட்பம்) தெரிவிக்கப்பட்டது.

செய்மதிக்கான கொடுப்பனவைச் செலுத்தி பெறப்படுகின்ற கடற்றொழில் எதிர்வுகூறல் (Fish Ground Forecasting) முறையியலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையில் இருந்ததில்லையெனவும் அவ்வாறு இருந்திருப்பின் மீன்கள் இருக்கும் இடங்கள் போன்றவை தொடர்பில் மீனவர்களுக்கு அறிவித்திருக்க முடியும் எனவும் கடற்றொழில், நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

பல்தின மீன்பிடிக் படகுகள் இலக்காகக் கொள்ளும் மென்சூரை மீன்கள் இருக்கும் இடங்கள் தொடர்பில் கப்பல் கண்காணிப்பு முறைமை (Vessel Monitoring System) மூலமாக கடந்தகால தரவுகளைத் திரட்டி மீன்கள் இருக்கும் இடங்கள் தொடர்பிலான எதிர்வுகூறல் வழங்கப்படுவதாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்

அத்துடன் செய்மதிக் தொழில்நுட்பத்தினை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு பெருந்தொகைப் பணம் செலவாகும் எனவும் பகுப்பாய்வு செய்யப்பட்ட முறையிலேயே அதனூடாக தரவுகள் வழங்கப்படுகின்றன எனவும் மேலும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்

எதிர்வரும் காலப்பகுதியில் மேலும் 2000 மீன்பிடிக் கலங்களுக்கு கப்பல் கண்காணிப்புக் முறைமையை (Vessel Monitoring System) பொருத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அதனூடாக அன்றாடம் மீன் அறுவடை கிடைக்கும் இடங்கள் தொடர்பிலான தரவுகளைப் பெற்று அத்தரவுகளை எதிர்காலத்தில் ஏனைய மீன்பிடிக் கலங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள பெரும்பாலான சிறிய மீன்பிடிக் கலங்கள் மூலமாக 100 மீட்டர் ஆழத்திற்கு மாத்திரமே இரை இடும் இயலுமை இருக்கின்ற காணரத்தால் கடலில்

வெகு தொலைவிற்கு பயணிக்கின்ற போதிலும் வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் சுமார் 300 மீட்டர் ஆழத்திற்கு இரை இடுவதாகவும் அதிகளவான மீன்கள் இருப்பது ஆழ்கடலிலேயே எனவும் கடற்றொழில், நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை நிறுவனம் உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து இரையை ஆழ்கடலில் இட்டு மீன்களைப் பிடிப்பதற்கான கலம் ஒன்றினைத் தயாரிக்கும் ஆராய்ச்சி மட்டப் பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. அதனூடாக ஆழமற்ற கடல் பிரதேசத்தில் மீன்களைப் பிடிப்பதற்கான முறையியலொன்றினை அமைத்துக் கொள்ளவும் இயலுமை கிடைக்குமெனவும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்

தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்தினால் வாரத்திற்கு மூன்று தடவைகள் மீன்கள் சுற்றித்திரியும் இடங்கள் தொடர்பில் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக மீனவர்களுக்கு தகவல்கள் வழங்கப்படுவதாகவும் அவ்வாறு தகவல் வழங்கப்படுவது, பலநாள் மீன்பிடிக் கலங்களுக்கு மட்டுமே எனவும் தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.8.2 நாட்டில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற தரப்பினர்

நாட்டில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற தரப்பினரும் குறிப்பிட்ட எரிபொருள் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தால் அவர்களுக்கும் யாதேனும் மானியத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டப்பட்டது.

ஒன்றரை மாத காலப்பகுதிக்குள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிர்பார்ப்பதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.8.3 மீன்பிடி விளையாட்டுக்கென (Sports Fishing) இடமொன்றினை ஒதுக்கிக் கொள்ளல்.

முருகைக் கற்கள் மற்றும் கண்டல் தாவரங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சுற்றுலா பயணிகள் ஸ்போர்ட்ஸ் பிஷிங் (Sports Fishing) விளையாட்டில் ஈடுபடுவதற்காக பொருத்தமான ஓர் இடத்தைப் பெற்றுத் தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 2.8.4 ஹிக்கடுவை பிரதேசத்தின் கடலரிப்பு

ஹிக்கடுவை, தொடந்தூவ கடற்கரைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பராமரிப்பு நடவடிக்கைகள் காரணமாக ஹோட்டல்கள் பாதிக்கப்படுவதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் இதனை மணல் வியாபாரம் என கூறுகின்ற காரணத்தால் இவ்விடயம் தொடர்பில் விசாரணை செய்து தீர்வொன்றினைப் பெற்றுத்தருமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு அவசியமான வகையில் அகழ்வுப் பணிகள் இடம்பெறுவதோடு இறங்குதுறைகளில் மணல் அகழ்ந்து அகற்றப்பட்டு மேற்கொள்ளப்படும் துப்பரவு நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் இது தொடர்பிலான மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அவர்களது ஆலோசனையின் பிரகாரம் சில இடங்களில் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### 2.8.5 கொக்கல ஓயாவிலும் மாது கங்கையிலும் இறால் அல்லது மீன்களை விடுதல்

கொக்கல ஓயாவிலும் மாது கங்கையிலும் இறால் அல்லது மீன்களை விடுவதனூடாக எதிர்காலத்தில் வரவிருக்கும் சுற்றுலாக் காலத்தில் வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியுமென்பதால் அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து முன்னுரிமையளித்து நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் இலங்கைத் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

## 2.9 கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 2.9.1 மீன்பிடிக் கொள்கை, மீன்பிடி முறைகள், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்பிடிப் பிரிவுகள் பற்றிய தரவுகளைப் பெறுதல்.

மீன்பிடிக் கொள்கை, மீன்பிடி முறைகள், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்பிடிப் பிரிவுகள் பற்றிய தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்களைப் பெற்றுத்தருமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 2.9.2 மீன் அறுவடையைப் பெறுவதற்காக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

பெறுகின்ற மீன் அறுவடையை அதிகரிப்பதற்காக புதிய தொழில்நுட்பத்தினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வினவப்பட்டது.

### 2.9.3 மீன் அறுவடையினூடாக நாட்டைத் தன்னிறைவடையச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்கள்

மீன் அறுவடையினூடாக நாட்டைத் தன்னிறைவடையச் செய்வதற்காக கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்கள் தொடர்பில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வினவப்பட்டன.

### 2.9.4 மீன்பிடித் துறையின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு நுகர்வு

மீன்பிடித் துறையின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு நுகர்வு தொடர்பிலான தரவுகள் மற்றும் மீன் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக மேற்கொண்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்கள் தொடர்பில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வினவப்பட்டன.

### 2.9.5 மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம்

மீன்பிடிக் கைத்தொழிலை மேற்கொள்வதற்கான மண்ணெண்ணெய் இன்மையால் சிறு அளவிலான மீனவர்கள் சிரமங்களுக்கு ஆளாகியுள்ள காரணத்தினால்

அதற்கென யாதேனும் விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வினவப்பட்டது.

அத்துடன் சகல மீன்பிடித் துறைமுகங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பிலும் அவரால் வினவப்பட்டது.

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்பையும் பெற்று ஒரு மாத காலப்பகுதிக்குள் மண்ணெண்ணெய் பிரச்சினைக்கான தீர்வுகள் வழங்கப்படும் என கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் சகல மீன்பிடித் துறைமுகங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருப்பதாகவும், கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பங்களிப்புடன் ஒன்றரை மாத காலப்பகுதிக்குள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் கோரப்பட்ட சகல தரவுகளையும் தகவல்களையும் பெற்றுத் தருவதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 2.9.6 மீன்பிடிப் பரிசோதகர் பிரிவுகள்

இலங்கையிலுள்ள மீன்பிடிப் பரிசோதகர் பிரிவுகளின் எண்ணிக்கை, இம்மீன்பிடிப் பரிசோதகர் பிரிவுகள் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலுக்காக தாபிக்கப்பட்டுள்ள விதம் மற்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, மொத்தத் தேசிய உற்பத்திக்கு மீன்பிடிக் கைத்தொழிலின் மூலமாக வழங்கப்படும் பங்களிப்பு எந்தளவு மற்றும் கடற்றொழில் அமைச்சின் இலக்குகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வினவப்பட்டன.

### 2.9.7 மீன்பிடி இறங்குதுறைகளை நிர்மாணிக்கின்ற போது ஏற்படுகின்ற பிரச்சினைகள்

மீன்பிடி இறங்குதுறைகளை நிர்மாணிக்கின்ற போது பொதுப்பிட்டிய, கிரிந்த ஆகிய இறங்குதுறைகள் தோல்வியடைந்துள்ள காரணத்தால் பெரும்பாலான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பிலான தீர்வுகளை முன்வைக்குமாறும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**3.** குழுவின் நடவடிக்கைகள் மதியம் 12.00 மணியளவில் திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டது.

---

**வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**முதலாவது கூட்டம் – 2022 ஒற்றோபர் 21**

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்**

கௌரவ நலின் பிரனாந்து (தவிசாளர்)
கௌரவ ச. வியாழேந்திரன் (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ காதர் மஸ்தான் (இராஜாங்க அமைச்சர்)

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ அனுப பஸ்குவல்
கௌரவ வஜிர அபேவர்தன

**1. கௌரவ தவிசாளரின் அறிவித்தல்கள்**

நாட்டில் நிலவுகின்ற அத்தியாவசிப் பொருட்களின் தட்டுப்பாடு தொடர்பில் விசாரணை செய்து அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் கீழ் உள்ள லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினுடாக வருடாந்தம் உயர்கல்வியைப் பெறுகின்ற சுமார் 16,000 மாணவர்களுக்கு மஹபொல புலமைப்பரிசில் வழங்கப்படுவதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

மஹபொல நிதியத்தினை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஸ்தாபகர், அப்போதைய வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய மறைந்த லலித் அத்துலத்முதலி அவர்கள் ஆரம்பித்து வைத்த மஹபொல கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியை மீண்டும் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் கௌரவ தவிசாளரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

**2. ஆண்டறிக்கைகளைப் பரிசீலனை செய்தல்**

பரிசீலனை செய்ததன் பின்னர், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்திய கீழ்வரும் வருடாந்த அறிக்கைகள் தொடர்பில் இணக்கம் தெரிவித்தது.

**2.1** 2018 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

**2.2** 2017 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்

**2.3** 2018 ஆம் ஆண்டுக்கான லங்கா சதொசவின் லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை

**2.4** 2020 ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஆண்டறிக்கை

**2.5** 2016 ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஆண்டறிக்கை

**2.6** 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கை

மேற்படி ஆண்டறிக்கைகள் தொடர்பிலான குழுவின் அறிக்கையை 2022 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு குழு அனுமதியளித்தது.

## 3. வேறு விடயங்கள்

### 3.1 வர்த்தக வியாபாரிகளுக்கு புதிய அறிவினைப் பெற்றுக்கொடுப்பதற்காகவுள்ள கல்விசார் பாடநெறிகள் - கௌரவ அனுப பஸ்குவல்

வர்த்தக வியாபாரிகளுக்கு வியாபாரங்கள் பற்றிய புதிய அறிவினைப் பெற்றுக் கொடுப்பதற்கு, அறிவினை மேம்படுத்திக் கொள்வதற்காக நாட்டில் கல்விசார் பாடநெறிகள் இல்லையென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பிரதேச செயலாளரின் தலைமையில் ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் நுகர்வோர் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் நிதியினூடாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்த முடியும் எனவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

நவெம்பர் மாதம் தொடக்கம் மாவட்ட அடிப்படையில் இக்குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அதன் பின்னர் அக்குழுக்கள், வர்த்தக சங்கங்கள் மற்றும் துணை நிறுவனங்களை விழிப்புணர்வூட்டும் எனவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

முறையான வர்த்தக முகாமைத்துவத்தினூடாக வர்த்தக மேம்பாடு மற்றும் சரியான வகையில் வர்த்தகங்களை மேற்கொள்வது பற்றிய அறிவையும் பெற்றுக்கொடுக்க வேண்டுமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

நிதி நிர்வாகமே உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் காணப்படும் அடிப்படை பிரச்சினை எனவும் வர்த்தகர்களையும் உள்ளடக்கியதாக இந்த வேலைத்திட்டத்தினை துரிதமாக நடைமுறைப்படுத்துவதாக கௌரவ தவிசாளரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பொறுப்பானது சுற்றிவளைப்புகளை மேற்கொள்வது மாத்திரமன்றி சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வர்த்தகர்களுக்கு தவறுகள் குறித்து தெளிவுபடுத்தி சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கான காரணங்களைக் குறைப்பதே எனவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் குறைவடைவதாயின் வியாபார நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெறுகின்றது எனவும் சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாயின் வியாபார நடவடிக்கைகளில் குறைபாடுகள் உள்ளதெனவும் சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே நுகர்வோர் அதிகார சபையின் குறிக்கோளாக இருக்க வேண்டுமெனவும் கௌரவ தவிசாளரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 350 பட்டதாரிகள் விசாரணை அதிகாரிகளாக நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள் எனவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

நேரடியாக சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளாமல் அப் பகுதியில் உள்ள வியாபாரிகள் குறித்து தரவுத்தளமொன்றினை (Database) உருவாக்கி யாதேனும் முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் அதனை வியாபாரிகளுக்கு எழுத்துமூலமாக

அறிவித்து அவர்களை அழைத்து கலந்துரையாடி எழுத்துமூலமாக முதலாவது எச்சரிக்கையை வழங்கியதாக கௌரவ தவிசாளர் மேலும் அறிவித்தார்.

மீண்டும் குறித்த வியாபாரிக்கு எதிராக முறைப்பாடு கிடைத்தவுடன் தரவுத்தளத்தினை ஆராய்ந்து அடுத்ததாக வழக்குத் தாக்கல் செய்யும் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தை மதித்து செயற்படும் வியாபாரிகளைப் பாராட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ தவிசாளரினால் அறிவிக்கப்பட்டது.

ஒரு திட்டவட்டமான காலம் செல்லும் வரை எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மேற்படி வர்த்தகர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி சான்றிதழ்களை வழங்க முடியுமெனவும் அவர்களைப் பாராட்டி வருடாந்தம் புதுப்பிக்கத்தக்கதான அட்டையொன்றினை வழங்க முடியுமெனவும் கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக சங்கங்களின் தலைவர்கள் பாவனையாளர் குழுவிலே நிரந்தர உறுப்பினர்களாக இருப்பதாகவும் மேற்படி வர்த்தகச் சமூகத்தினரின் தேவைகளுக்காகப் பாவனையாளர் குழுவைப் பயன்படுத்த முடியும் எனவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகம், பாவனையாளர்களின் மனதை வென்றெடுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் வர்த்தகர்களின் அறிவினை மேம்படுத்த வேண்டுமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கொவிட் தொற்றுக்கு முன்னர் சிறந்த வியாபாரப் பயன்பாடுகள் தொடர்பான விரிவுரைகள், முன்மாதிரியான வர்த்தகர்களைத் தெரிவு செய்து விருதுகளை வழங்குதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டதாகவும் 2019 ஆம் ஆண்டில் இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பித்து 50 வேலைத்திட்டங்களளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளரினால் (போட்டி ஊக்குவிப்பு) தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கமைவாக பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று மேற்படி வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளரினால் (போட்டி ஊக்குவிப்பு) மேலும் தெரிவிக்கப்பட்டது.

திட்டமிடல் மற்றும் குழுக்களின் பங்குபற்றுதலுடன் ஒரு மாவட்டத்தினை உள்ளடக்கும் வகையில் சுமார் 5 வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறு தவிசாளரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இவ்வர்த்தகச் சங்கங்களை அழைத்து ஒருநாள் செயலமர்வினை நடாத்தி அவர்களுக்குப் புதிய அறிவினை வழங்கும் வேலைத்திட்டங்களை நடாத்தி சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் பாவனையாளர் சட்டம் தொடர்பாக பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச அலுவலர்கள், இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலீசார் விழிப்பூட்டப்பட்டு வருவதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் (பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்) இனால் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக வியாபாரிகளுக்கு சட்டதிட்டங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டல் மாத்திரமே தற்போது இடம்பெறுவதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் (பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்) இனால் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் தொடர்பட்டு இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாகவும் வர்த்தகத் திணைக்களம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையை இணைத்துக்கொண்டு இதனை செயற்படுத்துவதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

வாரத்திற்கு ஒரு மணித்தியாலத்தினை ஒதுக்கி உசிதமான காலச் சட்டகமொன்றினைத் தயாரித்து முக்கியமான உள்ளடக்கத்துடன் இதனைச் செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

**4**. குழு மு.ப. 11:30 மணியளவில் திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டது.

---

**கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு**
**முதலாவது கூட்டம் - 2022 நவம்பர் 16**

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்**

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண (தவிசாளர்)
கௌரவ பிரசன்ன ரணவீர (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ சாமர சம்பத் தசனாயக (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ சுமித் உடுக்கும்புர

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ சஜித் பிரேமதாச
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ மொஹமட் முஸம்மில்
கௌரவ வருண லியனகே
கௌரவ நாலக பண்டார கோட்டேகொட
கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப்
கௌரவ மதுர விதானகே

## 1. வருடாந்த அறிக்கைகளை பரிசீலனை செய்தல்

**1.1.** 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய அருங்கலைகள் பேரவையின் வருடாந்த அறிக்கை

**1.2.** 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகளுக்கான நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

**1.3.** 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டின் ஆண்டறிக்கை

**1.4.** 2017/2018 ஆம் ஆண்டுக்கான லங்கா லேலன்ட் (தனியார்) லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை

**1.5.** 2017/2018 மற்றும் 2018/2019 ஆம் ஆண்டுகளுக்கான மாந்தை சோல்ட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை

**1.6.** 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய வடிவமைப்பு நிலையத்தின் வருடாந்த அறிக்கை

**1.7.** 2018/2019 ஆம் ஆண்டுகளுக்கான பீசீசீ லங்கா லிமிடெட்டின் ஆண்டறிக்கை

**1.8.** 2020 ஆம் ஆண்டுக்கான மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை

**1.9.** 2020 ஆம் ஆண்டுக்கான மாணிக்கம் மற்றும் ஆபரண அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

**1.10.** 2014 ஆம் ஆண்டுக்கான மாந்தை சோல்ட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை

**1.11.** 2015 ஆம் ஆண்டுக்கான பீசீசீ லங்கா லிமிடெட்டின் ஆண்டறிக்கை

**1.12.** 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை

**1.13.** 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை

**1.14.** 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

**1.15.** 2019 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை

**1.16.** 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை

**1.17.** 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை

**1.18.** 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா லேலன்ட் (தனியார்) நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை

**1.19.** 2018/2019 ஆம் ஆண்டுகளுக்கான பீசீசீ லங்கா லிமிடெட்டின் ஆண்டறிக்கை

அமைச்சுக்களின் விடயப்பரப்புகளின் கீழுள்ள சில அரச நிறுவனங்கள் ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது. எனவே, நிதியமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற அரச நிறுவனங்களுக்கான நடவடிக்கைக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம், குறிப்பிட்ட நிதியாண்டு நிறைவடைந்து ஐந்து மாத காலத்திற்குள் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

பரிசீலனை செய்ததன் பின்னர் குழு, மேற்குறிப்பிடப்பட்ட ஆண்டறிக்கைகளை ஏற்றுக் கொண்டதுடன், அது தொடர்பான குழுவின் அறிக்கையை 2022 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானித்தது.

## 2. கௌரவ உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 2.1 வத்தளை, அப்புகெவத்த, இலக்கம் 59 இல் வசிக்கும் எச். ஏ. சுந்திக சுமதிபால என்பவரால் அவருடைய வியாபாரத்திற்கான மூலப்பொருட்களாகப் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பொருட்கள் இலங்கை கனிய மணல் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொண்டுள்ள கோரிக்கை - கௌரவ விஜித ஹேரத் (பிரேரணை இலக்கம் 22)

மேற்கூறப்பட்ட பிரேரணை தொடர்பாக குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையின் பிரதியொன்றினை கௌரவ விஜித ஹேரத் அவர்களுக்கு அனுப்புமாறு கௌரவ தவிசாளரினால் அமைச்சின் செயலாளரிடம் தெரிவிக்கப்பட்டது.

## 3. ஏனைய விடயங்கள்

### 3.1 பட்டை தீட்டி ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் இரத்தினக்கல் மீது அறவிடப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு வரியினை நீக்குதல் - கௌரவ ஜானக வக்கும்புர

இரத்தினபுரி “நாலந்த எல்லாவல” கைத்தொழிற்பேட்டையில் இரத்தினக்கல் இறக்குமதி செய்து பட்டைதீட்டி ஏற்றுமதி செய்வதுடன் தொடர்புடைய கைத்தொழில் இடம்பெற்று வருவதாகவும், மேற்படி கைத்தொழிலுக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற இரத்தினக்கற்களுக்காக 2.5% சமூகப் பாதுகாப்பு வரி அறவிடப்படுவதாகவும் கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

அதன் மூலம் உற்பத்திச் செலவினம் அதிகரித்ததனால் மேற்படி கைத்தொழிலை முன்னெடுத்துச் செல்வதில் கைத்தொழிலாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக இறக்குமதி செய்யப்படுகின்ற இரத்தினக் கற்களின் பெறுமதிக்கன்றி இரத்தினக் கற்களைப் பட்டைதீட்டிய பெறுமதி சேர்த்ததன் பேரில் (Value addition) மாத்திரம் வரி விதிப்பினை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேற்படி பிரச்சினை தொடர்பாக நிதியமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### 3.2 டொலமைட் கைத்தொழிலுடன் தொடர்புடைய பிரச்சினைகள் -கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

டொலமைட் கைத்தொழிலை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வெடிபொருட்களை வழங்குமாறும் டொலமைட் கைத்தொழிலுக்குத் தேவையான காணிகளை பெற்றுக் கொள்கையில் ஏற்படும் பிரச்சினைகள் உள்ளிட்ட அடிமட்ட சிறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

டொலமைட் கைத்தொழிலுக்குத் தேவையான வெடிபொருட்கள் வழங்குவதில் தாமதங்கள் கடந்த காலங்களில் நிலவிய போதிலும் எதிர்காலத்தில் முறையாக மேற்படி பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

காணிகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை மாவட்ட அபிவிருத்திக் குழு ஊடாக பிரதேச செயலாளர்கள் மூலமாகத் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

## 3.3 கௌரவ மதுர விதானகே அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.3.1 பத்திக் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்

பத்திக் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக பயிற்சி பெற்ற நபர்கள் அதிகமான பயன்களைப் பெற்றுள்ளதால் பத்திக் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்காலத்திலும் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் விசேடமாக ராஜகிரிய ஒபேசேகரபுர பயிற்சி நிலையத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிக்குமாறும் கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கோரிக்கை தொடர்பாக கவனத்தைச் செலுத்துமாறு கௌரவ தவிசாளரினால் அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது.

### 3.3.2 காலணி, சவர்க்காரம் போன்ற உற்பத்திகளுக்காகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்

காலணி, சவர்க்காரம் போன்ற பொருட்களைத் உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்வதற்காக பயிற்சிச் செயலமர்வுகளைச் செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்க முடியுமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாக கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டதாகவும் இன்றளவில் அப்பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டு வருவதாகம் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய வடிவமைப்பு நிலையம் போன்ற நிறுவனங்கள் மூலமாகப் பயிற்சிச் செயலமர்வுகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## 3.4 கௌரவ புத்திக பத்திறண அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.4.1 தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை ஏற்றிச் செல்கையில் பொலீஸ் அலுவலர்களால் ஏற்படும் தடைகளை நீக்கல்

தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவு செய்யப்பட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான களிமண், மூங்கில்,பிரம்பு, தடிகள், பன் போன்ற மூலப்பொருட்களை தங்கு தடையின்றி எடுத்துச் செல்வதற்காகப் பொலீஸ்

திணைக்களத்தின் அலுவலர்களை விழிப்பூட்டி இலகுவான வழிமுறைகளைத் தயாரிக்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இன்றளவில் நாட்டில் சுற்றுலாக் கைத்தொழிலில் விருத்தி ஏற்பட்டுள்ளதால் மேற்குறிப்பிடப்பட்ட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற பொருட்களுக்கு கூடுதல் கேள்வி எதிர்காலத்தில் எழமுடியும் என்பதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

களிமண்ணை ஏற்றிச் செல்கையில் நிலவும் தடைகளை நீக்குவதற்கு இன்றளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய தேசிய அருங்கலைகள் பேரவையின் அடையாள அட்டையைக் கொண்டுள்ள நபர்களுக்கு களிமண்ணை ஏற்றச் செல்கையில் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு பொலிஸ் திணைக்களத்தால் , பிரதேச செயலாளர், கைத்தொழில் மற்றும் சுரங்கத் திணைக்களம் என்பன விழிப்பூட்டப்பட்டுள்ளதாகவும் தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

தேசிய அருங்கலைகள் பேரவையின் அடையாள அட்டையைக் கொண்டுள்ள நபரொருவருக்கு 03 கியூப் களிமண்ணை ஒரே தடவையிலும் மாதமொன்றிற்கு 06 கியூப் வரையிலும் ஏற்றிச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரம்புகள் மற்றும் மூங்கில் குழாய்கள் என்பவற்றை ஏற்றிச் செல்வது தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மூங்கில் மரங்களை வெட்டுதல் மற்றும் ஏற்றிச் செல்லல் தொடர்பாக தற்பொழுதுள்ள தடைக் கட்டளைகளை நீக்கி விசேட அனுமதியின்றி மூங்கில் மரங்களை வெட்டுவதற்கும் ஏற்றிச் செல்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கமத்தொழில் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 3.4.2 பித்தளைப் பற்றாக்குறை நிலவும் காரணத்தினால் கைத்தொழிலாளர்கள் அசௌகரியத்திற்கு உள்ளாகுதல்

பித்தளைப் பற்றாக்குறை நிலவும் காரணத்தினால் விசேடமாக கண்டி மாவட்டத்தின் கைத்தொழிலாளர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

ரெலிகொம் நிறுவனம், நீர் வழங்கல் சபை, பாதுகாப்பு அமைச்சு போன்ற நிறுவனங்கள் மூலமாக சலுகை விலைக்கு பித்தளை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டதுடன் பித்தளையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஏனைய அரச நிறுவனங்களிடமும் கோர வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

அது தொடர்பில் கவனம் செலுத்துவதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் உலோக மூலப் பொருட்களுக்கு நிலவும் தேவை (கேள்வி) மற்றும் இன்றளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள உலோக மூலப் பொருட்கள் தொடர்பான தரவுக் களஞ்சியத்தினை தயாரிக்குமாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட விடயத்துடன் தொடர்புபட்ட தரவுகளைச் சேகரிக்கின்ற நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் பொதுவாக ஒரு வருடத்திற்கு சுமார் 800 மில்லியன் டொலர்கள் பெறுமதியான உலோகங்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலமாக அரசாங்கத்தினால் கழிவிரும்பு உலோக மூலப் பொருட்களை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளதால் அதற்கு நிகராக இந்நாட்டில் உலோக உற்பத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் உலோக உற்பத்திக்காக முதலீடு செய்வதற்கு இந்நாட்டில் நிறுவப்பட்டுள்ள கம்பனியொன்று விருப்பத்தைத் தெரிவித்துள்ளதாகவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

### 3.4.3 தற்பொழுதுள்ள குளோரின் மூலப்பொருள் கையிருப்பின் அளவு

பரந்தன் பிரதேசத்தில் குளோரின் மூலப்பொருள் உற்பத்தி வலயமொன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

50 நாட்களுக்குப் போதுமான வகையில் குளோரின் மூலப்பொருள் கையிருப்பு தற்பொழுது உள்ளதாக பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 3.4.4 குளோரினை ஏற்றிச் செல்வது தொடர்பான முகாமைத்துவத் திட்டம்

அபாயகரமான மூலப்பொருட்களை ஏற்றச் செல்வது (Hazardous Material Transportation) சுற்றாடல் அதிகார சபைக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPL) மூலம் மேற்கொள்ளப்படுவதாக பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளரினால் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது மேற்படி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இரசாயனப் பொருட்கள் மூலமாக ஏற்படும் ஆபத்துக்களை பேரிடர் முகாமைத்துவ திட்டத்தில் உள்ளடக்குவதற்காக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்காக குறிப்பிட்ட ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பரந்தன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

குளோரின் ஏற்றிச் செல்கையில் குருநாகல் கிரிஉல்ல வீதியில் விபத்தொன்று இடம்பெற்றதாகவும் அவ்வாறான விபத்துக்கள் தொடர்பாக கைத்தொழில் அமைச்சுக்கு பொறுப்புக்களை ஏற்க வேண்டியேற்படுவதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

எனவே, தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் ஒருங்கிணைந்து குளோரின் ஏற்றிச் செல்வதை முறையாக மேற்கொள்வதற்காக முறைசார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இரசாயனப் பொருட்களுக்கான உற்பத்தி நடவடிக்கைகளை இந்நாட்டில் மேற்கொள்வதற்காக அடுத்த வருடத்திற்கான (2023) வரவு செலவுத் திட்டத்தில் 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்நாட்டுக்

கைத்தொழில்கள் தொடர்பாக தேசியக் கொள்கையொன்றினை உருவாக்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

அதற்காக கைத்தொழிலாளர்களுக்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது நாட்டில் மோட்டார் வாகனப் பாகங்களைச் சேர்த்துப் பொருத்தும் கைத்தொழிற்துறையொன்று (Motor Vehicle Assembling Industry) விருத்தியடைந்து வருவதாகவும் எதிர்காலத்தில் வாகன இறக்குமதியினைத் தேவையற்ற வகையில் மேற்கொள்ளாது மேற்படி கைத்தொழிற்துறையைப் பாதுகாக்க வேண்டும் எனவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, குளியலறை உபகரண உற்பத்தியாளர்கள் (Bath ware manufacturers) இந்நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான விதத்தில் உற்பத்திகளை மேற்கொள்வதாகவும் மேற்படி கைத்தொழிற்துறையையும் எதிர்காலத்தில் பாதுகாப்பதற்கு கொள்கைசார் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் வாகனப் பாகங்களைச் சேர்த்துப் பொருத்தும் கைத்தொழிலாளர்களுடன் கலந்துரையாடுவதற்கு அவர்களுடைய தகவல் பட்டியலொன்றினை தொலைபேசி இலக்கங்களுடன் பெற்றுத் தருமாறு கௌரவ புத்திக பத்திறண அவர்கள் கோரினார்.

### 3.4.5 கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகள் வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுதல்.

அலுவலர்கள் சகல கைத்தொழிற்பேட்டைகளுக்கும் சென்று இவ்விடயம் தொடர்பாக பரிசோதித்துப் பார்ப்பதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

16 கைத்தொழிற்பேட்டைகளுக்குச் சென்றதாகவும் அதற்கமைய சுமார் 12 காணித்துண்டுகள் வேறு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு, 2022 நவம்பர் மாதம் இறுதியில் சகல கைத்தொழிற்பேட்டைகளுக்கும் சென்று மேற்படி காணிகள் தொடர்பாக அறிக்கையொன்றை வழங்குவதாகவும் காணிகள் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அவற்றை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கும் சலுசல லக்சல போன்ற நிறுவனங்களுக்கும் ஒதுக்கப்பட்ட காணிகளும் வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வாதனங்கள் மூலமாக எதுவித வருமானங்களும் ஈட்டப்படுவதில்லையெனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி காணிகள் தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### 3.4.6 சலுசல தலைமையகத்தை வேறு அரச நிறுவனங்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்துதல்

சலுசல தலைமையகம் சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் பிரதம அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக சுவீகரிக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

சலுசல தலைமையகம் பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக முன்பு சுவீகரிக்கப்பட்டிருந்ததாக சலுசல நிறுவனத் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கொவிட் தொற்று நிலவிய காலப்பகுதியில் சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் மூலமாகவும் சலுசல தலைமையகம் எவ்விதமான ஒப்படைப்புமின்றி பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்ததாகவும் அதில் வேறொரு பகுதியை பிரதமர் பாதுகாப்புப் பிரிவினர் பயன்படுத்தி வந்ததாகவும் சலுசல நிறுவனத் தலைவரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இக் காணியின் உரித்தினை மீளப்பெற்றுக் கொள்வதற்காக தற்பொழுது குறிப்பிட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் சலுசல நிறுவனத் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ சனாதிபதி அவர்களுடன் கலந்துரையாடி மீண்டும் சலுசலவுக்கு மேற்படி காணியினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ றிஸாட் பதியுதீன் அவர்களால் கோரப்பட்டது.

யோர்க் வீதியில் அமைந்துள்ள லக்சலவுக்குரிய 40,000 சதுர அடிகளைக் கொண்ட காணி எதுவிதப் பயன்பாட்டுக்கும் உட்படாதுள்ளதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்ததுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரினார்.

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### 3.4.7 ரைகம கைத்தொழிற்பேட்டை நிர்மாணத்தின் தற்போதைய நிலைமை

மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற்பேட்டைக்கான நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மத்திய பொறியியலாளர் ஆலோசனைப் பணியகத்தின் மூலமாக புதிய மதிப்பீடொன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 3.4.8 பாரம்பரியக் கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தினால் நிதியுதவி வழங்கப்படுதல்

2023 ஆம் ஆண்டிற்காகத் தேசிய அருங்கலைகள் பேரவைக்கு 40 மில்லியன் ரூபாவும் பாரம்பரியக் கைத்தொழில் அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணவீர அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

### 3.4.9 கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழுள்ள கைத்தொழிற்பேட்டைகள் மற்றும் அமைச்சின் கீழுள்ள கைத்தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2023 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்தல்

அமைச்சின் கீழுள்ள கைத்தொழிற்பேட்டைகளுக்காக 1200 மில்லியன் ரூபாவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழுள்ள கைத்தொழிற்பேட்டைகளுக்காக 100 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் காணப்படுகின்ற கைத்தொழில் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, கூடுதலான நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துமாறு கௌரவ றிஸாட் பதியுதீன் அவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அது பற்றி கவனம் செலுத்தப்படுமென கௌரவ தவிசாளரினால் அறிவிக்கப்பட்டது.

## 3.5 கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.5.1 களிமண்ணை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி அளிப்பது குறித்து, பிரதேச செயலாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல்களை வழங்குதல்.

ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் எழுத்துமூலம் தெரியப்படுத்தி உள்ளதாக தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் தெரிவித்தார்.

பிரஸ்தாபிக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக பிரதேச செயலகங்களை அறிவுறுத்தியுள்ள ஆவணத்தின் பிரதி ஒன்றை கௌரவ உறுப்பினருக்கு வழங்குமாறு கௌரவ தவிசாளரினால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

### 3.5.2 களிமண்ணை ஏற்றிச் செல்ல கமநல சேவை நிலையங்களுக்கு அனுமதி அளித்தல்.

கமநல சேவை நிலையங்கள் களிமண்ணை மூலப்பொருளாக உபயோகித்து உற்பத்திகளை மேற்கொள்வதால், கமநல சேவை நிலையங்களுக்கும் களிமண்ணை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி அளிக்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

களிமண் கைத்தொழிலாளர்களுக்கு சிரமமின்றி களிமண்ணை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்குவது பற்றி பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட இணைப்புக் குழுக்களுக்கு அறிவுறுத்துமாறு கௌரவ தவிசாளரினால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

### 3.5.2 காரீய சுரங்க கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளை நவீனமயப்படுத்தி அந்நியச் செலாவணியை ஈட்டுதல்

காரீய சுரங்கக் கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளில் பெறுமதியைச் சேர்த்து (valueaddition) ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டக் கூடியதாக இருக்குமென கௌரவ உறுப்பினரினால் தெரிவிக்கப்பட்டதோடு, அது சம்பந்தமாக புதிய வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரீய சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு சுமார் 60 மெற்றிக்தொன் காரீயத்தை உற்பத்தி செய்வதாகவும், காரீய சுரங்கங்கள் அமைந்துள்ள காணி குறித்த பிரச்சினைகள் எழுந்துள்ளதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

காரீய சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம், கொடுப்பனவுகள் போன்றவை சமகாலத்தில் நிலவும் வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதாக இல்லாததால் இவர்களுக்கு தொழிலுக்கு நிகரான சம்பளத் திட்டம் ஒன்றுடனான வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்கும் பணிகளை ஒழுங்கமைத்து வருவதாக கௌரவ இராஜாங்க அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

காரீயத்திற்குப் பெறுமதியைச் சேர்க்கும் 03 படிநிலைகள் காணப்படுவதாக அதாவது, அகழ்ந்தெடுக்கப்படும் காரீயம் சுத்திகரிக்கப்பட்டு பெறுமதி சேர்க்கப்படுவதன் மூலம் தூய காரீயம் உற்பத்தி செய்யப்பட்டு, அதனைப் பயன்படுத்தி இறுதி முடிவுப் பொருளைத் தயாரிக்கும் எதிர்ப்பார்ப்புடன் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக கஹட்டகஹ கிறபைட் கம்பெனியின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, சுத்திகரிப்பு பொறி ஆலை மற்றும் அரைத்தல் பொறி ஆலை தாபிக்கப்பட்டதன் பின்னர் காரீயத்திற்குப் பெறுமதி சேர்க்கும் பணியில் 40% - 50 % சதவீத அளவு பூர்த்தி செய்யப்படும் எனவும், அதன்மூலம் இறுதி உற்பத்திக்கு போதுமான அளவில் தரத்துடன் கூடிய காரீயத்தை உற்பத்தி செய்ய முடியும் எனவும் கஹட்டகஹ கிறபைட் கம்பெனியின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

2025ஆம் ஆண்டளவில் இலங்கையில் உள்ள காரீயத்தைப் பயன்படுத்தி உலக சந்தையில் கேள்வி காணப்படுகின்ற இறுதி உற்பத்தியை வழங்க எதிர்ப்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டது.

காரீய சுத்திகரிப்பு இயந்திரத்தை நிறுவுவதற்கு அவசியமான கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதாகவும், அந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டுமெனவும் கஹட்டகஹ கிறபைட் கம்பெனியின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களில் அதிக அளவில் முதலீடுகள் கிடைக்கப் பெற்றதாகவும், காரீயத்திற்கு அதிகப்படியான கேள்வி உள்ளதாகவும் கஹட்டகஹ கிறபைட் கம்பெனியின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஆகவே காரீய உற்பத்திக்குப் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் எனவும், காரீயத்திற்குப் பெறுமதி சேர்க்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும் கஹட்டகஹ கிறபைட் கம்பெனியின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

நாட்டினுள் காரீயக் கைத்தொழிலில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பணியாற்ற வேண்டும் எனவும், கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அலுவலர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இலங்கையில் காரீயத்திற்கு நிலவும் கேள்விக்கு நிகரான நிரம்பலை வழங்குவதில் சிக்கல் காணப்படுவதால் 2023ஆம் ஆண்டில் காரீய கைத்தொழிலுக்குப் பெறுமதி

சேர்க்கும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கும், காரீய கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும்பொருட்டு முதலீட்டாளர்களை அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

பெறுமதி சேர்க்கும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக காரீய சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பில் அலுவலர்களின் கவனம் குவிக்கப்பட வேண்டுமெனவும், அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் கௌரவ சாமர சம்பத் தசநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

உற்பத்தி இயலளவை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு கொடுப்பனவுத் திட்டம் (Productivity based Incentive Scheme) ஒன்றைத் தயாரிக்குமாறு கௌரவ தவிசாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

கடந்த 18 வருட காலமாக காரீய சுரங்கங்களைக் கொண்டு நடத்தும் காணிகள் குறித்த சட்டச் சிக்கல்களுக்குத் தீர்வு கிடைத்திருக்கவில்லை எனவும், மிகக் குறுகிய காலத்தில் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்ததாகவும் கஹட்டகஹ கிறபைட் கம்பெனியின் தலைவர் தெரிவித்தார்.

காரீய சுரங்க கைத்தொழிலைக் கட்டியெழுப்பும் பொருட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக காரீய படிவத்தின் சேமம் எவ்வளவு என்பதை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் அளவீடு செய்து அங்கீகரிக்கப்பட்ட அறிக்கை ஒன்றை வழங்குமாறு கஹட்டகஹ கிறபைட் கம்பெனியின் தலைவரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் சுற்றாடல் அமைச்சின் கீழ் இயங்கி வருவதால் அதற்குரிய பணிகளை மேற்கொள்ளுமாறு சுற்றாடல் அமைச்சுக்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும் கிறபைட் மாத்திரமன்றி இல்மனைட், ரூட்டைல், மொனேசையிற்று போன்ற ஏனைய மூலப் பொருள்களின் சேமம் பற்றிய அறிக்கை ஒன்றையும் வழங்குமாறு கோரிக்கை விடுத்ததாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.6 மாத்தளை எலஹெர பிரதேசத்தில் சாமானியர்களுக்கு இரத்தினக்கல் அகழ்வுத் தொழிலில் ஈடுபட வாய்ப்பளித்தல்- கௌரவ நாலக கோட்டேகொட

மாத்தளை எலஹெர பிரதேசத்தில் பெக்கோ இயந்திரங்களைப் பயன்படுத்தி இரத்தினக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதாகவும், உயர் பெறுமதி மற்றும் தரத்தில் கூடிய இரத்தினக் கற்கள் பிரதேசத்தில் காணப்படுகின்றன என்பதையும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இரத்தினக்கல் அகழும் தொழில் பெரிய வர்த்தகர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அனுகூலங்கள் சிறிய எண்ணிக்கையினர் மத்தியில் மட்டும் பிரிந்து செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே, சாமானியர்களும் இரத்தினக்கல் அகழ்வுத் தொழிலில் ஈடுபட்டு அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான அனுமதிப் பத்திரம் (One Time Permit) வழங்கும் வழிமுறையொன்றைத் தயாரிக்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சூழல் ரீதியான காரணிகளையும் கவனத்தில் கொண்டு, மேற்படி கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

கௌரவ இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க அவர்களும் இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

## 3.7 கௌரவ றிஸாட் பதியுதீன் அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.7.1 தும்புக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்குப் போதுமான அனுகூலங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

புத்தளம் மதுரங்குழி பிரதேசத்தில் தும்புக் கைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கு, ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட கொடுப்பனவு மட்டுமே தற்போது வழங்கப்படுவதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கைத்தொழிலில் ஈடுபட்டுவருகின்ற பிரதான ஏற்றுமதியாளர்களை அழைத்து, தும்புக் கைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்ற தொழிலாளர்களுக்குப் போதுமானதும் நியாயமானதுமான கொடுப்பனவை வழங்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தும்புக் கைத்தொழில் ஏற்றுமதியாளர்களுடன் மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடி அவர்களுக்கு நியாயமான ஒரு தொகையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தியதாகவும், இந்தக் கைத்தொழிலில் ஈடுபடக்கூடிய புதிய ஏற்றுமதியாளர்கள் இருப்பின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் கலந்துரையாடி புதிய முதலீடுகளுக்கான வாய்ப்புகளை வழங்க முடியுமெனவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.7.2 ஆனையிறவு, மாந்தை உப்பளங்களை அரசு தனியார் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டு நடத்துதல்.

ஆனையிறவு மற்றும் மாந்தை சோல்ட் ஆகிய இரண்டு நிறுவனங்களும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கி வருவதாகவும், அந்த உப்பளத்தை அரசு தனியார் பங்குடைமையின் கீழ் கொண்டுநடத்துவதற்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்தபோது இந்த உப்பளத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிதி இருக்கவில்லை எனவும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரியப்படுத்தினார்.

எவ்வாறாயினும், தற்போது ஆனையிறவு மற்றும் மாந்தை உப்பளங்களினால் ஈட்டப்பெறுகின்ற வருமானம் இந்த உப்பளத்தை அபிவிருத்தி செய்வதற்கு போதுமானதாக இருப்பதால், அரசு தனியார் பங்குடைமை அவசியமற்றது எனவும் 06 மாத காலத்தினுள் உரிய அபிவிருத்திப் பணிகளின் முதல் கட்டத்தைப் பூர்த்தி செய்ய முடியும் எனவும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்டவாறு, அந்த அபிவிருத்தி பணிகளைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

### 3.7.3 பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனியை அபிவிருத்தி செய்தல்.

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைக் கொண்டு மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள அபிவிருத்திப் பணிகள் நடைபெறுகின்ற விதத்தை கௌரவ உறுப்பினர் வினவினார்.

அதன் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து அரசு தனியார் பங்குடைமை நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கம்பெனியின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்ய எதிர்ப்பார்ப்பதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் இரசாயன பொருள் உற்பத்தி வலயம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும், பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனியில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இரசாயன பொருள் உற்பத்தி வலயத்தினுள் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இரசாயன பொருள் உற்பத்தியாளர்களுக்கு அழைப்பு விடுக்க எதிர்ப்பார்ப்பதாகவும் தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் கைத்தொழில் வலயத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்திற்கு ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பத்திரிகை விளம்பரம் இந்த வாரம் பிரசுரிக்கப்படும் என பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனியின் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

பரந்தன் பிரதேசத்தில் கைத்தொழிலை முன்னெடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைக் கொண்டு இந்த கருத்திட்டம் செயற்படுத்தப்படுவதாகவும், அமைச்சிலிருந்து நிதி ஒதுக்கப்பட்ட பின்னர் அந்தத் தொகை மீள் நிரப்பல் செய்யப்படும் எனவும் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனியின் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

### 3.7.4 மில்லனிய கைத்தொழில் பேட்டையின் தற்போதைய நிலைமை

மில்லெனிய கைத்தொழில் பேட்டை குறித்து சூழல் ரீதியான சிக்கல் தோன்றியதாகவும், உள்ளூர் அதிகார சபைகளால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகவும் கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போது அந்தக் கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்படும் நிலையில் இருப்பதாகவும் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனியின் பொது முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே 14 கைத்தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரவேச வழி (Access Road) அமைக்கும் பணிகள் நிறைவுக்கு வந்தவுடன் கைத்தொழில் பேட்டையை ஆரம்பிக்க முடியுமௌ கௌரவ தவிசாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க காணிகளை வழங்கும்போது விளம்பரங்கள் மூலம் பொதுமக்களை விழிப்புணர்வு செய்யுமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணிகளில் தற்போது வெறுமையாக காணப்படுகின்ற காணிகள் மற்றும் குறைபயன்பாடுடைய காணிகள் பற்றிய விவரங்களைப் பெற்று, அவை குறித்து பத்திரிக்கை விளம்பரம் மூலம் பொதுமக்களை விழிப்புணர்வு செய்து மீண்டும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

### 3.7.5 மணலாறு மற்றும் மன்னார் கைத்தொழில் பேட்டைகளின் தற்போதைய நிலைமை

இக் கைத்தொழில் பேட்டைகள் தொடர்பான அறிக்கை ஒன்றை வழங்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கைத்தொழில் பேட்டைகளின் தற்போதைய நிலைமை குறித்து தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பிரதிகளை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்குமாறு கௌரவ தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

## 3.8 கௌரவ வருண லியனகே அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.8.1 எஹேலியகொடையில் நடந்த இரத்தினக்கல் ஏல விற்பனையின் இலாபம்

கடந்த ஆண்டில் (2021) ஒக்தோபர் மாதத்தில் மேற்படி ஏல விற்பனை மூலம் சுமார் 12 மில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுக்கொள்ள முடிந்ததாக இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

### 3.8.2 கடுவளை பிரதேசத்தில் காணப்படுகின்ற இரத்தினக்கல் பட்டை தீட்டும் பயிற்சி நிலையத்தை பொருத்தமான பிரதேசத்தில் அமைத்தல்

அதிக ஆகுசெலவில் கொண்டு நடத்தப்படுகின்றதும் கடுவளை பிரதேசத்தில் அமைந்துள்ளதுமான இரத்தினக்கல் பட்டை தீட்டும் பயிற்சி நிலையத்தை இரத்தினபுரி அல்லது பேருவளை பிரசேத்தில் அமைக்குமாறு கௌரவ உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அடுத்த ஆண்டிலிருந்து பேருவளை, நிவித்திகல, மாத்தளை, லக்கல உட்பட்ட பிரதேசங்களில் இரத்தினக்கல் பட்டை தீட்டும் பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை ஆகிய இரண்டு நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கான முன்மொழிவும் அடங்குவதாகவும் அதன்மூலம் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளில் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனவும் கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டின் சனத்தொகையில் 10-20 வயதுக்கு இடைப்பட்டவர்களின் தொகை 35 இலட்சம் பேர் எனவும், அடுத்து வரும் சில ஆண்டுகளில் அந்தத் தொகை தொழில் சந்தையுடன் இணைவதால் இவர்கள் தொழிலுக்குத் தேவையான பயிற்சியைப் பெற வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

### 3.8.3 ஏற்றுமதி செய்யப்படுகின்ற இரத்தினக் கற்களின் பெறுமதியில் 5% தொகையைக் கொண்டு இரத்தினக் கற்களின் பெறுமதியை அளவிடுவதற்கான இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்.

இரத்தினக் கற்களின் கடினத்தன்மை (Hardness) குறித்த தரத்தை பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூட இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்களிடமிருந்து 5% தொகையைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டின் தற்போதைய நிலைமையை கௌரவ உறுப்பினர் வினவினார்.

அந்த வகையில் 2011ஆம் ஆண்டளவில் தேசிய இரத்தினங்கள், ஆபரண அதிகார சபை மற்றும் இரத்தினக்கல், ஆபரண சங்கத்திற்கு இடையில் எல். ஜீ. எல் எனப்பெறும் ஒரு கம்பெனி உருவாக்கப்பட்டபோதும், சட்டத் துறை தலைமை அதிபதியிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின்படி அந்தக் கம்பெனியை கொண்டு நடத்துவதில் சட்டச் சிக்கல் ஏற்பட்டதாகவும் இரத்தினங்கள், ஆபரண அதிகார சபையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கருமத்திற்காக ஒதுக்கப்பட்ட சுமார் 200 மில்லியன் ரூபா அந்தக் கம்பெனிக்குச் சொந்தமான கணக்கில் இருப்பதாகவும் சட்டச் சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இரத்தினங்கள், ஆபரண அதிகார சபையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கம்பெனியை ஒழித்தல் நடவடிக்கை எடுத்து, குறித்த வைப்புத் தொகையை இரத்தினக் கற்களின் தரத்தை அளவிடுவதற்கான ஆய்வுகூடம் ஒன்றை அமைக்க பயன்படுத்துவதற்கு அவசியமான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு அதுபற்றி தெரியப்படுத்துமாறு கௌரவ தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

மேற்படி கம்பெனியை ஒழித்தல் மற்றும் கம்பெனிக்குச் சொந்தமான தொகையை விடுவித்துக் கொள்வதற்கு சட்டத்துறை தலைமை அதிபதி அத்துடன் கம்பெனி பதிவாளர் தலைமை அதிபதியின் ஆலோசனைகளைப் பெற்று, ஆய்வுகூடத்திற்கு அவசியமான இயந்திரங்களைக் கொள்வனவு செய்யத் தேவையான தொகையின் மதிப்பீடு ஒன்றையும் உள்ளடக்கி அடுத்து நடைபெறவிருக்கும் குழு அமர்வில் அது சம்பந்தமான அறிக்கையை முன்னிலைப்படுத்துமாறும், 03 மாத காலத்தினுள் மேற்படி எந்திரத்தைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

## 3.9 கௌரவ சஜித் பிரேமதாச அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.9.1 பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் (SMEs) எதிர்நோக்கும் சிக்கல்கள்

நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு சுமார் 50% பங்களிப்பை வழங்கி வருகின்ற மற்றும் சுமார் 45 இலட்சம் தங்கி வாழ்பவர்களைக் கொண்டுள்ள எமது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் பாரிய சிரமங்களை எதிர் நோக்குவதாக கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அதற்கு நிவாரணமாக வழங்கப்பட்ட நிதி மூலதனத்திற்கு உயர் வட்டியை செலுத்த வேண்டி இருப்பதால் அவர்களின் கடன் சுமை மேலும் தீவிரமடைந்துள்ளதாக கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்ததுடன், அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கவிருக்கும் நடவடிக்கை குறித்தும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் வினவினார்.

மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளதற்கு இணங்க பணவீக்கம் கிரமமாக குறையும்போது அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் வட்டி வீதத்தை 15 % - 20% இடைப்பட்ட ஒரு தொகைக்கு குறைக்க முடியுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளைக் கட்டியெழுப்புவதற்காக குறைவான வட்டி வீதத்தின் அடிப்படையில் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குவதற்காக வரவு செலவு திட்டத்தில் 02 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

வங்கிக் கட்டமைப்பின் ஊடாக விண்ணப்பம் செய்யும் தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கியாளர்கள், திறைசேரி பிரதிநிதிகள் மற்றும் அமைச்சுக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்றின் மூலம் அந்த நிதி வழங்கப்பட வேண்டிய பொருத்தமான தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கடன் தொகை வழங்கப்படுமென கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

தொழில் முயற்சியாளர்கள் தெரிவு வெளிப்படைத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டுமென கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பல்வேறு அமைப்புகளின் கீழ் அரசாங்க கருத்திட்டங்களை முன்னெடுத்த ஒப்பந்தக் காரர்களுக்குரிய விலைப் பட்டியல்களைச் செலுத்தித் தீர்க்க 02 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

நிதி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட மேற்படி தொகையை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கும் செயற்பாடு வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய இருதரப்பும் பாதுகாக்கப்படுகின்ற நடுநிலைக் கொள்கையை அரசாங்கம் கடைபிடிக்க வேண்டுமென கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

குளியல் அறை சாதன உற்பத்திகளுக்கு விலைக் கட்டுப்பாட்டை கொண்டு வரவேண்டும் எனவும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதற்கான இடையீட்டை மேற்கொள்ள வேண்டும் எனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர அவர்கள் தெரிவித்தார்.

அவ்வாறின்றேல், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையினை காரணங்காட்டி அநாவசிய விலை அதிகரிப்பு செய்யப்படும் எனவும், ஆகவே செலவுக்கு நிகரான நியாய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர அவர்கள் தெரிவித்தார் தெரிவிக்கப்பட்டது.

### 3.9.2 இலங்கையில் தொழிற்படு நிலையிலுள்ள பாரம்பரிய கைத்தொழில் கிராமங்கள்

இத்தகைய கைத்தொழில்கள் குறித்து செயலாற்றும் நிறுவனங்களின் தகவல்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இலங்கையில் தொழிற்படு நிலையிலுள்ள பாரம்பரிய கைத்தொழில் கிராமங்கள் அமைந்துள்ள மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்கள் உட்பட்ட தகவல்கள் அடங்கிய பட்டியல் ஒன்றையும், பாரம்பரிய கைத்தொழில் விடயத்தில் செயலாற்றும் நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் பெயர்கள், தொலைபேசி எண்கள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்குமாறு கௌரவ தவிசாளரால் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

### 3.9.3 தேசிய வடிவமைப்பு நிலையம், லக்சல மற்றும் சலுசல ஆகிய நிறுவனங்கள் ஒன்றாக ஒழுங்கமைந்து நாட்டின் கைத்தொழில்களைக் கட்டியெப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்தல்.

தேசிய வடிவமைப்பு நிலையம், லக்சல மற்றும் சலுசல ஆகிய நிறுவனங்கள் ஒன்றாக ஒழுங்கமைந்து நாட்டின் கைத்தொழில்களைக் கட்டியெப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அந்த நிறுவனங்கள் பாரம்பரிய நிலையிலிருந்து அன்னியப்பட்டு புதிய உற்பத்திகளை அறிமுகஞ் செய்யும் புதிய தொலைநோக்குடன் முன்னோக்கி செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வெளிநாடுகளைச் சேர்ந்த வர்த்தக அலுவல்கள் பற்றிய உத்தியோகத்தர்களுடன் தாம் தற்போது கலந்துரையாடி வருவதாக கௌரவ இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

கொழும்பு கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம், மொரட்டுவ வடிவமைப்பு நிலையம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றின் ஊடாக உலகச் சந்தைக்கு அனுப்பக்கூடிய தரமான பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

தேசிய அருங்கலைகள் பேரவையானது "Crafting Ceylon" என்ற நாடளாவிய நிகழ்ச்சியை நடத்தி வருவதாகவும், குறைந்தளவில் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உலக சந்தைக்கு புதிய தயாரிப்புகளை எவ்வாறு அறிமுகப்படுத்துவது என்பது குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகவும் தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் உலகச் சந்தைக்காக சுமார் 100 ஏற்றுமதியாளர்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் பாரம்பரிய உற்பத்திப் பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்புகள் காணப்படுவதாகவும், அந்த நாடுகளின்

சந்தைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தேசிய அருங்கலைகள் பேரவை, லக்சல உள்ளிட்ட சில நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியில் கலந்துகொண்டதாகவும் இதன்போது இடம்பெற்ற கலந்துரையாடலின் பலனாக இலங்கையின் உற்பத்திகளை தாய்லாந்து சந்தைக்கு வழங்குவதற்கான விற்பனை கூடமொன்றை பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இலங்கை கைவினைஞர்களின் படைப்புகளை தாய்லாந்தில் விற்பனை செய்வதற்கு சலுகை விலையில் விற்பனைக் கூடங்களை கொள்வனவு செய்வதற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொருட்களை சந்தைப்படுத்தும்போது இடைத்தரகர்கள் அதிகளவான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதாகவும் இதனால் உற்பத்தியாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

எனவே, உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக்கூடிய முறையொன்றை உருவாக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், இதற்கு தேசிய அருங்கலைகள் பேரவை ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

இதற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை (NEDA) என்பவற்றினால் 2 இணையதளங்கள் உருவாக்கப்பட்டதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

தேசிய அருங்கலைகள் பேரவை “lakshilpa.com” என்ற பெயரில் உலகெங்கிலும் உள்ள நுகர்வோருக்காக இணையதளமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் தற்போது கொள்வனவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, "fair trade" எனும் எண்ணக்கருவின் கீழ் கைத்தொழிலாளர்களிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு, தேசிய அருங்கலைகள் பேரவையின் காட்சி கூடங்களில் விற்பனை செய்யப்படுவதாக தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

"மேட் இன் ஸ்ரீ லங்கா ஓஆர்ஜீ" (madeinsrilanka.org) என்ற பெயரில் இணையதளம் உருவாக்கப்பட்டதாக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது. தற்சமயம் இத்திட்டத்தில் சுமார் 700 தொழில் முயற்சியாளர்கள் இணைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கான நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு உலகின் முன்னணி நிறுவனங்கள் ஈடுபட்டு வருவதாகவும், அடுத்த ஆண்டு (2023) முதல் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனைத்து இணையவழி வர்த்தக வசதிகளுடன்கூடிய முதன்மையான இணையத்தளம் உருவாக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இணையத்தளம் தொடர்பில் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு அறிவூட்டுவதற்காக யுனிடோ நிறுவனத்தின் உதவியுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களினால் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளும் ஆரம்பிக்கப்பட்டதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு தலா 250,000/- வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக யுனிடோ நிறுவனத்தின் உதவியை நாடுமாறும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

### 3.9.4 கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள்

நாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அதிகாரிகள் நிலையப்படுத்தப்பட்டுள்ள முறைமை தொடர்பில் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரினால் வினவப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 05 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், 03 பிரதேச செயலகங்களுக்கு ஒரு தொழில்முயற்சி முகாமையாளர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தவிர, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினால் (NEDA) பிரதேச செயலாளர் பிரிவொன்றுக்கு தோராயமாக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

டயலொக் நிறுவனம் மற்றும் மிலேனியம் இன்ஃபொமெட்டிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஈ-பே (e-bay) மற்றும் அமேசன் (Amazon) போன்ற வர்த்தக நிறுவனங்களின் ஊடாக உலகில் உள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்கப்படும் என கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்வதற்கான பிரத்தியேக இணையதளங்களை உருவாக்குவதற்கு வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான பயிற்சி நடவடிக்கைகள் அடுத்த வாரத்தில் தொடங்கப்படும் எனவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

"விதாதா" நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவும் கைத்தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகவும், பயிற்சியை நடத்தும் அனைத்து நிறுவனங்களுக்குமிடையில் ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் எனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

இல்லையெனில், அனைத்து பயிற்சி நிகழ்ச்சிகளிலும் ஒரே தொழில்முயற்சியாளர்கள் தொடர்ந்தும் பங்கேற்கும் நிலை உள்ளதென்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

**4.** குழு பி.ப 04.30 மணிக்கு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

---

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழு
## முதலாவது கூட்டம் – 2022 நவம்பர் 25

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்**

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரன (தவிசாளர்)
கௌரவ லோஹான் ரத்வத்தே (இராஜாங்க அமைச்சர்)
கௌரவ (கலாநிதி) வீ.இராதாகிருஷ்ணன்
கௌரவ சம்பத் அதுகோரல

**சமுகமளித்திருந்த குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத உறுப்பினர்கள்**

கௌரவ சஜித் பிரேமதாச
கௌரவ ஜகத் புஷ்பகுமார
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ அருந்திக்க பர்னாந்து
கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்
கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த
கௌரவ எம். எஸ். தௌபீக்
கௌரவ எம். உதயகுமார்
கௌரவ அகில எல்லாவல
கௌரவ உதயகாந்த குணதிலக்க
கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய
கௌரவ இசுரு தொடன்கொட
கௌரவ சுதத் மஞ்சுல
கௌரவ குணதிலக ராஜபக்ஷ
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
கௌரவ வீரசுமன வீரசிங்ஹ
கௌரவ சமன்பிரிய ஹேரத்

**1. ஆண்டறிக்கைகளை ஆராய்தல்**

**1.1** 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான லங்கா சீனி கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் வருடாந்த அறிக்கைகள்
**1.2** 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான பனை அபிவிருத்தி சபையின் ஆண்டறிக்கைகள்
**1.3** 2015 ஆம் ஆண்டிற்கான துறுசவிய நிதியத்தின் வருடாந்த அறிக்கை
**1.4** 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை
**1.5** 2017 ஆம் ஆண்டிற்கான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்
**1.6** 2019 ஆம் ஆண்டிற்கான துறுசவிய நிதியத்தின் வருடாந்த அறிக்கை
**1.7** 2019 ஆம் ஆண்டிற்கான தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை
**1.8** 2019 ஆம் ஆண்டிற்கான வ/ப குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை

1.9 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை

1.10 2019 ஆம் ஆண்டிற்கான சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை

1.11 2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை

1.12 2020 ஆம் ஆண்டிற்கான துறுசவிய நிதியத்தின் வருடாந்த அறிக்கை

1.13 2020 ஆம் ஆண்டுக்கான சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை

ஆராயப்பட்டதன் பின்னர் குழு, பாராளுமன்றத்தினால் பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட மேற்குறித்த வருடாந்த அறிக்கைகள் தொடர்பில் இணக்கம் தெரிவித்ததுடன் அது பற்றிய குழுவின் அறிக்கை , கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண அவர்களினால் 2022 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தது.

## 2. கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்

### 2.1 தலாவாக்கலை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தில் புகைப்படக்கலைஞர் திரு. ராஜித நிரோஷன் கமகேவின் பதவி மற்றும் பதவியுயர்வு இழக்கப்பட்டமை தொடர்பில் அவரால் முன்வைக்கப்பட்டுள்ள மீள் கோரிக்கை - கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன (பிரேரணை இலக்கம் 26)

கௌரவ உறுப்பினருக்கு இந்த பிரேரணைக்கான பதில்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளரினால் சபையில் தெரிவிக்கப்பட்டது.

## 3. ஏனைய நடவடிக்கைகள்

### 3.1 கௌரவ உதயகாந்த குணதிலக்க அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

#### 3.1.1 தெங்குப் பயிர்ச் செய்கைக்கு சேதம் விளைவிக்கும் வெள்ளை ஈ வேகமாக பரவுவது தொடர்பான பிரச்சினை

வெள்ளை ஈ தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள தென்னை மரங்களில் சுமார் 50% வீதமானவற்றில் தென்னோலைகள் வீழ்ந்துள்ளதுடன் விளைச்சலிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும், தெங்குப் பயிர்ச் செய்கைக்கு குரங்குகள் மற்றும் மைட்டா பூச்சிகள் சேதம் விளைவிப்பதால் விளைச்சல் மேலும் தீவிரமாக குறைவடைந்துள்ளதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்

வெள்ளை ஈக்கள் ஏற்படுத்தும் பாதிப்புகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சில பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தும்போது நடைமுறை ரீதியான பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதால் அவற்றுக்கு உடனடித் தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை வைத்தார்.

கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்நோயின் தீவிரத்தன்மை அதிகரித்துள்ளதாகவும், இப்பூச்சிகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான பூச்சிக்கொல்லி தெளிக்கும் இயந்திரங்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் தற்போது இவ்வியந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தெங்குப் பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் ஆகியன இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் தெரிவித்தார்.

முதலில் இதற்குத் தீர்வாக எட்டாரா மற்றும் மார்ஷல் 20 ஆகிய இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், அதன் மூலம் சுற்றுச்சூழலுக்கும் சாதகமான பூச்சிகளுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போது வேப்ப எண்ணெய் மற்றும் சவர்க்கார கரைசல் பயன்படுத்தப்படுவதாக தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பூச்சிகளால் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக மேலும் தலைவரால் குறிப்பிடப்பட்டது.

தெங்குப் பயிர்ச்செய்கை சபையிடம் நாடளாவிய ரீதியில் 200 பூச்சிமருந்து தெளிக்கும் இயந்திரங்கள் காணப்பட்டதாகவும், தேவைக்கு ஏற்ப அந்த இயந்திரங்கள் பூச்சித் தாக்குதல் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 11 இயந்திரங்கள் கேகாலை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சுமார் 26,000 ஏக்கர் தென்னங் காணிகளை உள்ளடக்கியதாக குறித்த காணி உரிமையாளர்களுக்கு இந்த அனர்த்தத்தை தடுப்பது குறித்து விழிப்புணர்வூட்டப்பட்ட போதிலும், தீர்வுகளை அமுலாக்குவதற்குத் தேவையான உபகரணங்களில் தட்டுப்பாடு காணப்படுவதாக தலைவர் விளக்கமளித்து மேலதிகமாகவும் தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டுள்ள கேகாலை மாவட்டத்தின் பிரதேசங்களை மீள்பரிசீலனை செய்து தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைவருக்கு கௌரவ தவிசாளரினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

வடமேல் மாகாணத்திலும் இவ்வனர்த்தம் தீவிரமாக காணப்படுவதாக கௌரவ சமன்பிரிய ஹேரத் தெரிவித்தார்.

இவ்வாறான பிரதேசங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கை சபை என்பவற்றின் தலைவர்களுக்கு கௌரவ தவிசாளரினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

### 3.1.2 தென்னம் பிள்ளைகளை விற்பனை செய்தல் தொடர்பான பிரச்சினை

கடந்த காலங்களில் தனியார் தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட தென்னம் பிள்ளை உற்பத்தியை ஊக்குவிக்கும் முயற்சியின் பலனாக தென்னை நாற்று மேடை பராமரிப்பாளர்களினால் தென்னம் பிள்ளைகள் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், தற்போது இத் தென்னம் பிள்ளைகளை விற்பனை செய்ய முடியாத நிலை தோன்றியிருப்பதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் தென்னை நாற்று மேடைகளை விரிவுபடுத்தும் நோக்கில் தெங்குப் பயிர்ச் செய்கை சபை மக்களுக்கு தென்னை விதைகளை வழங்கியபோதிலும், பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட தென்னம்பிள்ளைகளை அரசாங்கத்தினால் கொள்வனவு செய்ய முடியாமையினால், உற்பத்தியாளர்கள் இப்பிரச்சினைக்கு முகங் கொடுத்திருப்பதாக கௌரவ அருந்திக பர்னாந்து தெரிவித்தார்.

எனவே, தனியார் துறையினரையேனும் இணைத்துக்கொண்டு இதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கௌரவ உறுப்பினரினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் 02 மில்லியனாக இருந்த தென்னம் பிள்ளைகளின் உற்பத்தியை இந்த ஆண்டு குறைந்தபட்சம் 6 மில்லியனாக உயர்த்துவதற்காக ஒரு அலகிலிருந்து 5000 தென்னம் பிள்ளைகளை உற்பத்தி செய்யும் நோக்கில் தனியார் தொழில்முயற்சியாளர்கள் ஊடாக நாற்று மேடைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தலைவர் குறிப்பிட்டார்

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் தென்னம் பிள்ளைகளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியைக் கொண்டு கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும் கௌரவ தவிசாளரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், தற்போதைய பொருளாதார நிலைமையின் காரணமாக உறுப்பினர்களுக்கு மேற்படி நிதி கிடைக்காத காரணத்தினால் இப்பிரச்சினை ஏற்பட்டதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இந்த தென்னம் பிள்ளைகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தவிர, தென்னம் பிள்ளைகளை தனியாருக்கு விற்பனை செய்வதற்கு உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றை கொள்வனவு செய்வதற்கு 296 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் கௌரவ தவிசாளரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கம் புதிய தென்னம் பிள்ளைகளை கொள்வனவு செய்யும் போது இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட தென்னம் பிள்ளைகளை கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை வழங்குமாறு கௌரவ அருந்திக பர்னாந்து கோரிக்கை விடுத்தார்.

தென்னம் பிள்ளைகளை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றால், அவற்றை கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும், இல்லையெனில் கப்ருக்க சங்கங்கள் ஊடாகவேனும் இந்த தென்னம் பிள்ளைகளை விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் பரிசீலிக்கப்படுவதாகவும் தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

எனினும், தற்போது நிறுவனத்திடம் தென்னம் பிள்ளைகள் மிகையாக இருப்பதால், கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் இந்த தென்னம் பிள்ளைகளை, மீள்விநியோகம்

செய்வதற்கு திட்டமொன்றை ஏற்பாடு செய்ய வேண்டிய தேவைப்பாடு காணப்படுவதாகவும் மேலதிகமாகவும் தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் தெங்குப் பயிர்ச் செய்கை சபையின்கீழ் உள்ள தென்னை நாற்று மேடைகளில் எத்தனை தென்னம் பிள்ளைகள் காணப்படுகின்றதென கௌரவ அருந்திக பர்னாந்து வினவினார்.

ஒரு தென்னை நாற்று மேடையில் சுமார் 5000 தென்னம் பிள்ளைகள் வீதம், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 100 தென்னை நாற்று மேடைகளில் தென்னம் பிள்ளைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியும் 5 இலட்சம் தென்னம் பிள்ளைகளை உற்பத்தி செய்திருப்பதாக அதன் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

தென்னம் பிள்ளைகளை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து நிதியை ஒதுக்கிக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளையில், அதற்கு இணையாக தென்னம் பிள்ளைகளை பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு சலுகை விலையில் வழங்குவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் அக்கம்பனிகளுடன் கலந்துரையாடுமாறு கௌரவ தவிசாளரினால் உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

### 3.1.3 அனைத்து வகையான தென்னம் பிள்ளைகளையும் ஒரே நாளில் விற்பனை செய்யாமை தொடர்பான பிரச்சினை

அனைத்து வகை தென்னம் பிள்ளைகளும் ஒரே நாளில் விற்பனை செய்யாமல், ஒவ்வொரு வகை தென்னம் பிள்ளைகளை தனித்தனியாக விற்பனை செய்வதற்கு தனித்தனி நாட்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக பதிவாகியுள்ளதாகவும், இதனால் நுகர்வோர் சிரமத்திற்கு முகம் கொடுப்பதாகவும் கௌரவ உறுப்பினரினால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலைமை இற்றைவரையில் அறிவிக்கப்படவில்லையென தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் தெங்குப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர்களினால் தெரிவிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ தவிசாளரினால் உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

### 3.1.4 ஏற்றுமதிப் பயிர்களின் நாற்று மேடை கன்றுகள் இல்லாமை தொடர்பான பிரச்சினை

ஏற்றுமதியின் பொருட்டு கருவா, மிளகு மற்றும் பாக்கு செய்கையாளர்களுக்கு புதிய நாற்று மேடை கன்றுகளை வழங்குவது குறைந்திருப்பதால், ஏற்றுமதி நடவடிக்கைகளை ஊக்குவிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பிர் கோரிக்கை விடுத்தார்.

தற்போதுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு ஏற்றவாறு இந்த ஆண்டும் கறுவா மரக்கன்றுகள் உள்ளிட்ட ஏனைய வகை மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த

ஆண்டிலும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அரசாங்கம் கருவா மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கிய போதிலும், கருவா மரக்கன்று விநியோகத்தர்கள் அதன் விற்பனை விலையை அதிகரித்துள்ளமையால், அடுத்த ஆண்டு தொடக்கம் கொள்வனவாளர்களிடமிருந்து ஒரு கருவா மரக்கன்றுக்கு 07 ரூபாவை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், பாக்கு மற்றும் வெற்றிலை போன்ற விளைபொருட்களுக்கு வெளிநாட்டு சந்தையில் அதிக கேள்வி காணப்படுவதால், அடுத்த ஆண்டு இவ்வகை கன்றுகளை கூடுதலாக உற்பத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கௌரவ தவிசாளரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தனது பிரதேசத்தில் உள்ள ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்குச் சொந்தமான கஸ்னாவவத்த பண்ணையில் நாற்று மேடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரித்து தனியார் துறையினரிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் கன்றுகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் கௌரவ உதயகாந்த குணதிலக்க தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

கஸ்னாவவத்தை நாற்று மேடை உள்ளிட்ட ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்குச் சொந்தமான ஏனைய நடுத்தர அளவிலான நாற்று மேடைகளின் கொள்திறனை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) தெரிவித்தார்.

## 3.2 கௌரவ ஜகத் புஷ்பகுமார அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.2.1 தரவுகளைச் சேகரிக்கும் கைத்தொலைபேசிச் (app) செயலி இயங்காமை தொடர்பான சிக்கல்

தெங்குப் பயிர்ச்செய்கை சபை, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், குருநாகல் பெருந்தோட்டக் கம்பெனி மற்றும் சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனியின் அறுவடை மற்றும் ஊழியர் வருகை தொடர்பான தரவுகளை சரியான முறையில் களஞ்சியப்படுத்துவதற்கும், அத்தரவுகளை அமைச்சிற்கு உடனடியாக அறிக்கையிடுவதற்கும் இயலுமான வகையில் அறிமுகஞ் செய்யப்பட்ட கைத்தொலைபேசி செயலி (app) தற்போது பயன்படுத்தப்படாமல் இருப்பதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இக்கைத்தொலைபேசி செயலி மூலம் திரட்டப்படும் தகவல்கள் வலையமைப்பு ஊடாக அமைச்சிற்கு அறிக்கையிடப்படாவிடினும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தங்கள் நிறுவனத்திற்குரிய தரவுகள் இக்கைத்தொலைபேசி செயலியைப் பயன்படுத்தி திரட்டப்படுவதாக வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பெனியின் பிரதான நிறைவேற்றதிகாரி மற்றும் வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனி, தெங்குப் பயிர்ச்

செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

வலையமைப்பின் ஊடாக இத்தரவுகளை அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் கிடைக்கப் பெறும் வகையில் செய்வதன் ஊடாக இலஞ்ச ஊழலை ஒழித்து நிறுவனங்களின் வெளிப்படைத் தன்மையை பேணிச்செல்வதற்கான இயலுமை இருப்பதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

முன்பிருந்த முறையை மீண்டும் நடைமுறைப்படுத்தி, இக்கைத்தொலைபேசி செயலி ஊடாக தகவல் தொழில்நுட்ப அமைச்சின் அலுவலர்களுக்கும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உடனடியாக அறிக்கையிடும் வகையில் வலையமைப்பு முறையை மீண்டும் துரிதமாக நிறுவுமாறு கௌரவ தவிசாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டது.

### 3.2.2 “கப்ருக்க” நிதியத்தின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்தல்

தெங்கு அபிவிருத்திச் சபை, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கை சபையினால் நிதியிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி நிதியமான கப்ருக்க நிதியம் மற்றும் அதனுடன் இணைந்ததாக ஸ்தாபிக்கப்டட கப்ருக்க சங்கங்களின் தற்போதயை நிலை தொடர்பாக கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

இந்நிதியத்தின் கீழ் தற்போது நிலவும் மீதி ரூ.80 மில்லியன் எனவும், அதனூடாக இன்றளவில் கப்ருக்க சங்கங்களின் பயனாளிகளுக்கு உரிய நன்மைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், தெங்கு பயிர்ச்செய்கை சபையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழிருந்த இந்நிதியம் கடந்த காலங்களில் நிதி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டதாகவும், 2020ஆம் ஆண்டு தொடக்கம் இந்நிதியத்தில் சிறு வீழ்ச்சியொன்று ஏற்பட்டுள்ளமை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகவும் தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

இன்றளவில் மீண்டும் இந்நிதியம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினுடைய பொறுப்பின் கீழ் வந்துள்ளது எனவும், 2022ஆம் ஆண்டுக்காக ரூ.36 மில்லியன் திறைசேறி நிதி ஒதுக்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதில் இதுவரை கிடைக்கப் பெற்ற ரூ.25 மில்லியன் தேவையான பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெங்கு பயிரிடல் சபையின் தலைவரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கிராமிய மட்டத்தில் உள்ள முதனிலைச் சங்கங்கள் ஊடாக சமுதாயஞ் சார் நாற்று மேடைகளை அமைத்து தென்னங் கன்று உற்பத்தியை அதிகரித்ததன் மூலம் 2010ஆம் ஆண்டு 46 மில்லியன் அ.டொ. இருந்த தெங்கு அபிவிருத்திச் சபையின் வருமானமானது இன்றளவில் 864 மில்லியன் அ.டொ. வரை அதிகரித்துள்ளது எனவும் அச்சங்கங்களுக்கு இந்நிதியத்தின் ஊடாக சுழற்சிக் கடன்களை வழங்கியதாகவும் கௌரவ உறுப்பினரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அந்நிகழ்ச்சித் திட்டம் மிகவும் பயனுள்ள நிகழ்ச்சித் திட்டம் எனவும், அதனூடாகப் பயணித்து பிரதேச மட்டத்தில் அமைக்கப்பட்ட தென்னங் கன்று நாற்று மேடைகளில் 5000 கன்றுகள் வீதம் உற்பத்தி செய்து, தென்னங் கன்று உற்பத்தியை

அதிகரிப்பதற்கு இவ்வருடத்திலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

### 3.2.3 செவணகல மற்றும் பெலவத்த சீனிக் கம்பெனிகளுக்கு புதிய ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல்

இச்சீனிக் கம்பெனிகள் இரண்டுக்கும் 1000 ஊழியர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என சமூக ஊடகங்களில் செய்தியொன்று பகிரப்பட்டு வருவதாகவும், நிதி விரயத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாகவே கடந்த காலங்களில் நிலவிய நிதி சார் நெருக்கடி நிலையில் இருந்து மீட்டெடுத்து இந்நிறுவனங்களை தற்போதைய நிலைக்கு முன்னேற்றக் கூடியதாக இருந்தது எனவும் கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

சமூக ஊடகங்களில் பகிரப்படுகின்ற ஊழியர் ஆட்சேர்ப்பு தொடர்பில் விபரமான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான விபரமான அறிக்கையொன்றினை துரிதமாக பெற்றுத் தருவதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

## 3.3 சிறு தேயிலைத் தோட்டக் கைத்தொழில் - கௌரவ இசுரு தொடன்கொட

சிறு தேயிலைத் தோட்டக் கைத்தொழிலுடன் தொடர்புடைய தொழில்நுட்ப பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கௌரவ உறுப்பினரால் வினவப்பட்டது.

இதற்காக பல நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கை தேயிலைச் சபை மற்றும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

தேயிலைக் கைத்தொழிலில் ஊழியர் பற்றாக்குறையினைக் குறைத்தல், தரத்தை மேம்படுத்தல் மற்றும் வருடாந்தம் அறுவடை வீழ்ச்சியடைவதைக் குறைத்தல் போன்ற நோக்கங்களை முன்னிறுத்தி இன்றளவில் இக்கைத்தொழில் இயந்திரமயப்படுத்தலை நோக்கிப் பயணிப்பதாக இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டது.

ஒரு ஏக்கர் காணிக்கு ரூ. பத்து இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியதன் மூலம் அனைத்து தேயிலை ஆலோசக பரிசோதகர் பிரிவிலும் "Double H raw" முறையில் தேயிலைக் கன்றுகளை நடுவதற்காக மாதிரி தேயிலைச் செய்கை நிலங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இன்றளவில் அச்செய்கைகள், அறுவடை பெற்றுக்கொள்ளும் பருவத்தை அடைந்திருப்பதாகவும், தேயிலைச் செய்கை மேற்கொள்ளும் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் இவ்வாறான 55 மாதிரி இடங்கள் நாடு முழுவதும் காணப்படுவதாகவும் இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வறண்ட காலநிலையைக் கொண்ட தேயிலைச் செய்கை நிலங்களுக்கு நீர் வழங்குவதற்காக நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேயிலைச் செய்கை நிலங்களுக்கு திரவப் பசளை இடும் போது இடம்பெறும் வீண்விரயம் மற்றும் மனித உழைப்பைக் குறைத்து, செய்கை விருத்திக்கு பங்களிப்புச் செய்யும் சொட்டு நீர்ப் பாசனம் (Drip Irrigation) தற்போது நடைமுறைக்கு சாத்தியமான வகையில் பயன்படுத்தப்படுவதாகவும் இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தேயிலைத் தோட்டங்களில் இயந்திரங்கள் மூலம் கொழுந்து பறிப்பதற்கு ஏற்ற வகையில் தற்போது மாதிரி தேயிலைச் செய்கை நிலங்களில் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளவாறு இரண்டு வரிசைகளுக்கு இடையிலான இடைவெளி 5 அடியாக இருக்குமாறு கன்றுகளை நாட்ட வேண்டும் என்பதால், இன்றளவில் அதற்காக செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டது

பழைய தேயிலைத் தோட்டங்களில் கொழுந்து பறிப்பதற்காக பற்றரி வலுவினால் இயங்கும் சிறிய ரக இயந்திரங்கள் மற்றும் எஞ்சினால் இயங்கும் சிறிய ரக இயந்திரங்களுக்காக மானியம் வழங்கும் முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இன்றளவில் பல பெருந்தோட்டக் கம்பெனிகளில் அம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளரால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## 3.4 கௌரவ சஜித் பிரேமதாச அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.4.1 தேயிலைச் செய்கையாளர்கள் வசமுள்ள குறைப்பயன்பாட்டு காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினை

இந்நாட்டில் தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளில் 60% உரிமையைக் கொண்டிருக்கும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் இந்நாட்டு தேயிலை உற்பத்தியில் 70% பங்களிப்பினை வழங்குகின்ற போதும், தேயிலைச் செய்கை மேற்கொள்ளும் காணிகளில் 40% உரிமையைக் கொண்டிருக்கும் பாரியளவில் தேயிலை உற்பத்தியை மேற்கொள்ளும் கம்பெனிகள், தேயிலை உற்பத்தியில் 29%இனை மாத்திரமே பங்களிப்புச் செய்கின்றனர் எனவும் சதவீத அடிப்படையில் நோக்கும் போது இந்நிலை சிக்கலுக்குரியதெனவும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலைக்கான காரணங்களுடன் பாரியளவில் தேயிலைச் செய்கையை மேற்கொள்ளும் ஒவ்வொரு கம்பெனி வசமும் உள்ள மொத்தக் காணியின் அளவும், அதில் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணியின் அளவும் உள்ளடங்கிய தகவல்களை எழுத்து மூலமாகப் பெற்றுத் தருமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டு தொடக்கம் தோட்டங்களை தனியார்மயப்படுத்தியதன் பின்னர் இத்தோட்டக் கம்பெனிகள் மீள் செய்கை மற்றும் புதிய செய்கைகளை முழுமையாக கைவிட்டு, இருக்கும் செய்கையிலிருந்து தேயிலைக் கொழுந்துகளை பறித்தல் மற்றும் மரங்களை வெட்டி விற்பனை செய்தல் ஊடாகவே இலாபம் ஈட்டிவருவதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

இக் கம்பெனிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவித்தல் விடுக்கப்பட்ட போதும், குறைப் பயன்பாட்டு காணிகளில் இருந்து உரிய பயனைப் பெறுவதற்கு அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும், பொதுப் பணிக்காகவேனும் இக்காணிகளைப் பெற்றுக் கொள்வதில் சட்ட ரீதியான சிக்கல்கள் நிலவுவதாகவும் கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் குறைப் பயன்பாட்டுக் காணிகளை அரசாங்கத்திற்கு கையகப்படுத்தும் சட்டத்திற்கு அமைவாக சட்ட வரைவுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கௌரவ தவிசாளரால் மேலும் குழுவுக்கு தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலப்பகுதியில் குறைப் பயன்பாட்டு காணிகளை பயனுள்ள வகையில் பயன்பாட்டுக்கு பெற்றுக் கொள்வது தொடர்பாக தெரிவுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இப்பிரச்சினைக்குரிய அனைத்து தகவல்களும், அதற்குரிய தீர்வுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்கள் தெரிவித்தார்.

அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களையும் இது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் போது கருத்திற் கொள்ளுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சட்டரீதியான சிக்கலொன்று நிலவுவதால் மேற்குறிப்பிட்ட சட்ட மூலத்தை தயாரித்ததாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

இச்சட்டமூலத்தை துரிதமாக தயாரித்து, கையகப்படுத்தப்படும் குறைப்பயன்பாட்டு காணிகளை சிறு தோட்ட தேயிலை செய்கையாளர்களுக்கு செய்கை நடவடிக்கைகளுக்காக வழங்கி, தேயிலைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இத்தேயிலைத் தோட்டங்களை தனியார்மயப்படுத்தும் சந்தர்ப்பத்தில் 450,000 தொழிலாளர்கள் இருந்ததாகவும் இன்றளவில் அவ்வெண்ணிக்கை 150,000 ஆக குறைந்துள்ளதாகவும் கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

அத்தொழிலாளர்களின் நலன்கள் பேணப்படுவதில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டது.

செய்கை மேற்கொள்ளப்படாத தரிசு நிலங்களில் செய்கை மேற்கொள்வதற்காக பாரிய கம்பெனிகளுக்கு இலக்குகள் வழங்கப்பட வேண்டுமென கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

இத்தோட்டக் கம்பெனிகள் தமது தொழிலாளர்கள் தொடர்பாக எவ்வித அக்கறையும் இன்றி செயற்படுவது போன்றே அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களின் போதும் கவனயீனமாக செயற்படுவதாக கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே அவர்களினால் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் அதிக இலாபம் ஈட்டுவதை மாத்திரமே நோக்கமாகக் கொண்டுள்ளனர் எனவும் வெகு விரைவில் இக்கம்பெனிகளுடன் கலந்துரையாடலொன்றினை மேற்கொள்ள வேண்டுமெனவும் கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே அவர்களினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு பாரிய தேயிலைத் தோட்டக் கம்பெனிகளின் பிரதானிகளையும் அழைக்குமாறு கௌரவ தவிசாளரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

தேயிலை, தெங்கு, இறப்பர் ஆகிய சகல செய்கைகளுக்குமுரிய குறைப்பயன்பாட்டுக் காணிகளை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கௌரவ அருந்திக்க பர்னாந்து அவர்கள் குறிப்பிட்டார்.

### 3.4.2 தேயிலை கைத்தொழிலுக்குத் தேவையான உள்ளீடுகளில் நிலவும் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினை

தேயிலைச் செய்கை, உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதற்கு குறிப்பிட்ட அளவிலேனும் மீள் செய்கையை மேற்கொள்ள வேண்டும் எனினும், இன்றளவில் மீள் செய்கைக்கு அவசியமான ரீ 65 பசளை, எப்சம் சோல்ட் (Epsom Salt), சின்க் சல்பேட் ($ZnSO_4$), மெட்டம் சோடியம் மற்றும் தேவையான கிருமிநாசினிகளை பெற்றுக் கொள்வதில் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

அவ் உள்ளீடுகளை தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் சந்தையில் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை மற்றும் மீள் செய்கைக்காக அவ் உள்ளீடுகளின் வருடாந்த தேவை பற்றி கௌரவ எதிர்க் கட்சித் தலைவரால் வினவப்பட்டது.

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் 03% மீள் செய்கையினை மேற்கொள்ளுமாறு சிபாரிசு செய்யப்பட்ட போதும் தற்போது இலங்கையில் 1 – 1.5% அளவில் மாத்திரமே அது மேற்கொள்ளப்படுவதாகவும், இரசாயனப் பசளை இறக்குமதியை தடை செய்ததன் காரணமாகவே கடந்த காலத்தில் இப்பசளைத் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

இப்பசளை வகைகள் அனைத்தும் உரிய கம்பெனிகள் வசம் விற்பனை செய்வதற்காக இருப்பதாகவும், 50kg மூடையொன்றின் விலை ரூ. 20,500 எனவும் பணிப்பாளர் நாயகத்தினால் (கமத்தொழில்) தெரிவிக்கப்பட்டது.

இப்பசளை வகைகளின் முன்னைய மற்றும் தற்போதைய விலைகள் உட்பட வினவப்பட்ட ஏனைய தகவல்களை எழுத்து மூலம் பெற்றுத் தருமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தேயிலைக் கைத்தொழிலுக்கு அவசியமான U 709, T 200 பசளைகளின் விலைகள் தொடர்பாக கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் வினவப்பட்டது.

U 709, 50kg பசளை மூடையொன்று ரூ. 18,500 – ரூ.20,500இற்கு இடைப்பட்ட தொகைக்கும், T 200, 50kg பசளை மூடையொன்று ரூ. 20,000 இற்கும் விற்பனை செய்யப்படுவதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் T 200, 50kg பசளை மூடையொன்றின் விலை ரூ. 30,000 அளவில் இருந்ததாகவும், பசளை இறக்குமதி நடவடிக்கைகளில் பசளைக் கம்பெனிகளுக்கு மேலதிகமாக தனியார் இறக்குமதியாளர்களும் தலையிட்டுள்ளதால் இன்றளவில் பசளை விலை படிப்படியாக குறைந்து வருவதாகவும் கௌரவ தலைவரினால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

முன்பு நிலவிய மானிய விலையில் வழங்காவிட்டாலும் கூட, இந்நெருக்கடி நிலையின் கீழ் இப்பசளைகளை நியாயமான விலையில் வழங்குவதற்கு நடவடிக்கைகளை

மேற்கொள்ளுமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் சல்பேட் ஒப் அமோனியா பசளை வகையை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் குறைந்த விலையில் தருவித்து ரூ. 10,000 – ரூ. 12,000 இற்கும் இடையில் மானிய விலையில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக, கடந்த மூன்று மாதக் காலப்பகுதியில் தேயிலை மேம்பாட்டு நிதியத்திற்குச் சொந்தமான ரூ. 2 பில்லியன் நிதியை மூன்று மாதங்களுக்குள் மீளச் செலுத்தும் அடிப்படையில் பசளை கொள்வனவு செய்வதற்காக தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கியுள்ளதாகவும், சந்தையில் படிப்படியாக பசளை விலை குறையவில்லை என்றால் எதிர்வரும் வருடத்தில் யாதேனும் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் கௌரவ தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

### 3.4.3 களைநாசினிகளை தரப்படுத்தல்

க்ளைபோசேட் தடையுடன் பல்வேறு வகையான மாற்று களைநாசினிகளை சந்தையில் காணக்கிடைத்தாலும் கூட அவை உரிய தரத்தினைக் கொண்டிராதவை என்ற குற்றச்சாட்டு நிலவுவதால் இக்களைநாசினிகளை தரப்படுத்துவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் வினவப்பட்டது.

தற்போது க்ளைபோசேட் தடை நீக்கப்பட்டுள்ளது என்றும், அடுத்த மாதத்திற்குள் அக்களைநாசினி சந்தைக்கு வரும் என்றும், இந்நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தும் பொறுப்பு கமத்தொழில் அமைச்சுக்குரியது என்றும் கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது.

### 3.4.4 நவீன தொழில்நுட்பத்தை செய்கை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தல்

நவீன தொழில்நுட்பத்தை செய்கை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவது தொடர்பான திட்ட வரைபடத்தை (Road Map) எழுத்து மூலமாக பெற்றுத் தருமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### 3.4.5 தேயிலைக் கைத்தொழில் சார்ந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம்

இலங்கை தேயிலை ஊக்குவிப்பு நிதியத்தின் (Sri Lankan Tea CES fund) மூலம் தேயிலைக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடைய முடியுமா என கௌரவ எதிர்க்கட்ச்சித் தலைவர் வினவினார்.

இதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தனிப்பட்ட முறையில் தாம் திருப்தியடையவில்லை எனவும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சந்தர்ப்பத்தில் தேயிலை ஊக்குவிப்பு நிதியத்திடம் ரூபா பில்லியன் 08 ஆன தொகை காணப்பட்டதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

தற்போது தேயிலைக் கைத்தொழிலின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காக இந்த நிதியத்திலிருந்து 50% ஐ தேயிலை ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கும் எஞ்சிய 50%

தேயிலை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

மேற்படி நிதியைக்கொண்டு நடுகைப் பொருட்களை (planting materials) உற்பத்தி செய்யும் ஆயிரம் நாற்றுமேடைகள் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் எழுத்து மூலமான அறிக்கையை பெற்றுத் தருமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

**3.4.6 தெங்குக் கைத்தொழிலை மையமாகக் கொண்ட ஏற்றுமதித் துறையை ஊக்குவித்தல்**

தெங்குக் கைத்தொழிலை மையமாகக் கொண்ட ஏற்றுமதி உற்பத்தியானது இந்நாட்டின் டொலர் ஒதுக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்கு அதிக வாய்ப்பைக் கொண்டுள்ள துறையாக உள்ளதனால் அத்துறையை ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து எழுத்து மூலமான அறிக்கையொன்றைப் பெற்றுத் தருமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

**3.4.7 மூடப்பட்டுள்ள தேயிலைக் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பற்றிய தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்.**

அண்மைக் காலத்தில் இந்நாட்டில் மாவட்ட மட்டத்தில் மூடப்பட்டுள்ள தேயிலைக் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிபர ரீதியான தரவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றைப் பெற்றுத் தருமாறு கௌரவ எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை விடுத்தார்.

## 3.5 ஓய்வு பெற்ற தோட்டத் தொழிலாளர்களை தோட்ட வீடுகளிலிருந்து வெளியேற்றல் - கௌரவ ரஊப் ஹகீம்

இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பாததும்பர கல்பீல்லவத்த தோட்டத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள தோட்டக் கம்பனி ஊழியர்களை அவர்கள் வசித்து வந்த தோட்ட வீடுகளிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மேற்படி நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 3.6 கவரவில தோட்டத்தில் மக்கள் பயிரிட்டுள்ள காணிகளிலிருந்து அவர்களை பலவந்தமாக வெளியேற்றுதல். - கௌரவ வீ. இராதாகிருஷ்ணன்

ஹொரண பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான கவரவில தோட்டத்தில் மக்கள் பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ள காணிகளிலிருந்து அவர்களை பலவந்தமாக வெளியேற்ற அக்கம்பனி நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும், இச்செயலை நிறுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இந்த நடவடிக்கையை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்வதாகவும், அவ்வாறு நீண்டகாலமாக வசித்து வரும் மக்களை மேற்படி இடங்களிலிருந்து வெளியேற்ற வேண்டாமென பெருந்தோட்ட முகாமைத்துவப் பிரிவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்கு அமைய பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்புப் பிரிவுக்கு இந்த சட்டவிரோத குடியிருப்பாளர்களை வெளியேற்றுவது தொடர்பில் கடமை ரீதியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்ட போதும் மனிதாபிமான அடிப்படையில் முடிந்தளவு அவ்வாறு அகற்றும் நடவடிக்கைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் குழுவுக்குத் தெரிவித்தார்.

பொகவந்தலாவ பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான கொட்டியாகல தோட்டத்தில் 50 வருடத்திற்கும் மேலாக வசித்து வந்த 35 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் அவ்விடத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதால் அவர்கள் சிக்கல்களை எதிர்நோக்கியிருப்பதாக கௌரவ எம். ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அந்நடவடிக்கைகளை முடிந்தளவு நிறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

அரசுக்குச் சொந்தமான காணிகள் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் எவரேனும் பலாத்காரமாக குடியிருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவ்வாறு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முன்னர் குறித்த சட்ட விரோத குடியிருப்பாளர்களுக்கு ‘இரண்டு வாரகால அறிவித்தல்’ எனும் அறிவிப்பு வழங்கப்படுவதாகவும், காணிகள் தொடர்பாக மேற்படி குடியிருப்பாளர்களுக்கு யாதாயினும் உரித்தை சமர்ப்பிக்க முடியுமாயின் அதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு உரித்துக்களை சமர்ப்பிக்கின்ற காணிகள் பெரும்பாலும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாது விடுவிக்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 3.7 கௌரவ ஜானக வக்கும்புர அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.7.1 பயிர்செய்கை நடவடிக்கைகளுக்கு உரம் விநியோகிக்கப்படுதல்

உரத்திற்காக இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் 56,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதற்கு முன்னர் இடம்பெற்றதைப் போன்று நெற் பயிர் செய்கைக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்காது சகல பயிர்ச் செய்கைகளுக்கும் ஒரே சமமான முறையில் நியாயமான விலைக்கு உரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

கடந்த காலத்தில் நெல் அறுவடை குறைவாக இருந்ததன் காரணமாக காலத்தின் தேவையின் பேரில் உரம் பெற்றுக்கொடுக்கும் செயன்முறையில் நெல் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது எனவும் அடுத்த ஆண்டு முதல் சகல விவசாயிகளுக்கும் முன்னுரிமை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.7.2 ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் தற்போதைய நிதிசார் முன்னேற்றம் தொடர்பில் வினவுதல்

ஹிங்குரான சீனித் தொழிற்சாலை சார்பில் கடந்த காலத்தில் ரூபா பில்லியன் 11 ஆன கடன் செலுத்தப்பட வேண்டியிருந்தது எனவும் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டம் காரணமாக மேற்படி கடன் தொகை பெரும்பாலும் குறைவடைந்துள்ளதுடன், கிடைக்கும் நிதியில் எஞ்சியுள்ள கடன் தொகையையும் துரிதமாக செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததுடன் எஞ்சியுள்ள கடன் தொகை குறித்தும் வினவினார்.

மேலும் 4720 மி.ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளதாக கல்ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் தலைவர் குறிப்பிட்டார்.

கௌரவ ரமேஷ் பத்திரண மற்றும் கௌரவ ஜானக வக்கும்புர ஆகியோர் முறையே பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளில் கடமையாற்றிய காலப்பகுதியில் எதனோல் மற்றும் கறுப்புச் சீனி இறக்குமதி நிறுத்தப்பட்டதன் காரணமாக 15 வருட காலம் முழுவதிலும் நட்டம் அடைந்து மூடப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்த இந்த நிறுவனம் தற்போது இலாபம் ஈட்டி வருவதாகவும் கல்ஓயா பெருந்தோட்டத் தனியார் கம்பனியின் தலைவர் மேலும் குறிப்பிடப்பட்டது.

தாம் இந்த நிறுவனத்தின் தலைவர் பதவிக்கு நியமனம் பெற்றபோது 28% ஆன வட்டி விகிதத்திற்கு தமது நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட ரூபா பில்லியன் 9.5 ஆன கடன் நிலுவை காணப்பட்டதாகவும் மேற்படி கடன் வட்டி விகதத்தை தற்போது 14% ஆக குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்தார்.

இந்த நிறுவனம் கடந்த 07 மாதங்களில் ரூ.மி. 9681 ஆன வருமானத்தை பெற்றுள்ளதுடன், இதில் தேறிய இலாபம் ரூ.மி. 4780 எனவும் கல்ஓயா பெருந்தோட்டத் தனியார் கம்பனியின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

2023.03.31 ஆம் திகதியளவில் எஞ்சியுள்ள சகல கடன்களையும் செலுத்தித் தீர்த்து ரூ.மி. 370 இற்கும் மேற்பட்ட பங்கிலாபத்தை திறைசேரிக்கு அனுப்ப முடியுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் கல்ஓயா பெருந்தோட்டத் தனியார் கம்பனியின் தலைவரால் மேலும் குறிப்பிடப்பட்டது.

## 3.8 கௌரவ வீரசுமன வீரசிங்ஹ அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.8.1 உரிய தரத்தைக் கொண்ட உரத்தை விநியோகித்தல்

தேயிலை பயிர்ச் செய்கைக்கு உரம் வழங்கும் போது அவசியமான சகல கூறுகளையும் முறையாக கலக்காது சேதனப் பசளையுடன் யூரியாவை மாத்திரம் கலந்து விநியோகிப்பதாகவும், அதன் மூலம் தேயிலை பயிர்ச் செய்கைக்கு பாரிய சேதம் ஏற்படுவதனால் மேற்படி செயன்முறையை நிறுத்துமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார். நிவாரணமாக கிடைக்கின்ற யூரியா உரத்தை ஏனைய அவசியமான உரக் கலவைகளை தயாரிப்பதற்காக பயன்படுத்திக் கொண்டு தேவையான சகல கூறுகளையும் உள்ளடக்கிய உரக் கலவையை பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் யோசனை முன்வைத்தார்.

தற்போது சகல உரக் கம்பனிகளும் அவ்வாறு தேவையான கலவைகளை தயாரித்து வருவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.8.2 முலட்டியன பிரதேசத்தில் கருவா ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தை நிர்மாணித்தல்

கருவா ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலையீட்டின் மூலம் மாத்தறை மாவட்டத்தில் முலட்டியன பிரதேசத்தில் கருவா ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது அதன் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதால் மேற்படி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

### 3.8.3 களுபோவிட்டியான தேயிலைக் கம்பனியின் மிகைத் தேயிலை குறித்து வினவுதல்.

களுபோவிட்டியான தேயிலை கம்பனியினால் கடந்த காலத்தில் மிகையாக தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்ததுடன், அதன் தற்போதைய நிலைமை குறித்தும் வினவினார்.

கடந்த சில மாதங்களில் தேயிலை ஏலத்தில் இந்த மிகை உற்பத்தியில் 29,000 கி.கி. வீதம் விநியோகிக்கப்பட்டதாகவும் மேலும் 52,000 கி.கி.எஞ்சியுள்ளதாகவும் வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலையின் தலைவர் தெரிவித்தார்.

தற்போது பழைய இருப்புகள் விற்பனை செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் நிலைமை முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு கிலோ தேயிலைக் கொழுந்தின் விலை கணிசமாக அதிகரித்திருந்த கடந்த காலங்களில் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் கூடுதலான தேயிலைக் கொழுந்துகளை களுபோவிட்டியான தேயிலைக் கம்பனிக்கு வழங்கியுள்ளார்கள் என்பதுடன், கம்பனியும் முறையான முகாமைத்துவம் மற்றும் முறையான கட்டுப்பாடு இன்றி இத் தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு செய்துள்ளமை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இது பலவீனமான நிருவாகத்தின் விளைவே எனவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

தற்போது தேயிலைக் கொழுந்து ஒரு கிலோவின் விலை (CTC Tea) ரூபா 257 ஆக உள்ளதாக இலங்கை தேயிலைச் சபையின் ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் தேயிலை கொழுந்துக்குக் காணப்பட்ட உயர் விலை விதிவிலக்காகும் என்றும் தற்போது மேற்படி விலை சராசரி பெறுமதி வரை குறைந்துள்ளது என்றும் களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலையின் தலைவர் தெரிவித்தார்.

ஆயினும், ஒதடொக்ஸ் தேயிலைக் (Orthodox Tea) கொழுந்து ஒரு கிலோவின் விலை ரூபா 275 – 300 இற்கு இடைப்பட்டதாக இருப்பதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

தேயிலைக் கொழுந்துக்கு இலங்கையில் ஆகக்கூடிய விலை மாத்தறை மாவட்டத்தில் செலுத்தப்படுவதாகவும், ஒவ்வொரு தேயிலைத் தொழிற்சாலையிலும் தேறிய விற்பனை சராசரியின் (Net Sale Average) அடிப்படையில் இந்த விலை வித்தியாசம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.8.4 தெனியாய பிரதேசத்தில் தேயிலை நூதனைசாலையொன்றை நிறுவுதல்

சுற்றுலா வலயமொன்றான தெனியாய பிரதேசத்தில் தேயிலை நூதனசாலையொன்றை நிறுவுவது தொடர்பான பிரேரணையின் தற்போதைய முன்னேற்றம் குறித்து கௌரவ உறுப்பினர் வினவினார்.

மேற்படி நூதனசாலைக்காக 2023 ஆம் ஆண்டுக்கு ரூ.மி. 20 ஆன தொகையை ஒதுக்க திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும் அதற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையென பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) தெரிவித்தார்.

இது தேயிலை ஊக்குவிப்புடன் சம்பந்தப்பட்டதனால் இலங்கை தேயிலை ஊக்குவிப்பு நிதியம் மற்றும் (Sri Lankan Tea CES fund) தேயிலைக் கைத்தொழில் சார்ந்த அனுசரணையாளர்களின் உதவியுடன் இந்த நூதனசாலையை நிர்மாணிக்க முடியுமென கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

இதற்கு அந்தளவு செலவு ஏற்படமாட்டாதெனவும் பிரதேசத்தின் கூட்டுறவு சங்கத்தினால் இதற்காக வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடம் காணப்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் குறிப்பிட்டார்.

இந்தப் பணியை நிறைவேற்றுவதில் உள்ள ஆற்றலை ஆராயுமாறு கௌரவ தவிசாளர் இலங்கை தேயிலைச் சபையின் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

## 3.9 பெருந்தோட்டக் கம்பனிகளின் தென்னைமர ஏலவிற்பனை – கௌரவ சமன்பிரிய ஹேரத்

பெருந்தோட்டக் கம்பனிகளின் தென்னை மர ஏலவிற்பனை தொடர்பில் ஒரு மாபியா காணப்படுவதாகவும் அதற்கு மேற்படி தோட்டக் கம்பனிகளின் நிருவாகம் பொறுப்புக்கூற வேண்டுமெனவும் அறிவித்த கௌரவ உறுப்பினர் இது தொடர்பில் தீவிர கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்தார்.

01 ஏக்கருக்குக் குறைவான காணிகளை மாத்திரம் ஏலம் விடுமாறு கட்டுப்பாடு விதிப்பதற்கு கௌரவ சனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் அத்தியாவசிய மனிதாபிமான விடயங்களின் அடிப்படையில் மாத்திரம் ஹெக்டயர் 05 இற்குக் குறைவான தென்னங் காணிகள் மட்டும் பகிர்ந்து ஒதுக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

அத்துடன், தென்னை மரத்தை, மரங்களை வெட்டி வீழ்த்தல் சட்டத்தில் உள்ளடக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் 02 தென்னை மரங்களுக்கு மேல் வெட்டி வீழ்த்தும் போது குறித்த பிரதேசத்தின் கிராம அலுவலரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனவும் கௌரவ தவிசாளர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த மரங்களை ஏலம் விடுவது தொடர்பாக பெருந்தோட்டக் கம்பனிகளின் நிருவாகங்களின் ஏகபோக உரிமை தொடர்பில் தீவிர கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

65 வயதுக்கு மேற்பட்ட தென்னை மரங்களை திறந்த கேள்வி கோரல் மூலம் ரூபா 7,000 - 15,000 ஆன தொகைக்கு ஏலம் விடுவதாகவும் மரம் வெட்ட முன்னர் வன முகாமைத்துவ திட்டம் (Forestry Management Plan) மற்றும் கீழ்நிலை

பயிர்செய்கையும் அமுல்படுத்தப்படுகின்றதெனவும் வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் தலைவர் தெரிவித்தார்.

குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி உட்பட பெருந்தோட்டக் கம்பனிகள் ஒவ்வொரு ஏலத்தின் போதும் இந்த கேள்விப்பத்திரத்தை ஒரே நபருக்கு வழங்குவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இது பற்றி ஆராய்ந்து உரிய அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.

## 3.10 கௌரவ மகிந்தானந்த அலுத்கமகே அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.10.1 எத்கால பிரதேசத்தில் காணப்படுகின்ற சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகம் முறையாக இயங்காமை

கண்டி மாவட்டத்தில் எத்கால பிரதேசத்தில் பேணிவரப்பட்ட சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகம் தற்போது முறையாக இயங்கிவராமை காரணமாக மேற்படி பிரதேசத்தில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள கண்டி அலுவலகத்திற்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மேற்படி அலுவலகத்தை ஒரு வாரத்திற்குள் முறைப்படுத்துமாறு கௌரவ தவிசாளர் ஆலோசனை வழங்கினார்.

### 3.10.2 தோட்டங்களில் களைகள் பரவும் சிக்கல்

கண்டி மாவட்டத்தில் காணப்படுகின்ற மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் களைகள் பரவிவரும் சிக்கல் காரணமாக அத்தோட்ட ஊழியர்கள் தொழிலுக்கு வருவதில் அச்சம் மற்றும் அலட்சியம் காட்டுவதனால் மேற்படி களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

கடந்த காலத்தில் களைக்கொல்லிகளுக்கு தட்டுப்பாடு நிலவியதன் காரணமாக இந்த சிக்கல் எழுந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் களைக்கொல்லிகள் சந்தைக்கு வந்தவுடன் இந்த சிக்கலை தீர்க்க முடியுமெனவும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

### 3.10.3 தனியார் தோட்டக் கம்பனிகளின் முறையற்ற நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்தல்

தனியார் பெருந்தோட்டக் கம்பனிகள் அரச காணிகளை முறையாக பேணிவருதல் மற்றும் முறையாக முகாமைத்துவம் செய்வதில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மீண்டும் தேயிலை பயிரிடுவதை புறக்கணித்தல், முகாமைத்துவக் கட்டணமாக அதிக நிதியைப் பெற்றுக்கொள்ளல், சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களை பராமரிப்புச் செய்தல், சுற்றுலாத்துறை, மரங்களை வெட்டி வீழ்த்தல் ஆகிய அநாவசியமான விடயங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அதிக இலாபம் ஈட்டுகின்ற போதும் ஊழியர் நலன்புரியில் ஈடுபடுத்த வேண்டிய சிறிய நிதி ஏற்பாடுகளையும் புறக்கணிப்பதாகவும் கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இந்த தோட்டங்களைச் சுவீகரித்துக்கொள்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

### 3.11 அம்பாறை கரும்புத் தோட்ட நிலங்கள் - கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா

அம்பாறை கரும்புத் தோட்ட நிலங்கள் தொடர்பில் எந்தவொரு பயிர்செய்கைத் திட்டத்தையும் காண முடியாதுள்ளதாகவும் அக்காணிகளில் களைகள் நிறைந்து காணப்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

ஏனைய பயிர்செய்கைகளைப் போன்று இப் பயிர்நிலங்களிலும் கீழ்ப் பயிர்கள், விலங்கு உற்பத்தி, பயிர் பன்முகப்படுத்தல் உட்பட விளைதிறன்மிக்க முறைகளைப் பயன்படுத்தி அவற்றை உச்சளவில் வருமானம் கிடைக்கின்ற வகையிலும் அழகிய முறையிலும் பேணிவருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

இக் கரும்புத் தோட்டங்களிலிருந்து மேற்படி நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்டுகின்ற போதிலும் கரும்பு விவசாயிகளுக்கு உரிய பயன்கள் கிடைப்பதில்லை எனவும் அவர்கள் அதிக கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்ததோடு, இப்புதிய திட்டங்களின் பயன்களை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்துடன் கலந்துரையாடி கரும்புப் பயிர்செய்கையுடன் கலந்து மேற்கொள்ளக்கூடிய தெங்கு போன்ற வேறு பயிர்ச் செய்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாக கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார். அத்துடன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் மற்றும் தெங்குப் பயிர்செய்கை சபையின் அலுவலர்களின் கவனத்துக்கும் இதனைக் கொண்டு வருமாறு கௌரவ தவிசாளர் அறிவுரை வழங்கினார்.

கிடைக்கின்ற இலாபத்தில் விவசாயிகளுக்கு நாட்டுக் கோழிகள், கறவை மாடுகள் போன்றவற்றை இலவசமாக வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி போசாக்குத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும் என்பதனால் அவ்வாறான நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

செவனகல மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலைகளினால் கரும்பு விவசாயிகளுக்கு செலுத்தப்படும் தொகையையே ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் விவசாயிகளுக்கும் செலுத்த வேண்டுமென கௌரவ உறுப்பினர் ஜானக வக்கும்புர கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயத்தை எழுத்துமூலம் உரிய கம்பனிக்கு அறிவிக்குமாறு கௌரவ தவிசாளர் கேட்டுக் கொண்டார்.

பெல்வத்த மற்றும் செவனகல சீனத் தொழிற்சாலைகளிலுள்ள சகலருக்கும் ரூபா 8500 ஆன கஷ்டப் பிரதேச கொடுப்பனவு கடந்த வாரம் வழங்கப்பட்டதாகவும் அதே முறையை ஏனைய சீனிக் கம்பனிகளிலும் அமுல்படுத்தத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதாகவும் கௌரவ இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்தார்.

**3.12 பெல்வத்த மற்றும் செவனகல சீனிக் கம்பனிகளில் இடம்பெறுகின்ற மோசடி மற்றும் ஊழல்கள் - கௌரவ கயாஷான் நவனந்த**

பெல்வத்த மற்றும் செவனகல சீனத் தொழிற்சாலைகளில் இடம்பெறுகின்ற ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனிக் கம்பனிக்குச் சொந்தமான 3000 தொண் கரும்பு அரைக்கக்கூடிய பெல்வத்த புத்தள தொழிற்சாலையில் 700 தொண்கள் மாத்திரம் அரைக்கப்படுகின்ற நிலையில் மோசடியாக செவனகல கரும்பு அறுவடையை ஹிங்குரானவுக்கு அனுப்புதல், பெல்வத்த சீனித் தொழிற்சாலைக்கு முறையற்ற வகையில் ஊழியர்கள் 1000 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை, செவனகல நிறுவனத்தின் கணக்காய்வுப் பிரிவு மற்றும் பெறுகைப் பிரிவுகளுக்கு தமது நண்பர்களான அலுவலர்களை நியமனம் செய்து முன்னைய மோசடிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை மாற்றம் செய்துள்ளமை, அரச நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியுள்ள சுமார் ஒரு பில்லியன் பெறுமதியான உரம் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரத்தை மோசடியாக நான்கு தடவைகளுக்கு மேல் கோரியுள்ளமை, அலுவலர்கள் நிறுவனத்தின பௌதீக வளங்களை முறைகேடாகப் பயன்படுத்துதல், மோசடியான முறையில் பதவி உயர்வு வழங்குதல், தொழில் வழக்குவதாக கூறி இலஞ்சம் பெறுதல், அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்துதல், மோசடியான பெறுகை செயன்முறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்வனவுகள் போன்ற ஊழல் மோசடிகள் பல செவனகல மற்றும் பெல்வத்த சீனிக் கம்பனிகளில் இடம்பெறுவதாக கௌரவ உறுப்பினர் குழுவுக்கு அறிவித்தார்.

செவனகல மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலைகளின் மேலதிக கரும்பு அறுவடையை அரைப்பதற்கு வேலிஓயா தொழிற்சாலையை நிறுவுவதற்கான பிரேரணையை தாம் கொண்டுவந்திருப்பதும் இந்த மேலதிக அறுவடையை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்திக் கொள்வதற்காகவேயாகும் என கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

பிரதான நிறைவேற்று அதிகாரி, கணக்காய்வு விசாரணை அதிகாரி மற்றும் பெறுகை அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் இந்த மோசடிக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் இது தொடர்பில் நியாயமான விசாரணையை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்ற போதிலும் இந்த அலுவலர்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நிலையில் அவ்வாறு செய்வது பயனற்றதாக அமையும் என்றும் கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இப் பிரதேசங்களைச் சார்ந்த விவசாய அமைப்புகள் அனைத்தும் இந்த நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக கடும் அதிருப்தியை வெளியிடுவதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும், சுமார் 8 மாதங்களுக்கு முன்னர் சீனியிலிருந்து தரகு பெறும் மோசடி இடம்பெற்றதாகவும் அப்போதைய இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர அவர்களினால் அச்செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இந்த மோசடிகள் தொடர்பில் எழுத்து மூலமான சாட்சியங்கள் சிலவற்றை தாம் இவ் ஆலோசனை குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், இடம்பெற்றுள்ள மோசடிகளின்

அளவு சமர்ப்பிக்கப்படும் சாட்சிகளை விட மிக அதிகம் எனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

கூடிய விரைவில் இந்த விடயம் தொடர்பில் நியாயமான விசாரணையை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

2022 ஆண்டில் உத்தேச உற்பத்தி 6000 மெற்றிக் தொண்கள் என்றபோதிலும் சில காரணங்களினால் இவ் ஆண்டில் மேற்படி இலக்கை அடைந்துகொள்ள முடியாது போயுள்ளதாக கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணையொன்றை துரிதமாக நடாத்துவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

கௌரவ ஜானக வக்கும்புர அவர்களும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

**3.13 தெங்கு சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல் - கௌரவ அருந்திக்க பர்னாந்து**

தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்கு வெளிநாடுகளில் காணப்படும் அதிக கேள்வி கிராக்கி காரணமாக அதன்மூலம் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்ளக் கூடியதாக இருப்பதால் குருநாகல் மற்றும் சிலாபம் ஆகிய இரண்டு பெருந்தோட்டக் கம்பெனிகளின் தேங்காய் அறுவடையை வெறுமனே ஏலத்தில் விற்பனை செய்யாமல் பெறுமதி சேர்க்கப்பட்டு (Value Addition) அந்த உற்பத்திகளில் இருந்து அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இங்கு தேங்காய் சார்ந்த கைத்தொழில்கள், சிரட்டை, தும்பு ஆகிய மூன்று சார்ந்த கைத்தொழில்களுக்கும் முன்னுரிமை வழங்கி கம்பெனிகளின் தனித்துவமும் பாதுகாக்கப்படும் வகையில் இந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ உறுப்பினரால் மேலும் அறிவிக்கப்பட்டது.

சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனியால் அரச - தனியார் பங்குடைமையின் (Public - Private Partnership) கீழ் தெங்கு சார்ந்த ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு நிதி அமைச்சிடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தும் இற்றைவரை இதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும் மீண்டும் ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் ஊடாக இதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளதெனவும் கௌரவ உறுப்பினரால் மேலும் அறிவிக்கப்பட்டது.

அவ்வாறு செய்தல் அநாவசியமானது எனவும் இவ்விடயத்தை துரிதப்படுத்துவதன் மூலம் இந்த இரண்டு கம்பெனிகளையும் இலங்கைக்கு டொலரை ஈட்டித் தரும் கம்பெனிகளாக துரிதமாக மாற்ற இயலுமெனவும் கௌரவ உறுப்பினரால் அறிவிக்கப்பட்டது. இதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான (Expressions of Interest / EOI) வாய்ப்பினை ஏற்படுத்தி ஏற்கனவே அரச தனியார் பங்குடமைக்கு (Public - Private Partnership) தனியார் துறை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனியின் தலைவர் அறிவித்தார்.

தொடங்கவிருக்கும் இந்த தொழிற்சாலையின் 65% பங்குகள் சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனிக்கும் 35% பங்குகள் தனியார் துறைக்கும் கிடைக்கும் வகையில்

திட்டமிடப்பட்டுள்ளதாக வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனியின் தலைவரினால் அறிவிக்கப்பட்டது.

மேலும், கிடைக்கும் இலாபத்தில் 60% சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனிக்கும் 40% தனியார் துறைக்கும் சென்று சேரவிருப்பதாக வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனியின் தலைவர் அறிவித்தார்.

இதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இற்றைவரை அங்கீகாரம் வழங்கப்படாததால் மீண்டும் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

தனியார் துறையின் பங்களிப்பு இல்லாமல் சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனியின் முழுமையான நிதி முதலீட்டின் ஊடாக இந்த தொழிற்சாலையை தொடங்குவதற்கான வாய்ப்பு தொடர்பாக கௌரவ தவிசாளரினால் வினவப்பட்டது.

அவ்வாறு செய்வதற்குப் பதிலாக மேற்படி அரச தனியார் துறை பங்குடைமையின் கீழ் அதிக அனுகூலமான நிதிப் பயன்கள் தமது கம்பெனிக்கு கிடைக்கும் என வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பெனியின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

ஆர்வ வெளிப்படுத்தலைக் (Expressions of Interest) கோரி இச்செயன்முறையை குருநாகல் பெருந்தோட்டக் கம்பெனியிலும் செயல்படுத்துவதற்கு முயன்ற போது பல்வேறு தடைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டதால் ஏற்கனவே நூற்றுக்கு நூறு வீதம் குருநாகல் பெருந்தோட்டக் கம்பெனியின் முதலீட்டின் மூலம் தெங்கு சார்ந்த ஏற்றுமதி உற்பத்திகளுக்கு தொழிற்சாலையொன்று தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் எதிர்வரும் ஆண்டில் சனவரி, பெப்ருவரி மாதமளவில் உற்பத்திகளை வெளியிடுவதற்கான வாய்ப்பு உள்ளதெனவும் வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பெனியின் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தரினால் அறிவிக்கப்பட்டது.

## 3.14 கௌரவ உப்புல் மகேந்திர ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.14.1 தென்னை மரங்கள் வெட்டப்படுவதைக் குறைத்தல்

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இது ஒரு சட்டமாக மாற்றப்பட்டிருப்பதாகவும் அதற்கு அமைவாக இரண்டு தென்னை மரங்களுக்கு மேல் வெட்டப்படும் போது சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் கிராம அலுவலரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 3.14.2 சிறிய காணிகளில் பயிரிடுவதற்கு மிகவும் பொருத்தமான தென்னங்கன்றுகளை மக்களுக்கு வழங்குதல்

தற்போது மக்கள் வாழும் காணிகள் சிறிய அளவிலான காணிகளாக இருப்பதால் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தினை விளைவிக்கக் கூடிய அதிக உயரத்தைக் கொண்ட அநேகமான மரங்களை வெட்டியகற்ற நேரிட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

இதற்குத் தீர்வாக கூடிய விளைச்சலைத் தரும் உயரம் குறைந்த தென்னை வகைகளின் கன்றுகளை வழங்குதல் தொடர்பாக கவனம் செலுத்துமாறு கௌரவ உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு சீ 65 எனும் தென்னை இனத்தின் பொருத்தப்பாடு எவ்வாறு இருக்கின்றதென தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் தலைவரிடம் கௌரவ தவிசாளர் வினவினார்.

கலப்பினங்கள் இளம் பருவத்திலேயே விளைச்சலைத் தருவதுடன் 40 - 60 வருடங்கள் வரை சிறந்த விளைச்சலையும் தருவதாக தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் அறிவித்தார்.

இவ்விடயத்தில் கலப்பினம் ((Hybrid Type) தொடர்பாக கவனம் செலுத்துவதே மிகச்சிறந்த தீர்வாக இருக்கின்றதென தவிசாளர் அறிவித்தார்.

தற்போது ஒரு கலப்பின தென்னங் கன்றின் விலை ரூபாய் 400 என தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் அறிவித்தார்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தென்னங்கன்றை நாட்ட வேண்டும் என கட்டாயப்படுத்துவதற்கு காணப்படும் வாய்ப்பு தொடர்பாக கௌரவ உறுப்பினர் வினவினார்.

அத்தகைய ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கான வாய்ப்பு இல்லாவிடினும் அவ்வாறானதொரு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வூட்ட முடியுமென கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனத்திற்கென நடைமுறைப்படுத்தப்படும் "ஸ்ரீ சம்பத தொரின் தொரட்ட" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய வீடு ஒன்றை கட்டும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக அல்லது குறிப்பிட்டதொரு தொகையை செலுத்துதல் ஆகிய இவ்விரண்டு முறைகளின் கீழ் இரண்டு தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றதெனவும் தொடர்ந்தும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் அறிவித்தார்.

### 3.14.3 தென்னங் காணிகளை துண்டாடுதல்

தென்னங் காணிகள் துண்டாடப்படுதல் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய எந்தவொரு உத்தியோகத்தரும் அதற்கு பொறுப்புக் கூறுவதில்லை எனவும் 4 ஹெக்டேயாருக்கும் குறைந்த தென்னங் காணிகளை துண்டாடுவதற்கு அனுமதி தேவைப்படுவதில்லை என சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் ஒரு சிக்கலாக இருக்கின்றது எனவும் கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

தற்போதுள்ள சட்டத்துக்கு அமைவாக தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் தோட்டங்களை நிருவகிக்கும் மற்றும் துண்டாடும் நிருவாக சபையின் அனுமதி இல்லாமல் நான்கு ஹெக்டாயருக்கும் குறைவான தென்னை தோட்டங்களை துண்டாடுவதற்கான வாய்ப்பு உள்ள போதிலும் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அவ்வாறு துண்டாடக் கூடிய ஆகக் குறைந்த அளவை 4 ஹெக்டெயாரிலிருந்து 1 ஏக்கர் வரை குறைத்து ஒரு ஏக்கருக்குக் குறைவான காணிகளை மாத்திரம் ஏலத்தில் விடக்கூடியவாறு வரையறைகளை விதிப்பதற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெங்குப் பயிர்செய்கை சபையின் தலைவர் அறிவித்தார்.

ஆகவே, எதிர்காலத்தில் சட்டம் திருத்தப்பட்ட பின்னர் துண்டாடப்படவிருக்கும் அனைத்து தென்னந் தோட்டங்களுக்கும் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் தோட்டங்களை நிருவகிக்கும் மற்றும் துண்டாடும் நிருவாக சபையின் அனுமதி

தேவையாக இருப்பதால் இப் பிரச்சினை தொடர்ந்து ஏற்படாது எனவும் தவிசாளரால் மேலும் அறிவிக்கப்பட்டது.

மேலும், 50 ஏக்கரை விட குறைந்த இறப்பர் மற்றும் தேயிலைத் தோட்டங்களை இவ்வாறு அனுமதியின்றி துண்டாடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதால் அதுவும் ஒரு பிரச்சினையாக அமைகின்றதெனவும் எதிர்காலத்தில் இந்த அளவையும் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் தோட்டங்களை நிருவகிக்கும் மற்றும் துண்டாடும் நிருவாக சபையின் தலைவர் அறிவித்தார்.

கடந்த மூன்றாண்டுகளில் அத்தியாவசிய மனிதாபிமான தேவைகளின் அடிப்படையில் மாத்திரம் தென்னங் காணிகளை துண்டாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கௌரவ தவிசாளர் அறிவித்தார்.

### 3.14.4 அத்தனைகல்ல பிரதேசத்திற்கு தேயிலைப் பரிசோதனை பரவலாக்கல் உத்தியோகத்தரை நியமித்தல்

அத்தனகல்ல பிரதேசம் இதற்கு முன்னர் தேயிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட ஒரு பிரதேசமாக இல்லாதிருப்பினும் தற்போது அங்கு பெருமளவு தேயிலைப் பயிர்ச்செய்கை தொடங்கப்பட்டுள்ளதால் அப்பிரதேசத்திற்கு தேயிலை பரிசோதனை பரவலாக்கல் உத்தியோகத்தர் ஒருவரின் தேவை நிலவுவதாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

ருவான்வெல்ல, வரக்காபொல, அத்தனகல்ல ஆகிய பிரதேச தேயிலை பரவலாக்கல் பரிசோதனை பரவலாக்கல் பிரிவுகள் அனைத்திற்கும் ஒரு தேயிலை பரிசோதனை பரவலாக்கல் உத்தியோகத்தர் இருப்பதாகவும் இந்த உத்தியோகத்தரை இது தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதாகவும் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் அறிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் தேயிலைச் செய்கை பரவி இருப்பதால் தற்போதுள்ள பயிர்ச்செய்கையாளர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ருவான்வெல்ல, வரக்காபொல, அத்தனகல்ல தேயிலை பரிசோதனை பரவலாக்கல் பிரிவினை இரண்டு பிரிவுகளாக மாற்றியமைப்பதற்கு ஏதுவான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் தலைவரால் மேலும் அறிவிக்கப்பட்டது.

ருவான்வெல்ல, வரக்காபொல மற்றும் அத்தனகல்ல ஆகிய அனைத்து பிரதேசங்களையும் ஒன்றாக நோக்குகையில் பாரியதொரு பிரதேசமாக இருப்பதால் இவ்விடயத்தை துரிதப்படுத்துமாறு கௌரவ தவிசாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டது.

### 3.14.5 கருவா பயிற்செய்கை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

அத்தனகல்ல பிரதேசத்தில் பாரியளவில் கருவா பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டாலும் அது தொடர்பாக பயிர்ச்செய்கையாளர்கள் மத்தியில் போதிய அளவு விடயம் சார்ந்த அறிவு காணப்படாததால் இயன்றளவு விரைவில் மேற்படி பயிர்ச்செய்கையாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை செயற்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

இப் பயிற்சியை நடாத்துவதற்கு வேயங்கொட கலாசார நிலையத்தில் இடவசதியை வழங்க முடியுமெனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

இயன்றளவு விரைவில் ஒரு திகதியை நிர்ணயித்துக் கொண்டு கௌரவ உறுப்பினருடன் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு அடுத்துறும் அமைச்சின் ஆலோசனை குழுக் கூட்டம் நடாத்தப்படுவதற்கு முன்னர் இப்பயிற்சியை நடாத்தி முடிக்குமாறு கௌரவ தவிசாளர் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

### 3.14.6 மஞ்சள் அறுவடையை விற்பனை செய்து கொள்ள இயலாமை

தமது மஞ்சள் அறுவடையை விற்பனை செய்து கொள்ள இயலாமை காரணமாக பயிர்ச்செய்கையாளர்கள் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக கௌரவ உறுப்பினர் அறிவித்தார்.

மஞ்சள் இறக்குமதி நிறுத்தப்பட்டிருந்தாலும் தற்போதும் சட்டவிரோதமான வழிமுறைகளில் இந்தியாவிலிருந்து மஞ்சள் இறக்குமதி இடம்பெறுவதால் இப்பிரச்சினை தோன்றியுள்ளதென கௌரவ ஜானக வக்கும்புர அவர்கள் அறிவித்தார்.

நிலைமை இவ்வாறாக இருப்பினும் சந்தையில் மஞ்சள் தூளின் விலையில் வீழ்ச்சி காணப்படவில்லை என கௌரவ சுதர்ஷன தெனிபிட்டிய அவர்கள் அறிவித்தார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் மஞ்சள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு பச்சை மஞ்சள் அறுவடைக்கு பெறுமதி சேர்க்கும் செயன்முறை தொடர்பாகவும் பயிற்சியொன்றை துரிதமாக வழங்குமாறும் கௌரவ தவிசாளரினால் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

விலை குறைந்தாலும் மஞ்சளுக்கு வெளிநாடுகளில் பெரும் கிராக்கி நிலவுவதாகவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

தங்கள் பிரதேசத்திலும் மஞ்சள் பயிர்செய்கையாளர்கள் இப்பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக கௌரவ சுதத் மஞ்சுல அவர்கள் அறிவித்தார்.

### 3.14.7 வெற்றிலை பயிர்ச்செய்கை சார்ந்த ஏற்றுமதி கிராமங்களை உருவாக்குதல்

கம்பஹா மாவட்டத்தில் பெரும்பாலும் அனைத்து வீடுகளிலும் ஏற்றுமதிப் பயிரான வெற்றிலை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதால், இப்பகுதிகளில் ஏற்றுமதி கிராமங்களை உருவாக்கி வெற்றிலை விவசாயிகளை பாதுகாக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

வெற்றிலைச் செய்கையை தாக்கும் நோயின் காரணமாக, சில காலப்பகுதிகளில் இச்செய்கை முற்றாக அழிந்து விடுவதுடன் அக் காலப்பகுதிகளில் விவசாயிகள் மிகவும் அநாதரவான நிலமைக்குட்படுவதாகவும் கௌரவ உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்களும் கருத்துத் தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட நோய் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் ஆராய்வதற்கு ஏற்றுமதி விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவரை கௌரவ உறுப்பினருடன் ஒருங்கிணைத்து இதன்பொருட்டு ஈடுபடுத்துமாறு கௌரவ

தவிசாளர் மேற்படி திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)இற்கு ஆலோசனை வழங்கினார்.

மேலும், எதிர்வரும் வருடம் வெற்றிலைச் செய்கைக்குத் தேவையான ஆதாரத் தடிகள் போன்ற தேவைப்படும் பௌதீக வளங்களை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் எதிர்பார்ப்பதாக கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

ஏற்றுமதிக் கிராமங்களை அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேசத்திலும் வெற்றிலை ஏற்றுமதிக் கிராமங்களை அமைப்பதற்கான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டாலும் தற்போது மேற்படி வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) அவர்களால் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

தமது பிரதேசத்திலுள்ள வெற்றிலை விவசாயிகளுக்கு வெற்றிலையை விற்பனை செய்துகொள்ள முடியாத சிக்கலுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக கௌரவ சுதத் மஞ்சுல தெரிவித்தார்.

#### 3.14.8 வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான காணிகளில் தென்னம் பாணி உற்பத்தி தடைபடுதல்.

அத்தனகல்லை பிரதேசத்திலுள்ள வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான காணிகளில் தென்னம் பாணி உற்பத்தி தற்போது இடம்பெறாதுள்ளதாக கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

மழை காலத்தில் மேற்படி வேலைதிட்டத்திற்கு சில இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் இன்றளவில் அச்செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.

அத்தனகல்லை பிரதேசத்தில் இச்செயற்பாடு முறையாக இடம்பெறுவதில்லையென கௌரவ உறுப்பினர் குறிப்பிடுவதால், அவ்விடயம் தொடர்பில் விஷேடமாக ஆராயுமாறு கௌரவ தவிசாளர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

#### 3.14.9 பொலிஸ் நிலையமொன்றை அமைப்பதற்காக காணியொன்றைப் பெற்றுக்கொள்ளல்

தமது பிரதேசத்தில் பொலிஸ் நிலையமொன்றை அமைப்பதற்காக வ/ப குருநாகல் பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான ஊராபொல நாகொட பிரதேசத்திலுள்ள காணித் துண்டொன்றை வழங்குமாறு பல வருடங்களாக கோரி வந்த போதிலும் அது இதுவரை நிறைவேற்றப்படவில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காணியை பரிசோதித்து துரிதமாக ஒதுக்கிக் கொடுக்குமாறு கௌரவ தவிசாளர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

### 3.15 கௌரவ சுதத் மஞ்சுல அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

#### 3.15.1 தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான புதிய அலுவலகத்திற்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல்.

கௌரவ கனக ஹேரத் அவர்களின் பிரேரணையொன்றின் பிரகாரம், தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதேச அலுவலகத்

தொகுதியொன்று தனது தேர்தல் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போதிலும், அதற்குத் தேவையான அலுவலக உபகரணங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லையென கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமை காரணமாக கொள்வனவுகளில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டதாகவும், பெறுகை நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்து மேற்படி உபகரனங்களை வழங்குவதற்கு நிதி அமைச்சிலிருந்து அனுமதி கிடைத்துள்ளதாலும் எதிர்வரும் வாரத்திற்குள் மேற்படி உபகரனங்களை வழங்க முடியுமெனவும் தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

### 3.15.2 இறப்பர் விலையில் வீழ்ச்சி

கடந்த காலப்பகுதியில் 750/- ரூபாவாக காணப்பட்ட இறப்பர் விலை தற்போது சுமார் 300/- ரூபாவாக குறைந்துள்ளதாகவும், இறப்பர் இறக்குமதியே இதற்கான முக்கிய காரணம் என்ற ஒரு கருத்து சமூகத்தில் பரவி வருவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

அதில் ஏதும் உண்மையிருப்பின், இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களை பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கௌரவ உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கைக்கு சுமார் ஒரு பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டித்தரும் சில உற்பத்தித் தொழிற்சாலைகள், முதலீட்டுச் சபைக்கு (BOI) சொந்தமான நிறுவனங்களினூடாக குறிப்பிட்ட அளவு இறப்பரை நீண்டகாலமாக இறக்குமதி செய்து வருவதாகவும் அதிலுள்ள முதலீட்டுச் சபைக்குரிய (BOI) சில நிறுவனங்கள் இலங்கையுடன் எந்தத் தொடர்பும் இல்லாத வெளிநாட்டு நிறுவனங்களென கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

மேலும், இந்த ஆண்டின் நான்காம் காலாண்டில், உலக சந்தையில் இறப்பர் உட்பட ஒவ்வொரு ஏற்றுமதிப் பயிரின் விலையும் குறைந்துள்ளதோடு தற்போது இறப்பரின் விலை 350-400 ரூபாவிற்கிடையில் உள்ளதாகவும், அடுத்த ஆண்டுக்குள் 500 ரூபாவாக அதிகரிக்கலாம் எனவும் கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இப்பிரச்சினையை விரிவாகப் பரிசீலிப்பதன் பொருட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, நிதியமைச்சு மற்றும் முதலீட்டுச் சபையின் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு அதன் மூலம் நாட்டின் இறப்பரின் தேவை, இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இறப்பரின் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்பட வேண்டிய அளவு குறித்த மாதாந்த மீளாய்வு மற்றும் எதிர்வுகூறலை மேற்கொண்டு அதற்கேற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

கடந்த காலப்பகுதியில் காணப்பட்ட அதிகளவான இறப்பர் விலைக்குக் காரணம், கொரோனா தொற்றுடன் இறப்பர் கையுறைகள் போன்ற ஆயத்தப் பொருட்களுக்கான அதிக தேவை மற்றும் உலகெங்கிலுமுள்ள இறப்பர் விநியோக வலையமைப்பின் முறிவு என்பதாக கௌரவ தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்த இறப்பரை கம்பெனி கொள்வனவு செய்துள்ளதாகவும் தற்போது இறப்பர் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கை சந்தையிலிருந்து இறப்பரை கொள்வனவு செய்வதற்கு குறித்த கம்பெனிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

மேலும் கேள்வி, வழங்கல் மற்றும் சந்தை ஆகியவற்றின் அடிப்படையில் இறப்பரின் விலை நிர்ணயிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், உலகின் ஏனைய நாடுகளில் இறப்பரின் விலை குறைந்துள்ள நிலையில் இலங்கையிலிருந்து அதிக விலைக்கு இறப்பரை கொள்வனவு செய்வதன் மூலம் குறித்த கம்பனிகள் தமது ஆயத்தப் பொருட்களை உலக சந்தையின் போட்டிக்கு ஏற்ற விலையில் விற்பனை செய்ய முடியாதது பிரச்சினையாக உள்ளதாகவும் கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

இலங்கைக்கு அநாவசியமான வகையில் இறப்பர் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்காக அது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள குழுவுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ தவிசாளரினால் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேலதிக பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

குறித்த விடயம் தற்போது ஆராயப்பட்டு வருவதாக இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பதில் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

### 3.15.3 தேனீ வளர்ப்பு கிராமங்களை உருவாக்குதல்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் நடாத்தப்பட்ட தேனீ வளர்ப்பு பற்றிய பயிற்சியைப் பெற்றுக்கொண்ட தமது பிரதேசத்திலுள்ள பல கிராமங்கள் *சௌபாக்யா* உற்பத்திக் கிராமங்களாக ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் அது இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையென கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

5000 தேனீ வளர்ப்புப் பெட்டிகளை கொள்வனவு செய்வதற்கு கடந்த காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டதாக கௌரவ ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

மேற்படி நிதி ஒதுக்கீடுகள் இருப்பின் இந்த நோக்கத்திற்கு துரிதமாக அதனைப் பயன்படுத்துமாறு கௌரவ தவிசாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

### 3.15.4 இலவங்கப்பட்டை நசுக்குவது தொடர்பான பயிற்சித்திட்டத்தைப் பெறுதல்

தமது பிரதேசத்திலுள்ள இலவங்கப்பட்டை பயிர்ச்செய்கையாளர்களுக்கு இலவங்கப்பட்டை நசுக்குவதற்கு ஏனைய பிரதேசங்களிலுள்ள இலவங்கப்பட்டை நசுக்குபவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால், தமது பிரதேச மக்களுக்கு இலவங்கப்பட்டை நசுக்குதல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியொன்றை நடாத்துமாறு கௌரவ உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

மேற்படி பயிற்சியை அடுத்த ஒரு மாதத்திற்குள் நடாத்துமாறு கௌரவ தவிசாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

### 3.15.5 பெருந்தோட்டக் கம்பனிகளால் காணிகள் விடுவிக்கப்படாமை

வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள காணியில்லாதவர்களும் மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக புதிய காணிகள் தேவைப்படும் பெருமளவிலான மக்களும் தமது பிரதேசத்தில் இருப்பதாக கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

கிராம விஸ்தரிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலக அலுவலகங்கள் மூலம் நடமாடும் சேவைகளை நடாத்தி இவர்களை இனங்கண்ட போதிலும் களனிவெளி பெருந்தோட்டக் கம்பனி மற்றும் மல்வத்தை பெருந்தோட்ட கம்பனி என்பன உரிய

முறையில் காணிகளை விடுவிப்பதில்லை என கௌரவ உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இக் காணிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரிப்பதற்குத் தேவையான சட்ட வரைவு தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக கௌரவ தவிசாளர் தெரிவித்தார்.

## 3.16 கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள்

### 3.16.1 தேனீ வளர்ப்பை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை

பண்டாரவளையில் அமைந்துள்ள இலங்கையின் ஒரேயொரு தேனீ வளர்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு தேனீ வளர்ப்பை ஆரம்பிக்கத் தேவையான தேனீ பெட்டிகள் உள்ளிட்ட உபகரணங்களை வழங்கி அதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

### 3.16.2 மலைத்தொடர்களில் வீட்டுத் தொகுதிகளை நிர்மாணித்தல்

பண்டாரவளை பிரதேசத்தில் தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான மலைகளில் ஆங்காங்கே வீட்டுத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு அதன் மூலம் சுற்றாடல் அழகிற்கு பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையினால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

### 3.16.3 மலைப்பாங்கான பகுதிகளிலுள்ள நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாத்தல்

பெருந்தோட்டக் கம்பனிகள் மலையகப் பகுதிகளிலுள்ள நீரரேந்துப் பிரதேசங்களை தங்களுக்குச் சொந்தமானவையாகக் கருதி செயற்படுவதாகவும் அப்பிரதேசங்களிலுள்ள மரங்களை வெட்டி வீழ்த்துவதாகவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

எனவே, நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை முன்வைத்தார்.

பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வைப் பிரிவினூடாக இது தொடர்பில் உரிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அறிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ தவிசாளர் குழுவிற்குப் பணித்தார்.

### 3.16.4 மலையகப் பகுதிகளில் பைனஸ் மரங்களுக்குப் பதிலாக டர்பென்டைன் மரங்களை நடுதல்

நமுனுகுல பெருந்தோட்டக் கம்பனியினால் மலையகப் பகுதிகளிலுள்ள பைனஸ் மரங்களை அகற்றி, அதற்குப் பதிலாக டர்பென்டைன் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இதனால், நீர் மூலங்களைப் பாதுகாப்பதன் பொருட்டு பைனஸ் மரங்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை பயனற்றதாக அமைந்து மிகவும் பாரதூரமான சேதம் ஏற்படுமென்றும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

எனவே, இந்த செயற்பாட்டை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து டர்பென்டைன் தாவரங்களுக்குப் பதிலாக இந்நாட்டுக்கே தனித்துவமான தாவரமொன்றைப் பயன்படுத்துமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

டர்பென்டைன் மரக்கன்றுகள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்படுவதால், இது தொடர்பில் அவர்களையும் அறிவுறுத்துமாறு கௌரவ உறுப்பினர் மேலதிகமாகவும் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தகவல் தெரிவிக்குமாறு கௌரவ தவிசாளர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

### 3.16.5 மலையகப் பிரதேசத்தில் தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகளின் எல்லைகளை நிர்ணயித்தல்.

மலையகப் பகுதியில் தற்போதுள்ள வாவிகளை தோட்டக் கம்பனிகள் சொந்தமாக்கிக்கொண்டுள்ள போதிலும் சட்டரீதியாக அவர்களுக்கு அவற்றுக்கான உரிமை இல்லை என்பதோடு மேற்படி வாவிகளைச் சார்ந்து எந்தவொரு பணியையும் மேற்கொள்வதற்கு இந்தக் கம்பனிகள் அனுமதிப்பதில்லையெனவும் கௌரவ உறுப்பினர் தெரிவித்தார்.

எனவே, தோட்டக் கம்பனிகளுக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்டுள்ள காணிகளை அவர்களுக்கு மீள் அளவீடு செய்து அல்லது ஒதுக்கீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு கௌரவ உறுப்பினர் கோரிக்கை விடுத்தார்.

கடந்த காலங்களில் காடாஸ்ட்ரல் அளவீடுகள் மூலம் இவ்வெல்லைகள் வரையப்பட்ட போதிலும், அப்போது தீர்க்கப்படாத பிரச்சினைக்குரிய எல்லைகள் அச்சந்தர்ப்பத்தில் வரையப்படாமல் இருந்ததால், குறித்த காடாஸ்ட்ரல் அளவீடுகளின் மூலம் இது குறித்து துல்லியமான புரிதலைப் பெற முடியாதென தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் தோட்டங்கள்(துண்டிடுதல் கட்டுப்பாட்டு) சபையின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

### 3.16.6 தெமோதர தொழில்நுட்பப் பூங்காவை நிர்மாணிப்பதற்காக நிலத்தைப் பெற்றுக்கொள்ளல்.

தெமோதர தொழிநுட்ப பூங்காவை அமைப்பதற்காக நமுனுகுல பெருந்தோட்டக் கம்பெனியின் தெமோதர தொழிற்சாலைக்குச் சொந்தமான கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்த போதிலும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என கௌரவ உறுப்பினர் தெரிவித்ததோடு அக்கட்டிடத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்தார்.

**4.** குழு பி.ப 01.15 மணிக்கு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.